www.padippakam.com

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

පුදිය පූමි

Puthiya Poomi

சுற்று 10 | டிசம்பர் 2003 | பக்கம் 12 | விலை 12/- | சுழற்சி 64

# தேசிய அரசாங்கம் ஆபத்தானது!

நசிய அரசாங்கம் அல்லது நல்லிணக்க ரசு அமைப்பது பற்றியும் அதில் ஐக்கிய தசியக் கட்சி உட்பட பிரதான ட்சிகளை இணைப்பது பற்றியும் னாதிபதி அழுத்தி எடுத்துரைத்து ருகிறார். அத்தகைய தேசிய ரசாங்கத்தின் மூலம் நாடு எதிர் நாக்கி நிற்கும் சகல பிரச்சினை ளுக்கும் திட்டம் வகுத்து தீர்வு காண டியும் என்ற நம்பிக்கையையும் தரிவித்து வருகிறார். ஆனால் கடந்த ால் நூற்றாண்டு காலமாக யுத்தமாகி ாட்டையும் மக்களையும் பொருளா ாரத்தையும் அழிவுக்குள்ளாக்கி ந்துள்ள தேசிய இனப்பிரச்சினைக்குத் ர்வு காண்பது பற்றி ஜனாதிபதி எவ்வித க்கியத்துவமும் வழங்கவில்லை.



வந்து நிற்கின்றன. அதிகாரத்தின் உச்சத்திலும் அவற்றின் மூலம் அரசு யந்திரத்தின் மீதான ஆதிக்கத்தைக் கொண்டிருப்பது என்பதிலுமே போட்டியே அன்றி உள்ளடக்கத்தில் வேறுபாடு கிடையாது. ஏறத்தாள பரம்பரை ஆட்சி அதிகாரக் குடும்பப் போட்டி சார்ந்ததாகவே இருந்து வருகிறது. ஆனால் ஜனநாயகம் அரசியலமைப்பு, சுதந்திர தேர்தல் என்பன அவற்றுக்கான வெளிக் கவசங்களாகவே இருந்து வருகின்றன.

இந்நிலையில் ஒரு தேசிய அரசாங்கம் அமைந்தால் அது பல தளங்களிலும் மக்கள் விரோதமானதாகவே முன்னெடுக்கப்படும். இன்று பிரதான



தின் கீழ் நாட்டின் இறமைக்கு ஆபத்து எனக்கூறி ஒரு கொடிய யுத்தத்தை மீளவும் தொடக்குவதற்குரிய சந்தர்ப்பமே உருவாகிவிடும்.

அடுத்து மக்களின் அபிலாஷைகள் புறக்கணிக்கப்படும். தொழிலாளர் உரிமைகள் நசுக்கப்படும். தொழிங்சங்க ஜனநாயக உரிமைகள் கால்களில் போட்டு மிதிக்கப்படும். சுதந்திரம் மனித உரிமைகள் யாவும் இல்லா

தொழிக்கப்படும். தனித்தனியாக ஆட்சி நடாத்திய இரு பிரதான கட்சிகளின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற ஜனநாயக தொழிற்சங்க மனித உரிமை மீறல்கள் மேலும் அத்தகைய தேசிய அரசில் உச்சக்கட்டத்தை நோக்கிய தாகவே இருக்கும்.

அத்துடன் இன்று ஏகாதிபத்திய சக்திகளுக்கும் பிராந்திய மேலாதிக்க வாதிகளுக்கும் இத்தகைய தேசிய அரசு முற்றிலும் எதிர்ப்பின்றி அடிபணிந்து கொள்ள நேரிடும். உலகமயமாதலின் கீழ் மேலும் மறு கொலனியாக்கம் விரைவு படுத்தப்பட்டு நாடு நவ கொலனியாவது விரைவில் நடந்தேறி விடும். தட்டிக் கேட்போர் யாவரும் உலகப் பயங்கரவாதிகளின் பட்டியலில் சேர்க்கப்படுவார்கள். ஃபாசிசம் தலைவரித்தாடும்.

இத்தகைய தேசிய அரசாங்கத்தின் கீழ் இடதுசாரி ஜனநாயக தேசிய இனவிடுதலை சக்திகள் மிக மோசமான அடக்கு முறைகளுக்கு ஆளாக்கப்படு வார்கள். ஒட்டு மொத்தமான இலங்கை மக்கள் அனைவரும் வெவ்வேறு தளங்களிலும்

12ம் பக்கம் பார்க்க..

## தேசிய இனப்பிரச்சினைக்கு உறுதியான அரசியல் தீர்வே இன்று அவசியமானது !

டந்த இருபது மாதகால புரிந்துணர்வு த்த நிறுத்தம் பேச்சுவார்த்தைச் ழலைக் குழப்புவதில் ஜனாதிபதி தனது றைவேற்று அதிகாரக் கைவரிசை யக் காட்டிய பின்பே தேசிய ரசாங்கம் பற்றிய யோசனையை ரத்துக் கூறி வருகிறார். மூன்று க்கிய அமைச்சுக்களை தனது ரங்களுக்கு எடுத்து பாராளுமன்ற தை இருவாரங்கள் இடைநிறுத்தி ணில் அரசாங்கத்திற்கு அச்சுறுத்தல் விட்டுள்ள சூழலிலேயே ஜனாதிபதி தேசிய அரசாங்கம் பற்றிய ஆலோசனை யை முன்வைத்துள்ளார்.

தேசிய அரசாங்கம் என்பது அமையுமா னால் அது சாதகமானதாக இருக்க மாட்டாது. ஏனெனில் இலங்கையின் இரண்டு பெரும் கட்சிகளின் பொருளாதார அரசியல் பண்பாட்டுத் துறைகளிலான கொள்கைகள் இன்று ஏறத்தாள ஒரே நேர்க்கோட்டிலேயே முரண்பாடாகவும் உடன் தீர்வு காண வேண்டியதாகவும் உள்ள தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு வழங்கப்படுவதை தேசிய அரசாங்கம் நிறைவேற்ற மாட்டாது. காரணம் பேரினவாத நிலைப்பாடு அங்கே மேலும் இறுக்கமடைந்ததாகவே இருக்கும். பேரினவாதிகளுக்கு பாராளுமன்ற ஆதரவு தமிழ் முஸ்லீம் மக்களின் சார்பில் தேவைப்படாத ஒன்றாகிவிடும். அதேவேளை இத்தேசிய அரசாங்கத்

# கிழக்கு மாகாண கொலைகளை செய்வோர் யார்?

ிண்ணியாவில் நடந்ததென்ன? கிழக்கு ாகாண தொடர் சம்பவங்களில் ின்னொன்றாக அதனைப் பார்க்கா ல் இருந்து விடமுடியுமா? கிழக்கு ாகாணத்தில் முஸ்லிம்கள் தாக்கப் டுவது கொல்லப்படுவது எல்லாம் தமிழ் க்களுக்கு எதிராகவும் சமாதான யற்சிகளுக்கு எதிராகவுமே பிரசாரம் செய்யப்படுவதுண்டு. சில சம்பவங் ளுக்கு சூத்திரதாரிகள் யாரென்று ண்டுபிடிக்கப்பட்டாலும் அதனை மழுப்பி மிழ் மக்களுக்கு எதிராகவே பிரசாரம் செய்யப்படுவதுண்டு.

ம்பவங்களுக்கு சூத்திரதாரிகள் ாரென்று அரசாங்கமும், புலிகள் ியக்கமும் கண்டுபிடிக்க வேண்டு ுமன்று கூறிவிட்டு சில முஸ்லிம் தலைவர்கள் மிகவும் ஆவேசமாக பேசி நிலைமையை சமாளித்து விடுகிறார்கள். கிண்ணியாவில் நடை பெற்ற சம்பவங்களை அடுத்து முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதம் ஏந்துவது தவிர்க் கப்பட முடியாது என்று சில முஸ்லிம் தலைவர்கள் பேசி வருகின்றனர்.

இவ்வாறான பின்னணியில் முஸ்லிம் மக்கள் மத்தியில் ஆயுதம் ஏந்திய குழுவினர் இருப்பதாக அரசாங்கம் சந்தேகங்களை கிளப்பியுள்ளது. சில முஸ்லிம் வீடுகளிலிருந்து ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. முச்சக்கர வண்டி யில் ஆயுதங்கள் எடுத்துச் செல்லப்பட்ட போது முஸ்லிம் இளைஞர் மூவரை பொலிசார் கைதுசெய்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆயுதம் ஏந்துவதை ஒருவர் அவருக்கு இருக்கும் உரிமை என்று முடிவு செய்துவிட்டால் சட்ட திட்டங்களால் அதனை மறுதலிக்க முடியாது. அந்த உரிமையுடன், கடமையும் பொறுப்பும் இருப்பதை ஏந்துபவர்கள் தட்டிக் கழித்தால் அழிவுகளே மிஞ்சும்.

தொடர்ச்சி 12ம் பக்கம்.

# மக்களுக்கு உதவாத வரவு செலவுத் திட்டம்

- பெறுமதி சேர்க்கப்பட்ட வரியான (VAT) வரி அத்தியாவசியப் பொருட்களான மா, சீனி, வெங்காயம், பருப்பு, கிழங்கு, வீட்டு எரிவாயு, மருந்து வகைகள் மற்றும் அன்றாட அத்தியாவசியப் பொருட்களுக்கு ஏற்கனவே இருந்து வந்த 10 வீதத்தை 15 வீதத்தால் உயர்த்தப்பட்டுள்ளது.
- அதே வேளை ஆடம்பரப் பொருட்களுக்கு இருந்து வந்த 20 வீத வற்வரி 15 வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளன. இதனால் உயர் மத்தியதர மேட்டுக் குடியினரே பயன்பெறுகின்றனர்.
- சென்ற வருடம், விவசாய உரத்தின் விலை 525 ரூபாவாக உயர்த்தப்பட்டது. இப்போது 150 ரூபா மட்டுமே மானியமாக வழங்கப்பட உள்ளது.
- அரசாங்க ஊழியர்களுக்கு எதுவித பயனுமற்ற வெறும் 1250 ரூபா மட்டுமே சம்பள உயர்வு.
- ஓய்வூதியம் பெறுவோர் 10 வீத அதிகரிப்பை மட்டும் பெறுகின்றனர். ரூபா 5000 பெறுவோர் ஒரு நாளைக்கு 16 ரூபாவையும் 10.000 ரூபா பெறுவோர் ஒரு நாளைக்கு 33 ரூபா சம்பள உயர்வையுமே பெறமுடியும்.
- தோட்டத் தொழிலாளர்கள் உள்ளிட்ட தனியார் துறையினர் கூட்டுறவு ஊழியர்கள் 60 லட்சம் பேருக்கு எவ்வித சம்பள உயர்வும் வழங்கப்படவில்லை.
- ஊழியர் சேமலாப நிதியத்தில் 450 கோடி ரூபா இருப்பு இருப்பதாகக் கூறி அதில் கைவைக்க அரசாங்கம் எத்தனிப்பதை நிதி அமைச்சர் மறைமுகமாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.
- அதே வேளை ஒய்வூதியத்தில் இருக்கும் இருப்புத் தொகையை வெளியிடவில்லை. அவ்வாறு வெளியிடாமைக்கு காரணம் அத்தொகையில் இருந்து மேலும் அதிகரித்த தொகையை ஒய்வூதியக் காரருக்கு வழங்க வேண்டி வந்துவிடும் என்பதை மறைப்பதற்கேயாகும். இது ஓய்வூதியக் காரரை அப்பட்டமாக ஏமாற்றிய செயலேயாகும்.
- நாட்டின் அரச நிறுவனங்களை விற்றதன் மூலம் ஆயிரம் கோடி ரூபா கிடைத்ததாக நிதி அமைச்சர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். அதன் அர்த்தம் எஞ்சியுள்ள அரச கூட்டுதாபன நிறுவனங்களை அந்நியருக்கு விற்றுக் கொள்வதற்கேயாகும். அடிமாட்டு விலைக்கு விற்றதன் மூலம் ஆயிரம் கோடி ரூபா வந்ததென்றால் அதற்கான தரகுப் பணம் அமைச்சர்மார் தொடக்கம் அதிகாரிகள் வரை பெற்றது எத்தனை கோடிகளோ தெரியாது. உண்மை உரியவர்களுக்கே வெளிச்சம்.
- இலங்கையில் சுமார் 32.000 ஆயிரம் வரையறுக்கப்பட்ட கம்பனிகள் உள்ளதாகவும் அவற்றுள் 9.000 கம்பனிகளே 2001-2002 ஆண்டிற்கான கணக்கு அறிக்கையைச் சமர்ப்பித்ததாகவும் விபரம் வெளியிடப்பட்டுள்ளது. அவற்றில் 2850 கம்பனிகள் மட்டுமே வரியைச் செலுத்தியதாகவும் கூறப்பட்டுள்ளது.
- இந்த வரவு செலவுத்திட்டத்தை சர்வதேச நாணய நிதியம் சரியான திசையில் செல்லும் வரவு செலவுத்திட்டம் எனப் புகழ் உரை செய்துள்ளது.
- வடக்கு கிழக்குப் புனரமைப்புக்கு 400 கோடி ரூபா பிச்சைப்பணம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. பாதுகாப்பிற்கு 5 ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்தகைய வரவு செலவுத்திட்டத்தை தமிழர் தேசியக் கூட்டமைப்பும் இலங்கை தொழிலாளர் காங்கிரசும் வரவேற்றுள்ளனர். தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அ. விநாயகமூர்த்தி அருமையான வரவு செலவுத்திட்டம் என அறிக்கையும் விட்டுள்ளார். இங்கே தான் இனம் மொழியைவிட வர்க்க பாசம் உறவாடி நிற்பதைக் காணலாம்.

# 35 ஆயிரம் குடும்பங்கள் வெளியேற்றப்படுவர் தடுத்து நிறுத்த உறுதியான நடவடிக்கை வேண்டும்

தாட்டங்களில் வேலை செய்யாமல் இருக்கும் தொழிலாளர்களையும் அவர்களது குடும்பங்களையும் வெளியேற்ற தோட்டக்கம்பெனிகளும், அரசாங்கத்தின் பேர்க் (PERC) நிறுவனமும் எடுத்துவரும் நடவடிக் கைகள் தோட்டத் தொழிலாளர்கள் த்தியில் அமைதியீனத்தை ஏற்படுத்தி ுள்ளது. அவ்வெளியேற்றத்தை தடுத்து நிறுத்துவதற்கு உரிய நிர்வாக ரீதியான ீர்வுகளை எடுப்பதற்கு பதிலாக தொழிற்சங்கத் தலைவர்கள் வீராவேச ான அறிக்கைகளை மட்டும் விட்டு வருகின்றனர்.

தோட்டங்களில் வேலைசெய்யாது தோட்டக்குடியிருப்புகளில் இருக்கும் முன்னாள் தொழிலாளர்களையும் அவர்களின் குடும்பங்களையும் வெளி யேறும்படி அறிவித்தல்கள் கொடுக்கப்பட் டுள்ளன. வெளியேறாவிட்டால் சட்டரீதியாக அவர்கள் வெளியேற்றப்படு வார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. கண்டி அட்டன் பகுதிகளில் இவ்வாறான வெளியேற்றல் அறிவித்தல் கள் விடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு வெளியேற்றப் படவிருக்கும் எண்ணிக்கை 35 ஆயிரம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. அவ்வெளி யேற்றத்தை தடுத்து நிறுத்த தோட்டத் தொழிலாளர்களுக்கோ தொழிற்சங்கங் களுக்கோ திட்டவட்டமான சட்ட ரீதியான பாதுகாப்புகள் எதுவுமில்லை.

சில தொழிற்சங்கத் தலைவர்கள் வெளியேற்ற அறிவித்தல்கள் எதுவும் கொடுக்கப்படவில்லை என்று மறுத்தனர். அறிவித்தல்கள் பகிரங்கப் படுத்தப்பட்டவுடன் அவர்கள் மௌனமாகி விட்டனர்.

தொடர்ச்சி 11ம் பக்கம்.

படிப்பகம்

www.padippakam.com



# புத்தூர் இராமநாதன் காணி பிரச்சினையில் குடியெழுப்பி

## துரத்தப்பட்ட மக்கள் 27 வருடங்களின் பின் காணி பெற்றனர்.

வடபுலத்தில் நிலவுடமை ஆதிக்கத்தின் வலுவான அடையாளச் சின்னமாக விளங்கும் கிராமங்களில் ஒன்று புத்தூராகும். ஆண்ட பரம்பரையினரின் நில ஆதிக்கமும் சாதிய தீண்டாமைக் கொடுமைகளும் நிறைந்து காணப்பட்ட இப்புத்தூர் பகுதியில் 27 வருடங்களுக்கு முன்பு இடம் பெற்ற நிலப் போராட்டம் தான் அண்மையில் முடிவுக்கு வந்தது. அன்று பொலீஸ் நீதி மன்ற உதவியுடன் குடியெழுப்பித் துரத்தப்பட்ட நிலமற்ற கூலி விவசாயிகளான தாழ்த்தப்பட்ட மக்கள் தொடர்ச்சியாகப் போராடி நின்றதன் காரணமாக மீண்டும் தாம் குடியிருந்த காணிகளைப் பெற்றுக் கொண்டனர்.

புத்தூர் மேற்கில் சுன்னாகம் பிரதான வீதியோரமாக நூறு வருடங்களுக்கு மேல் தலைமுறை தலைமுறையாக 104 பரப்பு காணியில் வாழ்ந்து வந்தவர்கள் கூலி விவசாயிகளான 16 குடும்பங்களைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள். அந்நிலத்திற்குச் சொந்தக்காரர் எனக் கூறி நின்ற மஞுவராயர் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் மேற்படி 104 பரப்புக் காணியைக் குடியிருந்த மக்களுக்கு ஒரு நியாயமான விலையில் விற்க மறுத்து இராமநாதன் சின்னத்தம்பி ஆகிய பணக்கார சகோதரர்களுக்கு விற்றுக் கொண்டார். அந்தப் பணக் காரர்கள் எவ்வித மனிதாபிமானமும் அற்ற நிலையில் நீதி மன்றத்தீர்ப்பு எனக் கூறி பொலீஸ் உதவியோடு குருவிக் கூடுகளைப் பிய்த்தெறிவது போன்று இப் 16 குடும்பங்களின் வீடுகளைப் பிடுங்கி எறிந்து மக்களை ஏதிலிகளாகித் துரத்தினர்.

இதனால் அப்பிரதேசத்தில் மக்கள் கொந்தளித்தனர். நிலமும் பணமும் உள்ள சிலரால் சாதாரண நிலமற்ற கூலி விவசாய தாழ்த்தப்பட்ட மக்கள் குடியெழுப்பி கலைக்கப்படுவதை நியாயமான எவரும் ஏற்றுக் கொள்ள வில்லை. பல்வேறு அரசியல் சமூக இயக்கங்கள் கண்டித்தன. அப்பகுதி மக்களுக்கு ஆதரவு வழங்கின. அவ்வேளை புதிய ஜனநாயக கட்சி இவ் அநீதிக்கு எதிராகக் குரல் கொடுத்து நின்றது. குடியிருந்த மக்களுக்கு நியாயமான குறைந்த விலையில் மீண்டும் அக்காணிகள் வழங்கப்பட வேண்டும் என்ற வலுவான கோரிக்கையை முன்வைத்து நின்றது. அதன் காரணமாக பல தோழர்கள் பொலீஸ் தாக்குதல்களுக்கும் தடுத்து வைத்தலுக்கும் உள்ளாகினர்.

குடியிருந்த மக்களின் வீடுகள் பொலீஸ் உதவியோடு துப்பாக்கி முறையில் பிடுங்கி எறியப்பட்டன. அதன் முன்னணியில் எதிர்த்து நின்ற பலர் பொலீஸ் தாக்குதலுக்கு ஆளாகினர். பரமு என்பவர் படுகாயம்பட்டார். பல இளைஞர்கள் பொலீஸ் நிலையகத்தில் தாக்குதல் பெற்றனர். இத்தனையும் தமிழ் மண்ணிலே தமிழர்கள் மீது தமிழர்களால் தான் நடாத்தப்பட்டது. தமிழ்த் தேசிய வாத இளைஞர் இயக்கங்களால் அன்றைய அவலத்தை தடுத்து நிறுத்த முடியவில்லை. ஏன் என்பது இன்றும் விடைகாண வேண்டிய அரசியல் கேள்வியாக எஞ்சி நிற்கிறது.

அன்று வடபுலம் எங்கும் புத்தூர் இராமநாதன் காணிப்பிரச்சினை என்பது பிரபல்யம் பெற்று நின்ற ஒரு பிரச்சினையாகும். தமது வாழ்வுரிமையும் நிலவுரிமையையும் இழந்த 16 குடும்பங்கள் பல்வேறு நிலைகளிலும் மீளவும் அக்காணிகளைப் பெறும் போராட்டத்தை தொடர்ந்து நடாத்தியே வந்தனர். பணமும் நிலமும் ஆதிக்க மனப்பான்மையும் எதனையும் தீர்மானிப்பதில்லை. இறுதியில் நீதி நியாயமும் அதற்கான தொடர்ச்சியான போராட்டமுமே வெற்றி பெறும். அந்த வகையில் பதினாறு குடும்பங்கள் சார்பாக நீதிமன்றத்தில் வழக்கு இடம்பெற்றது. காணிச் சொந்தக்காரர் வேறு வழியின்றி குடியிருந்த 16 குடும்பங்களுக்கும் அதே காணியைத் திருப்பிக் கொடுப்பதற்கு இணக்கம் தெரிவிக்க வேண்டியதாயிற்று. அன்று வீடு பிடுங்கி எறியப்பட்டமைக்கு எதிராகப் போராடியவர்களில் ஒருவரான மு.பரமநாதன் இக்காணியை மீளவும் அம் மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு தொடர்ச்சியாக விட்டுக் கொடுக்காது இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அவரும் பாதிக்கப் பட்ட 16 குடும்பங்களில் ஒருவராவார்.

முன்பு எந்தெந்த காணிகளில் மக்கள் குடியிருந்தனரோ அதே காணிகளில் 27 வருடங்களுக்குப் பின்பு இப்போது குடியிருக்க காணியைப் பெற்றிருக்கிறார்கள். மக்களின் ஐக்கியமும் விட்டுக்கொடுக்காத போராட்டமுமே நிலமற்ற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விமோசனத்தைப் பெற்றுத்தர வல்லது என்ற உண்மை 27 வருடங்களின் பின்பு நிரூபணமாகி நிற்கின்றது.

புத்தூர் பிரதேசத்தில் இது போன்ற காணிப் பிரச்சினைகள் பல இருந்து வருகின்றன. ஆண்டாண்டு காலமாக நிலமற்ற தாழ்த்தப்பட்ட மக்களை தங்களது நிலங்களில் (உண்மையில் இந்நிலங்கள் கள்ள உறுதிகளால் - தோம்புகளால் எழுதப்பட்டு மக்கள் ஏமாற்றப்பட்டு சட்டபூர்வமாக்கப்பட்டவைகளே அன்றி எந்நிலச் சொந்தக்காரனும் பிறக்கும் போது நிலத்துடன் பிறந்ததில்லை என்பது நோக்க வேண்டியதாகும்). இருத்தி அவர்களின் உழைப்பை உறுஞ்சி ஊளைச் சத்துடன் வளர்ந்தவர்கள் இன்று அதே நிலங்களைப் பெரும் தொகைப் பணத்திற்கு விற்று கொள்ள முற்படுகின்றனர். இவ்விடத்திலே புதிய ஜனநாயக கட்சி தெளிவுடன் நிலமற்ற தாழ்த்தப்பட்ட கூலி விவசாயிகளின் பக்கம் நின்று குடியிருந்த மக்களுக்கே நிலம்! விவசாயம் செய்த விவசாயிகளுக்கே காணி! என்பதை முன்னிறுத்திப் போராடி வருகின்றமை குறிப்பிடத்தக்க தாகும்.

**- வி. கரன் -**

# வவுனியாவில் தலைமைத்துவ தொழிற் பயிற்சி இல்லை! ஏன்?

இவ்வருட ஆரம்பத்தில் புதிய அரசாங்கத்தின் விசேட திட்டங்களில் ஒன்றாக கொள்கை திட்டமிடல் அமைச்சு, க.பொ.த.ப (உ/த) சித்தியடைந்த இளைஞர் யுவதிகளுக்கு தலைமைத்துவப் பயிற்சியும் தொழிற் பயிற்சியும் வழங்க விண்ணப்பங்களைக் கோரியிருந்தது.

வவுனியா மாவட்டத்தில் இருந்தும் ஆயிரக்கணக்கான இளைஞர்கள், யுவதிகள் விண்ணப்பம் செய்திருந்தனர். இன்று வரை இவர்களுக்குப் பயிற்சி வழங்க நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட வில்லை.

இலங்கை மத்திய வங்கியின் மேல்மாடியில் செயற்படும் இந்த அமைச்சின் செயலாளர்களில் ஒருவரிடம் இது பற்றி விசாரித்த போது வவுனியா மாவட்டத்தில் ஒரு பொருத்தமான இடமும் கட்டிடமும் தங்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை என்று கூறினார்.

அப்படியாயின் இந்த அமைச்சுக்கு காணி அல்லது கட்டிடத்தை வழங்க வேண்டிய உயர் அரசாங்க அதிகாரி என்ன செய்து கொண்டிருக்கிறார் என இளைஞர். யுவதிகள் கேள்வி எழுப்புகின்றனர்.

தென்பகுதியில் இப்பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக செயற்பட்டு வருகிறது. இளைஞர் யுவதிகள் பல புதிய தொழில்களைக் கற்று ஓரளவுக்கு வேலை வாய்ப்புப் பெற சந்தர்ப்பம் கிடைக்கிறது.

க.பொ.த. (உ/த) வகுப்பு சித்தியடைந்து வேலை வாய்ப்பை எதிர் பார்த்திருக்கும் பல்லாயிரக்கணக்கான இளைஞர் யுவதிகளுக்கு வாழ்க்கையில் விரக்தி ஏற்படாமல் விடுமா?

நெலுக்குளம் பகுதியில் அமைக்கப்பட்ட தொழில் நுட்ப கல்லூரி வளவில் இப்பயிற்சி நெறியை ஆரம்பிக்க முடியாதா? பூவரசங்குளம் மகாவித்தியாலயத்தில் பழைய காணியில் உள்ள கட்டிடங்களில் இப்பயிற்சி நெறியை ஆரம்பிக்க முடியாதா?

பல நெற்களஞ்சியங்கள் வவுனியாவில் கவனிப்பார் அற்றுக்கிடக்கின்றன. அவற்றைத் துப்புரவு செய்து வசதிகளை ஏற்படுத்த முடியாதா? இளந்தலைமுறையினருக்கு வழிகாட்டி உதவ வவுனியா அரச அதிபர் முன்வர வேண்டுமென படித்த இளைஞர் யுவதிகள் எதிர்பார்க்கின்றனர். ஆனால் அதற்குரிய பலாபலன் தான் கிடைப்பதாக இல்லை. அரசாங்க அதிபரோ அன்றி சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளோ இவ்விடயத்தில் மௌனம் காப்பதன் மர்மம் தான் என்ன?

இதேவேளை வேப்பங்குளத்தில் அமைந்துள்ள அரச நெற்களஞ்சியம் ஒன்று அண்மையில் தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு தனியார் துறைக்கு தாரை வார்க்கப்படும் இடங்களும் கட்டிடங்களும் ஏன் இளம் தலைமுறையினரின் எதிர்காலத்திற்குப் பயன்படுத்தப் படக்கூடாது.

வவுனியா - எஸ். குமரன் -

# வடபுலத்தில் பாரிய விளம்பரக் கட்டவுட்கள்!

வடபுலத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும் தற்போது ஓர் கலாச்சாரம் முளைவிட்டு வளர ஆரம்பித்துள்ளது. அதுதான் விளம்பர 'கட்டவுட்' கலாச்சாரம்.

சமாதானப் பேச்சுக்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி, அதன் வாயிலாக ஏ-9 பாதை மக்கள் போக்குவரத்திற்கென திறந்து விடப்பட்டது. இதன் மூலம் பல சந்தை வாய்ப்புகள் தோன்றின. இதன் வாயிலாக முதலாளிய, பெருமுதலாளிய, பல்தேசியக் கம்பனிகள் தமது உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கு வடபுலத்தை போட்டி போட்டுக் கொண்டு ஆக்கிரமித்தன. தொடர்ந்தும் ஆக்கிரமித்து வருகின்றன.

இதற்காக, இக்கம்பனிகள் யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சியிலும் பாரிய விளம்பரக் 'கட்டவுட்' களை வைத்துள்ளன. இதனை ஏ-9 வீதியால் பயணிப்பவர்கள் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. விளம்பரம் என்பது பொருட்களின் விற்பனைக்குத் தேவைதானே என்று கருதுபவர்கள் உண்டு. அதற்காக இரு தசாப்த காலமாக யுத்தத்திற்குள் மூழ்கி தற்போது மீள் நிர்மாணம் பெறுவதற்கு வடபுலத்திற்கு இது தேவைதானா?

யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சியிலும் புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள் கட்டுமான வேலைகள் எவ்வளவோ இருக்கின்றன. இப்பணிகளுக்கு இக்கம்பனிகள் உதவுமா என்றால் அதுவும் தமது சுரண்டலை அடிப்படையாகக் கொண்டதாகவே காணப்படும்.

இப்பாரிய கம்பனிகளில் பல்வேறு நாட்டுக் கம்பனிகளும் இடம் பெறுகின்றன. இவற்றில் கொக்கா கோலா, பெப்சி கோலா, சிங்கர், டயலொக் ஜீ.எஸ்.எம், மிற்சுபி, டண்டெக்ஸ், மோட்டோறோலோ, அற்லஸ் சீமெந்து முதலான பல்வேறு கம்பனிகள் முதன்மையானவை. இவை தமது நச்சுப் பொருட்களையும், ஆடம்பரப் பொருட்களையும் உலக நாடுகளிலெல்லாம் சந்தைப் படுத்தி சுரண்டியது போதாதென்று, தற்போது வடபுலத்திலும் தமது சுரண்டல் வலையை விரித்து நிற்கின்றன.

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளில் பல்வேறு உலக நாடுகள் தமது கருசணையைக் காட்டுகின்றன என மக்கள் நம்புகின்றனர். ஆனால், இவையெல்லாம் தங்கள் நாட்டின் சுயநலத்திற்கும், தமது நாட்டுக் கம்பனிகளின் பொருட்களுக்கான சந்தை வாய்ப்பினை இலகுவில் வடபுலத்தில் பெற்றுவிட வேண்டும் மென்பதற்காகவுமே செயற்படுகின்றன என்பதே உண்மை நிலையாகும்.

இதனை மக்கள் நன்குணர்ந்து இத்தகைய கம்பனிகளின் உற்பத்திகளைப் புறக்கணிக்க வேண்டும். அதே வேளை உள்ளூர் உற்பத்திப் பொருட்களை பயன்படுத்துவதோடு, உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவித்து செயற்படுவது அவசியம். இப்பாரிய கம்பனிகளிலிருந்து சுரண்டலிருந்தும் வட புலத்தைக் காப்பாற்ற வேண்டும்.

- நவாஸ் -

# நாலு நடக்கும் உலகிலே நற்குணண்

## சக்தி வழங்கிய 'பேய்'ஸ்

பாய்ஸ் என்கிற பைத்தியக்காரத்தனத்தை வைத்துப் பணம் பண்ணுகிற தென்னிந் சினிமா-பொழுதுபோக்கு வணிக நிறுவனங்கள் தமிழகத்துத் தொலைக்காட்சிக சினிமா சார்ந்த பண்பாட்டுச் சீரழிவிலேயே பணம் பண்ணுகின்றன.

இதில் உள்ள கழிவை எல்லாம் அள்ளி வழங்கி எங்களூர் "பாய்ஸை" எல் "பேய்ஸ்" ஆக்குவதில் மஹாராஜா நிறுவனத்தின் சக்தி தொலைக்கா நிறுவனத்துக்கு ஒரு பெரும் பங்குண்டு. அவர்கள் தமிழ்ப் பண்பாடு பற்றியும் நிகழ் நடத்துவார்கள். மட்டரகமான வன்முறை ஆபாசப்படமும் காண்பிப்பார்கள். அ தொழில்.

தீபாவளி நாளன்று 8.30 முதல் 9.00 வரை "பாய்ஸ்" பொழுதுபோக்கு நிகழ்ச்சிக் காத்திருந்த எல்லாருக்கும் பட்டை நாமம் சாற்றப்பட்டது. அரைமணி நேர நிகழ்ச்சி ஐந்தாறு கம்பனிகளின் விளம்பரங்கள் திரும்பத் திரும்பக் காண்பிக்கப்பட்டு முக்க பங்கு நேரத்தை விழுங்கிவிட்டன. நிகழ்ச்சிக்குத் திட்டமிட முன்பே எவ்வ நேரத்துக்கு விளம்பரம் என்ற சில கட்டுப்பாடுகள் இல்லாமலா சக்தி நிகழ் நடத்தப்பட்டது?

"பாய்ஸ்" ரசிகர்கள் எத்தகைய முட்டாள்கள் என்று சக்தி கருதுகிறது என் மட்டும் இதன் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

## அரசியல் ஊமைகள்

பலருக்கு சந்திரிகா மீதான நம்பிக்கையீனம் ரணில் மீதான நம்பிக்கையாகிற ஆனால் ரணிலை எவ்வளவு தூரம் நம்ப முடியும்? சந்திரிகாவின் வலையில் இந்தி விழாமல் இருப்பதைத் தடுக்கத்தான் அவசர அவசரமாக ஓடிப்போய் இந்தியாவுட பாதுகாப்பு உடன்படிக்கை செய்தாரா? ரணில் யாரை யாரிடமிருந்து காப்பா இந்தப் பாதுகாப்பு உடன்படிக்கை?

அமெரிக்காவுடனும் இந்தியாவுடனும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மூலம் யாருடை நலன்கள் பாதுகாக்கப்படப் போகின்றன? நமது தமிழ்த்தலைவர்கள் எனப்படுவே ஏன் வாய் திறக்க மறுக்கிறார்கள்?

## கண்டனமும் காணதனவும்

அமெரிக்காவின் ஈராக் போரை ஆதரித்து ரணில் அமெரிக்காவிற் பேசியன எதிர்த்துப் பாராளுமன்றத்தில் பிரேரணை கொண்டு வரப்போவதாகப் பேசப்பட்ட ஆனால் அது மேல்மாகாண சபையில் கொண்டுவரப்பட்டது. மேல்மாகாண சபையி கொண்டு வருவது ஏதாவது பிரதேசசபையில் கொண்டு வருவதைவிட பெரியவிடயமல்ல. ஏன் எங்கள் ஏகாதிபத்திய விரோதிகளும் ஈராக்கின் நண்பர்களு பாராளுமன்றத்தில் இப் பிரேரணையைக் கொண்டுவரப் பின்னின்றார்க தோல்வியடையும் என்பது காரணமென்றால், , எதிர்க்கட்சிகள் எந்தப் பிரேரணை யையும் கொண்டுவருவது இயலாதது. வெளிநாட்டு நெருக்குவாரம் காரணமா பாராளுமன்றத்தில் இப்பிரேரணை கொண்டுவரப்பட்டிருந்தால் முஸ்லிம் அமைச்ச பெருமக்கள் கையை உயர்த்தியிருப்பார்களா. தலையை மறைத்திருப்பார்களா?

## மாக்ஸ் ஒரு ஸ்ற்றாலினிய வாதி!

அண்மையில் பிரான்ஸில் உள்ள பிரதான த்ரொத்ஸ்கிவாதக் கட்சி தன கொள்கையில் இது வரை இருந்து வந்து 'பாட்டாளி வர்க்க சர்வாதிகார என்ற இலட்சியத்தை நீக்கியுள்ளது. இதற்கு விளக்கம் தரும் போக்கில் பாட்டா வர்க்க சர்வாதிகாரம் என்பது ஸ்ற்றாலினியக் கொள்கை என்றும் கூறப்பட்டுள்ள இதன்படி முதலில் இந்தக் கருத்தை முன்வைத்து அதை இறுதிவரை ஆதரித் மாக்ஸும் ஏங்கல்ஸும் ஸ்ற்றாலினியவாதிகளாவார்கள்.

தாங்கள் வெறுப்பையெல்லாம் ஸ்ற்றாலினியம் என்று சொல்வது த்ரொத்ஸ்கி வாதிகளுக்குப் பழக்கப்பட்டுப் போன விடயம். எனவே, நாளை தமது சோசலி கொள்கையைக் கைகழுவும் போது, அதுவும் ஸ்ற்றாலினியம் என்று தா விளக்குவார்கள் என எதிர்பாரக்கலாம்!

## ஹிந்து தமாஷ்!

ஹிந்து என்ற பிரபல இந்திய ஆங்கில நாளேடு தனது நூற்றாண்டை அண்மையி கொண்டாடியது. அரை நூற்றாண்டுக் காலம் இந்துத்துவத்துக்கும் இங்கிலாந் முடியாட்சிக்கும் நடுவே சமநிலை கண்டு பிழைப்பு நடத்தி வந்த ஹிந்து, இப்போ இந்திய மேலாதிக்க பார்ப்பனிய நிறுவனத்தின் அதிகார பூர்வமான ஏடாக தன்னை நிலைநிறுத்திவிட்டது. ஹிந்து மூர்க்கமான பாரதிய ஜனதா கட்சி ஆதர ஏடல்ல. அது மிக ஆழமான பார்ப்பனிய நோக்கமுள்ள இந்திய மேலாதிக் ஏடாகும்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அண்மைய அதிரடி நடவடிக்கையை முற்றா ஆதரித்த முதல் ஆங்கில ஏடு என்ற வகையில், ஹிந்து தனது சுயரூபத்தை புட்டுக் காட்டியுள்ளது. சனாதிபதி ஏன் அந்த முடிவை எடுத்தார் என்பதற்கு விடுதலைப் புலிகள் நாட்டைத் துண்டாட எடுக்கும் முயற்சிகளே காரணம் என்று சனாதிபதியே சொல்லத் துணியாத ஒரு கதையைச் சொல்லி அது தன் அரசிய கோமாளித்தனத்தை அம்பலப்படுத்தியுள்ளது. ஹிந்து நூற்றாண்டை ஒட்டி ஹிந்துவின் செய்திகளின் நம்பகத்தன்மையைப் பாராட்டி எழுதிய தமிழக ஏடுகள் அனைத்திற்கும் இச் செய்தி சமரப்பணம்.


**புதிய பூமி** வட புலத்தில் ஏக விநியோகம் விற்பனை
**வசந்தம் புத்தக நிலையம்**
405, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**புதிய பூமியின் வளர்ச்சிக்கு**

- நிதி உதவுங்கள்
- சந்தா அனுப்புங்கள்
- விற்பனைப் பணத்தை அனுப்பிவையுங்கள்
- கட்டுரைகள் - செய்திகள் - கருத்துக்கள் அனுப்புங்கள்

ஆசிரிய பீடம் / நிர்வாக பீடம் :
S-47, 3வது தளம், கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
(C.C.S.M. Complex) கொழும்பு - 11. இலங்கை.
Tel: 2435117, 2335844 Fax : 01-2473757
E-mail : puthiyapoomi@hotmail.com

பணம் அனுப்பும் வங்கி விபரம் : சோ. தேவராஜா
கணக்கு இலக்கம் : **0672-21-2002634-6**
**Bank of Ceylon**, Central Super Market, Colombo 11.


படிப்பகம்

www.padippakam.com



# ஆனந்தசங்கரியின் தலைவர் பதவி பறிப்பு!
## அடுத்த 'துரோகி' பெயர் யாருடையது?

தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் மக்களின் விடுதலைக்காக 'தந்தை செல்வா' என்ற அரசியல் புனிதரால் உருவாக்கப்பட்ட தமிழரசு – காங்கிரஸ் கூட்டணி என்றே கூறப்பட்டு வந்தது. தமிழ்க் காங்கிரஸில் இருந்து வந்த மு. சிவசிதம்பரம், வீ. ஆனந்தசங்கரி போன்றோர் தமிழர் கூட்டணியில் முக்கியமானவர்களாக விளங்கினர். வடக்கு கிழக்கு பாராளுமன்ற ஆசனங்களும் ஆளும் அதிகார வேட்கையுமே கூட்டணியின் குறிக்கோளாகிக் கொண்டது. போட்டியும் எதிர்ப்பும் தோன்றாத வரையில் அவர்களது கொடி உயரே பறந்து தமிழ் மக்களின் "ஏகப்பிரதிநிதிகளாகவே" வலம் வந்தனர்.

ஆனால் புலிகளின் ஆயுதப் போராட்டம் முதன்மை பெற்றுக் கொண்ட சூழலில் கூட்டணியினரது செயல்பாடுகள் உள்ளூர யூ.என்.பி ஆதரவாகவும் வெளிப்படையாக இந்திய ஆளும் வர்க்க அடிவருடலாகவும் அமைந்து வந்தது. இதனால் புலிகளின் கடும் எதிர்ப்பைக் கூட்டணியினர் பெற்று உயிர் இழப்புக்களையும் பெற்றுக் கொண்டனர். முன்பு தமது பாராளுமன்ற எதிரிகளுக்கு 'தமிழ்த்துரோகி' எனப்பட்டம் சூட்டி பொட்டுவைக்க வழிகாட்டிய கூட்டணியினரே அதே பட்டத்திற்கு ஆளாகி பொட்டுகள் வாங்கியும் கொண்ட அரசியல் பரிதாபங்களும் இடம்பெற்றன. இவையாவும் பழைய கதையாகிக் கொண்டன.

இருப்பினும் பாராளுமன்ற ஆசனப் பற்றும் பதவிகளுக்கான பேராசையும் அவர்களை விட்டுவிடவில்லை. கடந்த தேர்தலில் உயர்வர்க்க தமிழரின் முன் முயற்சியாலும் வெளிநாடுகளின் விருப்பத்தாலும் தமிழர் தேசியக் கூட்டமைப்பாகி தமிழர் கூட்டணியினர் ஏழு ஆசனங்களைப் பெற்றுக் கொண்டனர். தேர்தலின் போது தாங்கள் புலிகள் இயக்கத்தை தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்வதாகக் கூறி பாராளுமன்ற வாக்குகளைப் பெற்றனர். ஆனால் அதனை மனப்பூர்வமாகச் சொன்னார்களா? என்பது சந்தேகம். ஏதோ ஒழிப்பு மறைப்பு சளாப்பலாகவும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற விதமாகவும் ஒவ்வொரு கூட்டமைப்புப் பிரமுகர்களும் கூறிக் கொண்டனர்.



ஆனால் இந்தியா இது கண்டு சினத்துக் கொண்டது. கூட்டணித் தலைவர்கள் இந்திய எசமானர்கள் முன் தலை சொறிந்து அது இது என இழுத்துக் கொண்டனர். புலிகளுக்கும் இந்தியாவிற்கும் மிடையில் நெளிய வேண்டிய தாயிற்று. இப்போதும் வாலும் தலையும் காட்டுவோர் கெட்டித்தன மாகத் தப்பி வருகிறார்கள். பாவம்! ஆனந்தசங்கரி மட்டும் அகப்பட்டுக் கொண்டார். அவர் வெளிப்படையாகவே இந்திய விசுவாசத்தையும் புலி எதிர்ப்பையும் கூறிக் கொண்டதன் மூலம் இன்றைய நிலைக்குத் தள்ளப்பட்டார். பிரதமர் ரணிலுடன் மிக நெருக்கமாகி உபசபாநாயகர் பதவி மீது கூட கண்வைத்து செயல்படும் நிலைக்கு அவர் சென்றும் கொண்டார். யாவற்றினதும் மொத்த விளைவு தலைவர் பதவியில் இருந்து தூக்கி வீசப்பட்டமையாகும்.

இதில் கூட்டணியினர் மத்தியில் நல்லவர்கள் நேர்மையானவர்கள் என்று எடுத்துப் பிரித்துப் பார்க்க எவரும் இல்லை. எல்லோரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் தான். வழி வழிவந்த பாராளுமன்ற ஏமாற்றுக்காரத் தமிழ்த் தலைமைகளின் தொடர்ச்சி தான் இவர்கள். தமிழ் மக்களின் அரசியல் அறியாமையைப் பயன்படுத்தி இன மொழி மத உணர்வுகளை தக்க வழிகளில் கிளறி தேர்தல்களில் புள்ளடி பெற்றுக் கொள்வதில் கைதேர்ந்தவர்கள் என்பது மட்டும் உண்மை. அண்மைய தலைவரை அகற்றும் குடுமிப்பிடிச் சண்டையின் பின்னாலும் அடுத்த தேர்தலில் நிற்பது வெற்றி பெறுவதுமே மறைபொருளாகி நிற்கின்றது.

அதேவேளை ஒவ்வொரு தேர்தலிலும் யாராவது ஒருவரை 'துரோகி' ஆக்கிக் கொள்வதும் தமிழர் பாராளுமன்றத் தலைமைகளின் வழமையானதாகும். அந்தப் பட்டியல் 1947ல் இருந்து பார்த்தால் மிக நீளமானது. கடந்த தேர்தலில் டக்ளஸ் வரை வந்தது. அடுத்து வரும் தேர்தலுக்கு ஒரு தமிழர் துரோகி தமிழர் பாராளுமன்றத் தலைமைகளுக்குத் தேவைப்படுகிறது. அதற்கு யாரின் பெயரைப் பிரயோகித்து பதிப்பது என்பதே இப்போது எழுந்துள்ள பிரச்சினையாகும். தலைவர் பதவி பறிக்கப்பட்ட வீ. ஆனந்தசங்கரியின் பெயர் வருமா? என்பதை சற்றுப் பொறுத்திருந்து பார்ப்போம்.

# தோழர் மணியம் நினைவுகள்



மாக்சிச லெனினிச புரட்சிகர இயக்கத்தின் முன்னோடித் தலைவர்களில் ஒருவரான தோழர் மணியம் (கே.ஏ.சுப்பிரமணியம்) 1989ம் ஆண்டு நவம்பர் 27ந் திகதி தனது சிந்தனை செயல் யாவற்றையும் நிறுத்தி இயற்கையோடு இணைந்து நம்மைவிட்டு மறைந்தார். அவரது மறைவு அன்றைய சூழலில் நமது கட்சிக்கும் மக்களுக்கும் பேரிழப்பாகியது. இருப்பினும் அவரது பிரிவால் ஏற்பட்ட துக்கத்தைப் பலமாக மாற்றிக் கொண்டு நமது முன்னோக்கிய பாதையில் பயணித்தோம். பதினாங்கு ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. மாக்சிச லெனினிச மாஓசேதுச் சிந்தனை வழிநின்ற அவரது இலட்சியப் பயணத்தில் கிடைத்த அனுபவங்களை நாம் இறுகப்பற்றி நின்று துணிவுடனும் விடாப்பிடியுடனும் நமது கட்சி இயக்கத்தை பல்வேறு நெருக்கடிகள் சவால்கள் ஆபத்துக்கள் மத்தியில் முன்னெடுத்தோம். மிக நெருக்கடியான சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்றிலும் தோழர் மணியம் வகித்து நின்ற உறுதியான மாக்சிச லெனினிச நிலைப்பாட்டின் அடிப்படை அம்சங்கள் ஒவ்வொன்றையும் உற்று நோக்கி அவற்றின் அனுபவங்கள் ஊடாக நமது அரசியல் ஸ்தாபன வேலைகளை முன்னெடுக்க முடிந்தது.

தோழர் மணியம் எப்பொழுதும் கட்சி அமைப்பின் அவசியத்தையும் அதன் கூட்டு முடிவு கூட்டுச் செயல்பாட்டை வலியுறுத்தி நின்றவர். அவ்வாறே கட்சி தலைமை கொடுக்கும் வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு முன்னுரிமை வழங்கி வந்தவர். இதன் மூலம் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் மாக்சிச லெனினிசக் கட்சிக்குமிடையிலான உறவும் பிணைப்பும் நீடித்து நிலைக்க முடியும் என்பதை எப்போதும் முன்னிறுத்தி வந்தவர். அத்தகைய நிலைப்பாடும் வேலை முறையும் தான் இன்றுவரை கிராமங்களும் மக்களும் கட்சியோடு இருந்து வருவதற்கான அடிப்படையாக அமைந்து கொண்டது.

ஒவ்வொரு மாக்சிச லெனினிச வாதியினது வாழ்வின் பின்னாலும் ஒவ்வொரு வரலாறு படிந்திருக்கிறது என்பதை நினைவூட்டி நமது தோழர்கள் ஒவ்வொருவருக்கும் பின்னால் வெவ்வேறு அளவுகளில் அந்த வரலாற்று அம்சங்களைக் காண வேண்டும். அவற்றின் மொத்த விளைவும் நகர்வும் தான் நமது கட்சியின் வளர்ச்சி மட்டுமன்றி தொழிலாளர்கள் விவசாயிகள் தாழ்த்தப்பட்ட மக்கள் பெற்றுக் கொண்ட வெற்றிகளும் உரிமைகளும் எனச் சுட்டிக் காட்டியவர் தோழர் மணியம்.

அவர் நீட்டிப் பேசும் இயல்புடையவரல்லர். அவரது சுருக்கமான பேச்சிலும் எழுத்திலும் நிதானம், தூரநோக்கு, ஆழ்ந்த இலட்சியப்பிடிப்பு என்பன இருக்கும். அவர் ஆளும் வர்க்கத்திற்கும் அதன் எடுபிடிகளுக்கும் அரசு யந்திரத்திற்கும் ஒரு வேளையிலும் விட்டுக் கொடுத்து சமரசம் செய்து அரசியல் வேலைகளை முன்னெடுத்த ஒருவராக இருந்ததில்லை. அதனால் தோழர் மணியத்தை பொலிஸ் யந்திரம் ஒரு கடுமையான கம்யூனிஸ்ட் போராளி எனக் கவனித்து வந்ததுடன் சந்தர்ப்பம் ஏற்பட்ட வேளைகளில் கடுமையான தாக்குதல்களை மிருகத்தனமாக மேற்கொண்டும் வந்தது. அதன் காரணமாகவே அவரது உடல் நிலை விரைவாக பாதிப்படைந்து நோய் கண்டு வாழ்வை இழக்கவும் நேர்ந்தது.

# உலகில் தடைசெய்யப்பட்ட கிருமிநாசினிகள்
## இலங்கையில் பயன்படுத்தப்படுகிறது.

கடந்த ஐம்பது வருடங்களில் இலங்கையில் விவசாயத்திற்காகப் பயன்படுத்தும் கிருமிநாசினிகளின் அளவு முப்பது மடங்காக அதிகரித்துள்ளது. 1950ல் இலங்கை 20,000 தொன் விவசாய கிருமி நாசினிகளைப் பயன்படுத்தியது. இத் தொகை 2000ம் ஆண்டில் 612,000 தொன்களாக அதிகரித்துள்ளது.

அதுமட்டுமல்ல ஏனைய ஆசிய நாடுகளில் பயன்படுத்தப்படும் கிருமிநாசினிகளின் அளவைப் பார்க்கும் இலங்கையில் வருடாந்தம் இருபத்தெட்டு மடங்கு அதிகமான கிருமிநாசினிகள் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் உலகின் பலபாகங்களிலும் தடைசெய்யப்பட்ட கிருமிநாசினிகளும் இங்கே பெருமளவில் பயன்படுத்தப்படுவதாக உலகப் பாதுகாப்பு யூனியனின் இலங்கைக்கான பிரமுகர் கலாநிதி சன்னா பம்பரதெனியா அண்மையில் கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

இலங்கையில் கிருமிநாசினிகளின் விற்பனையில் பல்தேசிய கம்பனிகளே முன்னணி வகிக்கின்றன. தத்தம் நாடுகளில் பாவனைக்கு ஒவ்வாது என்று ஆய்வு மூலம் நிரூபிக்கப்பட்டு தடைசெய்யப்பட்ட கிருமிநாசிகளை மலிவு விலையில் இலங்கையில் விற்றுப் பிழைத்து வருகின்றன.

நேரடியாகவே மக்களுக்கு இந்த தடைசெய்யப்பட்ட கிருமிநாசினிகளின் பாவனையால் தீரா நோய்கள் ஏற்படுவதுடன் சுற்றாடலும் மாசடைகிறது. நாளடைவில் இலங்கையின் மண் பிரயோசனமற்ற நிலமாக மாறிவிடும். அதன்பின் அந்நியப் பண்டங்களில் தங்கிவாழ வேண்டிய அவல நிலை ஏற்படும். உலக மயமாதலின் கீழ் பல் தேசியக் கம்பனிகள் நமது நாட்டையும் மக்களையும் சகல வழிகளாலும் சுரண்டிச் சூறையாடுகின்றன என்பதே உண்மையாகும்.

# மகேஸ்வர ஒளி தரும் விளம்பரம்

யாழ்ப்பாணக் கலாச்சாரம் கந்தபுராணக் கலாச்சாரம் என்று கூறுவர். அதனைப் பெருமையாகக் கொண்டதினால் தான் என்னவோ கடந்த கால் நூற்றாண்டில் அங்கு கொலைக் கலாச்சாரம் தாண்டவமாடியதாகவே என்றே எண்ண வேண்டியுள்ளது. அதனை ஈடுசெய்யும் வகையில் தான் கோவில்களுக்கு டக்ளஸ் அமைச்சர் முன்பு பணம் அள்ளிக் கொடுத்தார். அவரைத் துரோகி என்று யூஎன்.பியில் வந்த அமைச்சர் தி. மகேஸ்வரன் அதே கதிரையில் அமர்ந்து கோவில்களுக்கு பணம் ஆட்டோ சீமெந்து என அன்பளிப்புகள் வழங்கி 'அருள்நெறி' வளர்த்து வருகிறார்.

இவை ஆன்மீகத் தொண்டு என்று எண்ணுவது தவறு. எல்லாம் உள்நோக்கங்களோடு தான். ஒன்று சொந்த வியாபார விஸ்தரிப்பு இரண்டாவது அரசியல் வியாபாரம். இவற்றுக்கான ஒரு சஞ்சிகை 'சிவன் ஒளி' என வெளிவருகிறது. ஒரே மகேஸ்வர விளம்பரம் தான். இதனைப் பார்த்த ஒரு சைவப் பெரியார் இந்த சஞ்சிகைக்கு 'மகேஸ்வர ஒளி' என வைத்திருக்கலாம் என்று கூறினார்.

அதை கேட்ட ஒரு நடுத்தர வயதான சைவ அன்பர் அச்சஞ்சிகையில் 'சக்தி சிவனின் கைதடி சிறுவர் பாமாலை' என்பதையும் 'சிறுவர் துஷ்பிரயோக திருவிளையாடல் புராணம்' என்பதையும் பிரசுரித்திருந்தால் காத்திரமானதாக இருந்திருக்கும் எனவும் கூறினார்.

இத்தகைய மகேஸ்வர திருவிளையாடல்களை எழுத்திலும் பேச்சிலும் எடுத்துச் செல்ல சில சைவக் கலாநிதிகள், கவிஞர்கள், சைவப் புலவர்கள், சமய சொற்பொழிவாளர்கள் என ஒரு பெரிய அடியார் கூட்டமே தேங்கி வழிந்து நிற்கிறது. மதமும் அரசியலும் வேறு வேறானவை என உரக்கக் கூறுவோர் அமைச்சர் மகேஸ்வரன் – இந்து கலாச்சார அமைச்சு – வியாபாரம் என்பன என்ன பாடுபடுகின்றது என்பதை சும்மா பார்த்தாலே இலகுவில் விளங்கக் கூடியதாகும். எத்தனை காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டையே! தமிழ் மக்கள் மத்தியில் உரிய அரசியல் விழிப்புணர்வு தோன்றாத வரை இது தொடரவே செய்யும்.

– வலிகாமத்தான் –

# தமிழ் ஊடகங்களில் தமிழ்க் கொலை முயற்சி!
## தமிழ் நாட்டு நோய் இங்கு பரவுகிறதா?

மெல்லத் தமிழ் இனிச் சாகும் என பாரதி அன்று பாடியதன் அர்த்தம் இன்று பரவலாகி வருவதை அவதானிக்க முடிகிறது. தமிழ் நாட்டில் தமிழ் ஆங்கில மாகவே பேசப்படுகிறது. இலங்கையில் இருந்து தமிழ் நாட்டுத் தலைநகர் சென்னைக்குச் சென்று இறங்கும் ஒருவர் அங்கு தமிழர்களால் பேசப்படும் தமிழை ஆச்சரியத்துடனேயே அவதானிக்க முடியும். அது தமிழ் ஆங்கிலம் கலந்த ஒரு புதிய மொழிப் பேச்சாகவே இருக்கும்.

அது மட்டுமன்றி அதே தமிழ் ஆங்கில உச்சரிப்பைக் கொண்ட பெயர்களில் பல பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல்கள் இன்று வெளிவந்து கொண்டிருக்கின்றன. 'இந்தியா டுடே', 'ஜூனியர் விகடன்', 'ஹெல்த் டுடே', 'பேமிலி ஹெல்த்' முதலியன.

இவற்றுடன் இத்தமிழ்க் கொலை முயற்சி தமிழ் நாட்டு சினிமா, நாடகங்கள் மூலம் தொடரப்படுகின்றது. இன்றும் தமிழ் நாட்டின் பாடசாலைப் பயிற்று மொழி ஆங்கிலமாகத் தொடரும் போது ஏனையவை பற்றி பேசிப்பயன் இல்லை. தமிழ் நாட்டில் தமிழ் வளர்க்கும் லட்சணம் இது தான். அதேவேளை அங்கு நல்ல தமிழ் முன்னெடுப்பு இல்லை எனவும் கொள்ளக் கூடாது.

ஆனால் இலங்கையின் நிலை வேறு. இங்கு தமிழ் மொழி பேச்சிலும் எழுத்திலும் அன்றாட வாழ்விலும் உரியவாறு பேணப்பட்டு வந்துள்ளது. கிறிஸ்தவ மதம் தழுவி உயர் வர்க்கமாகிக் கொண்ட தமிழர் மேட்டுக் குடிகள் தமிழை வீட்டு மொழியாகக் கூட பேசுவதைக் கைவிட்ட அவலம் தவிர தமிழர்கள் தமிழைத் தமிழாகவே பேசியும் எழுதியும் வந்துள்ளனர். ஆங்கிலத்தை அதிகளவுக்கு பிரயோகித்த தமிழர்கள் கூட தமிழைத் தமிழாகவும் ஆங்கிலத்தை ஆங்கிலமாகவும் பேசி எழுதினரே தவிர இரண்டையும் கலந்து தமிழ் மொழியின் தனித்துவத்தைச் சிதைக்கவில்லை என்பது நோக்கவேண்டியதாகும். ஆனால் புலம் பெயர்ந்த நாடுகளில் ஏற்பட்டுள்ள புதிய சூழலில் தமிழர்கள் இந்த தமிழ் சிதைவை எதிர்நோக்கி வருகின்றமை. புதியதோர் அனுபவமாகி எதிர்கொள்ள வேண்டிய சவாலாகவும் மாறி வருகின்றது.

இலங்கையில் தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வரப்பட்ட சூழலிலும் தமிழின் உபயோகம் அரசாங்கத் துறைகளில் கூட சிங்கள ஆங்கிலக் கலப்பற்று பேணப்பட்டு புதிய சொல் ஆக்கங்களால் விருத்தி செய்யப்பட்டும் வந்தன. இது தமிழ் நாட்டின் தூய தமிழ் இயக்க சொற்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக நமது நடைமுறை வாழ்வு, தேவை மக்களின் உபயோகம் போன்றவற்றை மையமாக வைத்து உருவாக்கப்பட்ட தமிழாக வளர முடிந்தது. இவ்விடயத்தில் இலங்கைத் தமிழ் அறிஞர்களின் பங்களிப்பு மிகக் கனதியானதாகும். இது ஈழத் தமிழர்களின் தனித்துவத்தின் ஒரு பிரதான அம்சமாகும்.

இத்தகைய பாரம்பரியத்தை முறியடித்து தமிழ் நாட்டு தமிழ்க் கொலைக் கலாச்சாரத்தை இங்கு புகுத்திக் கொள்ளும் முயற்சிகளைச் சில தமிழ் ஊடகங்கள் செய்து வருவது விசனம் தருவதாக உள்ளது. சிங்கள ஆட்சிகளால் நிர்வாகிகளால் தமிழ்க் கொலை எனக் கூக்குரல் வைத்தவர்கள் இன்று 'மெட்ரோ News' என்னும் பெயரில் தமிழ் பத்திரிகை வெளியிட்டு பக்கத்திற்கு பக்கம் தமிழ் ஆங்கில உச்சரிப்பில் எழுதுகிறார்கள் விளம்பரம் செய்கிறார்கள் இது ஏன்?

சக்தி தொலைக்காட்சி முற்று முழுதாக தமிழ் நாட்டைப்பின்பற்றி தமிழ்ச் சிதைப்பில் இறங்கி நிற்கிறது. 'சக்தி TV' றிலாக்ஸ் ரைம் (Relaxe Time) என்று தொடங்கி சக்தி Weekend வரை ஒளிபரப்புகிறார்கள். News 1st – என்ற தலைப்பில் தமிழ் செய்தி தொடர்ச்சியாக நாளாந்தம் ஒளிபரப்பப்படுகிறது. Next என்று காட்டுகிறார்கள். ஏன் இந்த குறுக்குப் புத்தி இவர்களுக்கு. ஒரு புறத்தில் தமிழுக்காக உயிர்கள் அர்ப்பணித்துப் போராட்டம். அதன் செய்திகளையும் வியாபாரமாக்கிக் கொண்டே தமிழ் கொலையையும் செய்கிறார்கள். தமிழ் ஆங்கில கலப்பு தமிழ் நாட்டில் இருந்து விட்டுப் போகட்டும். இங்கு அதனை இறக்குமதி செய்ய வேண்டாம்.

படிப்பகம்

www.padippakam.com



# வரவு செலவுத்திட்டமும் மலையக மக்களும்

வரவு செலவுத்திட்டம் என்றவுடன் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப் படுவது பொதுவான விதியாகிவிட்டது. அதேவேளை சிறிதளவாவது சம்பள உயர்வு கிடைக்கும் என்றும் சில அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப் படும் என்றும் பொதுமக்கள் எதிர்பார்ப்பது துண்டு.

கடந்த மாதம் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டத்தில் தோட்டத் தொழிலாளர் களுக்கு சம்பள உயர்வு வழங்குவதற் கான எவ்வித உத்தரவாதமும் கிடையாது. தோட்டங்களைத் தனியார் கம்பனிகள் நிர்வகிப்பதால் தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வை நிதியமைச்சர் உத்தரவாதம் செய்ய முடியாது. அவ்விவகாரம் தோட்டக் கம்பனிகளுக்கும் தொழிற் சங்கங் களுக்கும் இடையிலேயே செய்து கொள்ளப்படும் கூட்டு ஒப்பந்தத்தில் கவனிக்கப்பட வேண்டியதாகும் என்று சிலர் கூறுகின்றனர்.

ஆனால் நிதியமைச்சர் கே. என். சொக்ஷி வரவு செலவுத்திட்ட யோசனைகளில் அரசாங்க ஊழியர் களுக்கு 1250/- அல்லது 10% சம்பள உயர்வை அறிவித்தபோது இச்சம்பள உயர்விற்கு இணைய சம்பள உயர்வு களை வழங்க தனியார் துறையினர் முன்வருவார்கள் என்று நம்புவதாக தெரிவித்தார். தோட்டக்கம்பனிகள் அவ்வாறு சம்பள உயர்வை வழங்குவது பற்றி பரிசீலிக்க வேண்டும் என வேண்டு கோள் விடுப்பதாகவும் தெரிவித்தார். இதன் அர்த்தம் என்னவெனில் தோட்டக்கம்பனிகள் சம்மதிக்காவிட்டால் தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு கிடையாது என்பதாகும். அத்துடன் தோட்டத் தொழிலாளர்களின் ஊதியத்தில் அரசாங்கம் எவ்வித கட்டுப்பாட்டையும் கொண்டிருக்க வில்லை என்பதாகும். சுருக்கமாகக் கூறின் தோட்டத் தொழிலாளர்களை கைவிட்ட நிலையிலேயே வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஆனால் ஆறுமுகம் தொண்டமான் வரவு செலவுத் திட்டத்தை சிறந்ததென கூறியுள்ளார். காரணம் அவரின் அமைச்சுக்கு மூன்று மடங்கு அதிகரித்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறப்படு கிறது. சந்திரசேகரன் விமர்சிக்கிறார். காரணம் அவருடைய அமைச்சுக்கு குறைவான நிதியே ஒதுக்கப்பட்டுள்ள தாக கூறப்படுகிறது.

சம்பள உயர்வு வழங்கப்படாதது மட்டு மன்றி தோட்டப் பகுதியில் எந்தவொரு அபிவிருத்தி திட்டமும் முன்னெடுக்கப் படும் என்று வரவு செலவு திட்டம் கூறவில்லை. இந்நிலையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு வரவு செலவு திட்டத்தால் எதுவித பயனுமில்லை. நாட்டின் ஏனைய மக்களுக்கு ஏதோ பெரிதாக கிடைக்காவிட்டாலும் அவர்கள் முற்றாக புறக்கணிக்கப்பட வில்லை. ஆனால் மலையகத் தமிழ் மக்கள் முற்றாக கைவிடப்பட்டுள்ளனர்.

பொருட்களின் மீதும் சேவைகளின் மீதுமான வற்வரி 10 வீதத்திலிருந்து 15 ஆக அதிகரிக்கப்பட்டதால் அத்தியாவசிய பாவனை பொருட்களின் விலையில் 5 சதவீதம் அதிகரிப்பு ஏற்படும். பொதுவாகவே மலையகத்தில் ஒப்பீட்டுரீதியில் பொருட்களின் விலை அதிகமாகும். வற்வரி அதிகரிப்பிற்குப் பிறகு மேலும் பொருட்களின் விலை உயரும். இதனால் சாதாரண மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவர்.

பெருந்தோட்டத் துறையை அபிவிருத்தி செய்வதற்கோ அல்லது மாற்றியமைப் பதற்கோ வரவு செலவு திட்டத்தில் எவ்வித யோசனைகளும் முன்வைக்கப் படவில்லை.

இந்நிலையில் பெருந்தோட்ட வளங் களை தோட்டக் கம்பனிகள் கொள்ளை அடிக்கின்றன. தோட்டத் துறையையே இல்லாமலாக்கும் வகையில் தோட்ட மரங்களை வெட்டி விற்பது முதல் தொழிற்சாலைகளை உடைத்து அதிலுள்ள பொருட்களை விற்று தீர்ப்பது வரை அழிவுபூர்வமான வேலைகளையே அவை செய்து வருகின்றன. தொழிற் சங்கங்கள் அவற்றை தடுத்து நிறுத்த முடியாது கையாலாகாத நிலையில் இருக்கின்றன. தோட்டங்களை பாதுகாப்பதற்கு அவற்றிடமும் எவ்வித திட்டங்களும் இல்லை.

ஒரு சில மாதங்களுக்கு முன்பு செய்து கொள்ளப்பட்ட கூட்டு ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளின்படி அடுத்த இரண்டு வருடங்களுக்கு தோட்டத் தொழிலாளர் களுக்கு சம்பள உயர்வு ஏதும் வழங்கப் படமாட்டாது. முதலாளித்துவ அரசாங்கங்களின் வரவு செலவு திட்டங்களின் சாதாரண மக்களுக்கு எவ்வித நன்மைகளையும் எதிர்பார்க்க முடியாது. ஆனால் சமூகப் பாதுகாப்பு, சமூக நலன்புரி போன்றவற்றுக்கு வழங்கப்பட்டு வந்த அரச மானியங்கள் வெட்டப்படும்போது சாதாரண மக்கள் பெரும் கஸ்டத்திற்குள்ளாகிறார்கள். அதில் பிற்படுத்தப்பட்ட மக்களின் நிலையைப் பற்றி எடுத்துக் கூறவே தேவை இல்லை. அந்தளவிற்கு பொருளாதார பிரச்சினைகள் மேலோங்கும்.

தற்போதைய வரவு செலவு திட்டமும் சாதாரண உழைக்கும் மக்களுக்குரி திட்டமல்ல. அரச மானியங்களுட குறைக்கப்பட்ட நிலையில் சாதாரண மக்கள் கஷ்டப்படப்போகிறார்கள் மலையகத் தமிழ் மக்களும் பெரிது கஷ்டப்படப் போகிறார்கள் 1 எம்.பிக்கள். 2 அமைச்சர்கள், பிரதியமைச்சர் மலையகத்தை சார்ந்தவர்களாக இருந்த போதும் வரவு செலவுத்திட்டத்தில் மலையகத் தமி மக்களுக்கு எவ்வித நிவாரணத்தையும் அவர்களால் உறுதி செய்து கொள்ள முடியவில்லை.

சமாதான நடவடிக்கைகளில் கவனஞ் செலுத்தப்படுவதாக கூறப்பட்டபோதும் இந்த வரவு செலவு திட்டத்தில் மீண்டும் பாதுகாப்பிற்கே அதிக பணம் ஒதுக்கப் பட்டுள்ளது. அத்துடன் சமாதான நடவடிக்கைகளில் முன்னேற்றம் ஏற்படாதபோது ஏற்கனவே உறுதி செய்யப்பட்ட வெளிநாட்டுக்கடன்கள் இங்கு வந்தடையாது.

சமாதான நடவடிக்கைகளுடன் தொடர்புடைய வெளிநாட்டுக் கடன் களை கருத்திற் கொண்டு தயாரிக்கப் பட்ட வரவு செலவு திட்டம், சமாதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படாவிட்டால் செயலற்றுப் போகும் அபாயத்தைக் கொண்டுள்ளது.

# புத்திரசிகாமணியின் புத்திசாலித்தனமான குத்துக்கரணம்!

பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேசியப்பட்டியல் எம்.பி.வீ. புத்திரசிகா மணி மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துவிடலாம் என்பதற்கான சகுனங்களே அதிகமாக தென்படு கின்றன. அவர் எத்தக்கட்சியில் எம்.பியாக இருந்தாலும் மலையகத் தமிழ் மக்களுக்கோ தோட்டத் தொழிலாளர் களுக்கோ எவ்வித பயனும் ஏற்படப் போவதில்லை.

2001ம் ஆண்டு பொது ஜன ஐக்கிய முன்னணியில் இணையும் வரை அவர் ஐக்கிய தேசியக் கட்சிக்கு துதிபாடி வந்தார். பிறகு ஒரேயடியாக ஜனாதிபதிக் குச் சப்பை கட்டுபவராக மாறினார். தற்போது ஐக்கிய தேசியக் கட்சியை புகழ்ந்து பேசுகிறார். இவரைப் போன்ற 'மலையகத் தலைவர்கள்' இரண்டு பெரிய கட்சிகளின் அடிமைகளாகி நின்றால் மலையகத்தமிழ் மக்களுக்கு அரசியலே கிடையாது என்று மீள மீள சொல்வதுடன் அந்த வழியிலேயே அவர்கள் வாழ்க்கை நடத்துகின்றனர்.

இவர் மலையகத் தமிழ் மக்களுக்கு சகல வழிகளிலும் எதிராக குறிப்பாக மலையகத்தமிழ் மக்களின் இருப்பிற்கு எதிரான நீர்த்தேக்கத் திட்டங்கள், தோட்டக்காணிகளில் பெரும்பான்மை இனக்குடியேற்றங்கள் போன்றவற்றை முன்னெடுத்த காலஞ்சென்ற காமினி திசாநாயக்கவின் தாசனாகவே இருந்தார். யாழ்ப்பாண நூலகத்தை 1980ல் ஆண்டு காமினி திசாநாயக்க வின் வழிகாட்டலில் குண்டர்கள் எரித்து சாம்பாராக்கிய போது காமினியுடன் கைகோர்த்துக் கொண்டு யாழ்ப்பாணத் தில் உல்லாசமாக இருந்தவராவர். 1983 இனவன்முறை நடத்தப்பட்ட போதும் நடந்த பிறகும் நீண்டநாட்கள். ஐக்கிய தேசியக் கட்சியில் தொடர்ந்து இருந்திருக்கிறார். பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் மலையகத்தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு மிகவும் கொடூரமான சித்திரவதைக்குட் படுத்தப்பட்ட காலத்திலும் அவர் ஐக்கிய தேசியக் கட்சியில் முக்கிய பதவிகளிலும் இருந்திருக்கிறார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் பொது ஜன ஐக்கிய முன்னணிக்கும் எவ்வித வித்தியாசமும் இல்லாத காலத்தில் பொது ஜன ஐக்கிய முன்னணி ஐக்கிய தேசியக் கட்சியை விட முற்போக் கானது என்று கூறி அதில் இணைந்து கொண்டார். இப்போது ஐக்கிய தேசியக் கட்சி சிறந்தது என்று பேசி வருகிறார். தீபாவளி தினத்தன்று பொது ஜன ஐக்கிய முன்னணி ஆர்ப்பாட்டம் நடத்தியது பிழை அதனாலேயே பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி ஆசனவரிசையில் இருந்து தமிழ்க் கட்சிகளின் ஆசனவரிசையில் போய் அமர்ந்து கொண்டதாக தெரிவிக்கிறார். தீபாவளியன்று ஆர்ப்பாட்டம் செய்ததை எதிர்ப்பது வேறு அதற்காகத்தான் பொது ஜன ஐக்கிய முன்னணியிலிருந்து விலகப்போவதாக அவர் கூறுவதை நம்ப முடியுமா? அதற்காக ஐக்கிய தேசியக் கட்சியை தற்போது நியாயப்படுத்துவதை ஏற்க முடியுமா? ஏற்கத்தான் வேணுமா?

ஐக்கிய தேசியக் கட்சியை புகழும் நடவடிக்கையின் உச்சமாக ஐக்கிய தேசிய முன்னணியின் தற்போதைய வரவு செலவுத்திட்டத்தை நல்லதென கூறியிருக்கிறார். தோட்டத் தொழிலா ளர்கள் எவ்வித கவனமும் செலுத்தாத இவ்வரவு செலவுத் திட்டத்தை எவ்வாறு புகழ்ந்து பேசுகிறார்?

எல்லாமே ஒதுங்குவதற்கு இடம் தேடும் கைங்கரியங்கள் தான்! அவர் நன்றாகவே பல்டி அடிக்கத் தெரிந்தவர். தனது குத்துக்கரணங்களுக்கு கோட்டுச் சூட்டு அணிந்து கொள்கை விளக்கம் கொடுப்பதிலும் கெட்டிக்காரர் புத்திரசிகாமணி.

அவர் பல்டி அடிப்பதை நியாயப்படுத்த அவர் வெகுஜன ஊடகங்களை நன்கு பயன்படுத்துகிறார். பொது ஜன ஐக்கிய முன்னணியுடன் முரண்பட்டு அவர் மானமுள்ளவராகி விட்டதாக ஊரெங்கும் போஸ்டர்கள் வேறு வரவேற்பு வைபவங்கள் நடப்பதாக செய்திகளும் வெளிவந்து கொண்டிருக் கின்றன.

புத்திரசிகாமணி செய்து வருவதையே இ.தொ.கா, மலையக மக்கள் முன்னணி அமைப்புகளும் செய்து வந்தன. இவ்வாறு மாறிமாறி சென்று அமர்வது மலையக மக்களின் தன்மானம் அக்கறை என்பனவற்றால் அல்ல. பதவி, பணம், சொத்து சுகம் சேர்த்துக் கொள்ளவேயாகும். இது மலையக தொழிற்சங்க, பாராளுமன்ற அரசியலின் லட்சணங்களாகும். 'தலைவர்கள்' எனப்படுபவர்களின் இருப்புக்குப் பிழைப்பிற்குமான அரசியல் என்பது அப்படித்தான் இருக்கும்.

அதனை விளங்கிக் கொள்ளாமல் அவர்களின் பின்னாலே அவர்கள் எங்கு சென்றாலும், எங்கு அழைத்தாலும் செல்வது நிச்சயமாக மலையகத்தமிழ் மக்களின் அரசியலாக இருக்க முடியாது.

~ வலப்பன சேகர் ~

# முருக்க மரம் ஏறின கதையின் கதை

எல்லாருக்கும் பழையபடி வேதாளம் முருக்க மரம் ஏறின கதை தெரிய வேண்டும். இது விக்கிரமாதித்த மகாராசனுக்கு வேதாளஞ் சொல்லி 2003ம் வருடம் நவெம்பர் மாத முதலில் பத்திரிகைகளில்லாம் வெளிவந்த கதையின் வெளிவராத பகுதி.

சந்திரிகா பாராளுமன்றத்தை ஒத்தி வைத்த கதையைச் சொல்ல முன்னம் வேதாளம் தன் வழக்கம் போல விக்கிரமாதித்தனுக்கு அவனுடைய விடாமுயற்சியைப் பாராட்டி அவன் போகிற வழிக்கு அலுப்புத்தட்டாம லிருக்கக் கதை சொல்லுகிறதாகச் சொல்லும். என்றாலும் வேதாளத்தினு டைய நோக்கம் விக்கிரமாதித்தனுடைய மௌனத்தைக் கலைத்து அதன் மூலம் தன்னை விடுவித்துக் கொண்டு பழைய படி முருக்க மரம் ஏறுவது தான் என்று எல்லாருக்கும் தெரியும்.

வேதாளத்துக்கு இப்போதெல்லாம் சோடித்துக் கதை சொல்லும் தேவை யில்லை. ஏனென்றால் இலங்கை அரசியலில் நிறையப் புதிர்கள் இருப்பதாற் செய்திகளை அப்படியே கண்காது வையாமற் சொல்லிவிடும். அந்த விதமாகவே நவெம்பர் மாதம் 3ம் திகதி நள்ளிரவில், பழையபடி சந்திரிகா பாராளுமன்றத்தை ஒத்திவைத்த கதையை விக்கிரமாதித்த மகாராசனுக்குச் சொல்லி முடித்த பிறகு வழக்கமான மாதிரித் தன்னுடைய கேள்வியை அவிழ்த்து விட்டது. "சனாதிபதி சந்திரிகா பாராளுமன்ற த்தை ஒத்திவைத்த நோக்கம் தன்னைக் காப்பாற்றவா? பிரதம நீதியரசரைக் காப்பாற்றவா? நாட்டைப் புலிகளிட மிருந்து காப்பாற்றவா? என்று நீளமாகக் கேட்டுக் கொண்டே போய் முடிவில் இந்தப் புதிருக்கு விடைதெரிந்தும் சொல்லாது போனால் உன்னுடைய தலை சுக்கு நூறாக வெடித்து விடும் என்றும் சொல்லி வைத்தது.

விக்கிரமாதித்த மகாராசனுக்கு இந்தக் கேள்விக்கு விடை தெரியவில்லை. அதைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் அவனது தலை வெடித்தே போய்விடும் போலிருந்தது. எனவே புதிருக்கு விடை தெரியாமலிருந்தாலும் தலை வெடித்துவிடும் என்ற நிபந்தனையை யும் கூடவே வேதாளம் போட்டிருக் கிறதோ என்ற ஐயமும் அவன் மனதில் எழுந்தது.

"ஏதாவது செய்தாக வேண்டும் என்றாலும் என்ன செய்வது என்று தெரியாத காரணத்தாலேயே சனாதிபதி சந்திரிகா பழையபடி முருக்க மரம் ஏறினார் - இல்லை பாராளுமன்றத்தை ஒத்தி வைத்தார்" என்ற பதில் தெரிந்தும் தெரியாதது போல விக்கிரமாதித்த மகாராசன் பாசாங்கு செய்கிறானா என்ற சந்தேகம் வேதாளத்துக்கு. இதற்கு முடிவு காணுவதற்குள் வேதாளத்துக்குத் தன் தலையே வெடித்து விடும் போல இருந்தது.

இரண்டு பேர் தலையும் வெடித்தால் இனிமேல் வேதாளம் முருக்கமரம் ஏறின கதையே முடிந்து போகும் என்பதால் வேதாளமும் விக்கிரமாதித்த மகாராசனும் ஒரு புதிய இடைக்கால உடன்படிக்கைக்கு வந்தார்கள். அதன்படி, வேதாளம் இனிமேற் கொண்டு இலங்கை அரசியல் தொடர்பான கதை சொல்வதில்லை என்றும் கஷ்டமான கேள்விகள் கேட்பதில்லை என்றும் தன் பங்குக்கு விக்கிரமாதித்த மகாராசன் சரியான பதில் தெரியாவிட்டாலும் எதையாவது சொல்லித் தன் மௌனத்தைக் குலைப்பதாகவும் வேதாளத்தை ஒரு நாளைக்கு ஒரு தடவைக்கு மேல் முருக்க மரத்தால் இறக்குவதில்லை என்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டு அந்த உடன்படிக்கை அடுத்த பொதுத்தேர்தல் வரை நின்றுபிடிக்கும் என்று சில அரசியல் வாதிகளும் நின்று பிடிக்காது என்று சில அரசியல் வாதிகளும் 'விடியும் வேளை', 'தமிழோசை', 'மின்னல்', 'எரிமலை' ஆகிய நிகழ்ச்சிகளில் விவாதித்து வருகிறார்கள்.

**ஆதாரம் : ஒரு முருக்க மரத்தின் கதை ( இன்னமும் வெளிவராத நாவல்)**

# அரச நிறுவனங்களும் கடன் சுமையும்

அண்மையில் பெட்ரோலியக் கூட்டுத் தாபனம் இலங்கை இராணுவத்திற்கு எரிபொருள் வழங்க முடியாதென அறிவித்தது. இலங்கை இராணுவம் பெட்ரோலிய கூட்டுத்தாபனத்திற்கு கொடுக்க வேண்டிய நிலுவைத் தொகையான ரூபா முப்பது கோடியை இராணுவம் கொடுக்க நடவடிக்கை எடுக்காததே இதற்குக் காரணம். ஆனால் தொடர்ந்து எரிபொருளை இராணுவத்திற்கு வழங்குமாறு அமைச்சர் கருஜயசூரியா கூட்டுத் தாபனத்திற்கு உத்தரவிட்டுள்ளார். ஆனால் நிலுவையை வழங்க எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஏற்கனவே இந்திய எண்ணெய்க் கொம்பனி தான் எடுத்துக் கொண்ட நூறு நிரப்பு நிலையங்களின் பெறுமதியை வழங்காததாலும், சிறப்பாகச் செயற்பட்டு வந்த நூறு நிரப்பு நிலையங்களின் மூலம் இதுவரை கிடைத்து வந்த இலாபமும் கூட்டுத் தாபனத்திற்கு இல்லாமற் போனதாலும் கூட்டுத்தாபனம் பெரும் நிதி நெருக்கடியில் உள்ளது. இதைவிட வேறு அரச நிறுவனங்களும் கூட்டுத் தாபனத்திற்கு கோடிக்கணக்கில் நிலுவையை வைத்திருக்கின்றன. பெட்ரோலியக் கூட்டுத்தாபனம் மட்டு மல்ல ஏனைய அரச நிறுவனங்களும் நிதி நெருக்கடியில் இருப்பதற்கு அரசாங்கமும் அதன் தனியார் மயக் கொள்கையுமே காரணமாகும். அரச நிறுவனங்களை முதலில் நட்டமடையச் செய்வது பின்பு நட்டம் எனக் கூறி அவற்றைத் தனியார் மயப்படுத்துவது. விரைவில் பெற்றோலியக் கூட்டுத் தாபனம் முழுமையாகத் தனியார் மயப்படுத்தப்பட்டு விடும்.

இது ஒருபுறம் இருக்க யுத்தம் ஓய்ந்த இந்த இரண்டு வருடங்களில் இராணுவச் செலவு ஏன் குறைய வில்லை? குறையாவிடில் இராணுவத் திற்கு மேலதிகச் செலவு ஏன் ஏற்படுகிறது. உண்மையில் முப்படை களும் போர் ஓய்வு, சமாதானப் பேச்சுக்கள் என்ற போர்வையின் கீழ் நவீனமயப்படுத்தப்படுகின்றன அதன் வெளிப்பாடே இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் அமெரிக்காவுடன் "கொள்கலன் " பாதுகாப்பு புரிந்துணர்வு கூட்டுப் பயிற்சி" என்பன நடைபெறுகின்றன. இதையெல்லாம் அம்பலப்படுத்த தமிழ்க் கூட்டமைப்பு தயாரில்லை, சந்தர்ப்பம் ஏற்படும் போதெல்லாம் விழுந்தடித்துக் கொண்டு அரசுக்கு முட்டுக்கொடுப்போம் எனத் தமிழ் காங்கிரஸின் அப்பாத்துரை விநாயகமூர்த்தி அறிக்கைவிட்டு ஜி.ஜி.பொன்னம்பலம் காலம் தொட்டு தாங்கள் யூஎன்.பியின் அடிவருடிகள் என்பதை நிலை நிறுத்துகின்றனர்.

படிப்பகம்

www.padippakam.com



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
புதிய பூமி
Puthiya Poomi
சுற்று 10 டிசம்பர் 2003 பக்கம் 12 விலை 12/- சுழற்சி 64

எஸ்.47, 3ம் மாடி, கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி. கொழும்பு 11. இலங்கை. தொ.பே.:2435117, 2335844 பாக்ஸ்:011-2473757
ஈ-மெயில் : puthiyapoomi@hotmail.com

## வரவு செலவுத்திட்டம் முதலாளித்துவத்தின் இயலாமை

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் வரவு செலவு திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது. அதில் அரசாங்க ஊழியர்களுக்கு மாதாந்தம் 1250 ரூபா அல்லது தற்போதைய சம்பளத்தில் 10 வீதம் சம்பள உயர்வாக வழங்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. அதாவது 1250 ரூபா அல்லது 10 வீதம் என்பதில் எது அதிகரித்த தொகையோ அத்தொகை சம்பள உயர்வாக வழங்கப்படவுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

இதைத்தவிர மக்களுக்கு எவ்வித நிவாரணமும் இல்லை. இதுவரையும் அத்தியாவசியப் பொருட்களுக்கு 10 வீதமும் ஆடம்பரப் பொருட்களுக்கு 20 வீதமும் பெறுமதி சேர்க்கப்பட்ட *(VAT)* வற்வரி அறவிடப்பட்டது. ஆனால் இந்த வரவு செலவு திட்ட முன்மொழிகளின்படி ஆடம்பரப் பொருட்கள் அத்தியாவசியப் பொருட்கள் என்ற வேறுபாடின்றி எல்லாப் பொருட்களுக்கும் 15 வீதம் வற்வரி அறவிடப்படும்.

இதனால் ஆடம்பரப் பொருட்களை நுகரும் பணம் படைத்தவர்களுக்கு 5 வீத வரிச்சலுகை கிடைத்துள்ளது. ஆடம்பரப் பொருட்களை 5 வீதம் குறைந்த விலைக்கு பெறமுடியும். அத்தியாவசியப் பொருட்களை நுகரும் அதிகப் பெரும்பான்மையான வசதியற்ற உழைக்கும் மக்கள் 5 வீதம் அதிகமாக வரியை செலுத்த வேண்டியுள்ளது. அதாவது அத்தியாவசியப் பொருட்களை 5 வீதம் அதிக விலை கொடுத்தே வாங்க வேண்டியுள்ளது. இதனால் தொழிலாள விவசாய, நடுத்தர சாதாரண மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவர்.

மேற்படி குறைந்த அளவு சம்பள உயர்வும் அரசாங்க ஊழியர்களுக்கு மட்டுமே வழங்கப்படவுள்ள ஊழியர்களில் அதிகமானோர் தனியார்துறையிலேயே தொழில் செய்கின்றனர். அவர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என்று அரசாங்கம் கட்டளையையோ பணிப்புரையையோ வழங்கவில்லை.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு பெருந்தோட்டக் கம்பெனிகள் சம்பள உயர்வை வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று வேண்டுகோள் விடுப்பதாக நிதியமைச்சர் கே. என். சொக்ஸி அறிவித்துள்ளார். இதிலிருந்து அரசாங்கம் தனியார்துறை மீது எவ்வித கட்டுப்பாட்டை கொண்டிருக்கவில்லை என்பது நிரூபிக்கப்படுகிறது.

பாதுகாப்பிற்கு அதிக நிதி 5ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. சமாதான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போது பாதுகாப்பிற்கென அவ்வளவு நிதி எதற்கு என்று கேட்கப்பட்ட கேள்விக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹ யுத்தம் நடத்தியதால் பாதுகாப்பிற்கென வாங்கப்பட்ட கடனை அடைப்பதற்காகவே இம்முறை பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். இது மிகவும் வசதியான சமாளிப்பாகும்.

வரவு செலவுத்திட்டத்தில் தனியார் துறை ஊக்குவிப்பதற்கு வெளிநாட்டு முதலீடுகளை பெருமளவில் பெற்றுக்கொள்ளவும் அடிப்படைகள் இல்லை என்று முன்னாள் நிதியமைச்சர் ரொனி டீ மெல் தெரிவித்துள்ளார். இவர் இப்படி கூறுவதால் சாதாரண மக்களுக்கான வரவு செலவு திட்டத்தை கூட சமர்ப்பிக்க முடியாத நிலையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் இருப்பதை விளங்கிக் கொள்ள முடியும்.

புதிய அபிவிருத்தித்திட்டங்கள் என்று குறிப்பிடத்தக்கக் கூடிய திட்டங்கள் முன்வைக்கப்படவில்லை. இதனால் உற்பத்தி, வேலைவாய்ப்பு என்பன பற்றிய எதிர்பார்ப்பு எதுவும் இருக்க முடியாது. கிராம அலுவலர்களுக்கு ஆலோசகர்களாக நாடெங்கும் 25 ஆயிரம் பேர் நியமிக்கப்படவுள்ளதாக நிதியமைச்சர் கூறியுள்ளார். அந்நியமனங்களால் எவ்வித உற்பத்தியும் நடைபெறாது. மாறாக நட்டமே ஏற்படும்.

யுத்தத்தினால் அழிக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கு அபிவிருத்தி அப்பகுதியின் எல்லைகளில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட நிலையில் வாழும் சிங்கள மக்களின் அபிவிருத்தி என்பனபற்றி எதுவும் கூறப்படவில்லை. வடக்கு கிழக்கு புனரமைப்பிற்கு வெறும் 400 கோடி ரூபா மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. தென் மாகாண அபிவிருத்திக்கு 800 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

சமாதானத்தை முன்னெடுக்கப் போவதாக வெளிநாடுகளுக்கு எடுத்துக் காட்டியதன் மூலம் கிடைக்கவிருக்கின்ற கடன் உதவிகளை பெருமளவில் எதிர்பார்த்தே இவ்வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டிருப்பதாக நிதியமைச்சர் தெரிவித்துள்ளார். சமாதான வண்டியோ சில்லுகள் கழற்றப்பட்ட நிலையில் இருக்கின்றது.

உலகவங்கி சர்வதேச நாணய நிதியம் என்பவற்றின் ஆலோசனையின்படி கல்வி, சுகாதாரம், போக்குவரத்து போன்றவற்றுக்கு ஒதுக்கப்பட்ட மானியங்கள் தொடர்ந்து குறைக்கப்பட்டே வருகின்றன. வெளிப்படையான திட்டமில்லாமலே சுகாதார சேவையை முற்றாக தனியார் மயமாக்கும் திட்டத்தை அரசாங்கம் நிறைவேற்றவிருக்கிறது. அரசாங்க கட்டுப்பாட்டில் இருக்கும் ரயில் போக்குவரத்தையும் தனியார் மயமாக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

இதுவரையும் யுத்தம் என்ற சாட்டில் எமது நாட்டு பொதுத்துறைகளும் வளங்களும் தனியாருக்கும் வெளிநாட்டுக் கம்பெனிகளுக்கும் விற்கப்பட்டன. தற்போது சமாதானம் என்ற பேரில் அதே விற்பனைகள் தொடர்கின்றன. இது முதலாளித்துவத்தின் இயலாமையும் உலக மயமாதலின் நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியுமாகும். இந்தவரவு செலவுத்திட்டத்தின் உள்ளடக்கத்தை உற்று நோக்கினால் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் எங்கே சென்று கொண்டிருக்கின்றது என்பதையும் புரிந்து கொள்ள முடியும்.

- ஆசிரியர் குழு -

# அரசியல் அமைப்பு நெருக்கடியும் ஆளும் வர்க்க சூதாட்டமும்

இலங்கையில் இன்று நடைமுறையில் இருந்து வரும் அரசியல் அமைப்பு முறையானது 1978ல் ஜே.ஆர்.ரினால் கொண்டுவரப்பட்ட தொன்றாகும். 1977ல் இடம் பெற்ற பொதுத் தேர்தலில் ஜே.ஆர். தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி ஆறில் ஐந்து பாராளு மன்றப் பெரும்பான்மை பலத்தைப் பெற்றுக் கொண்டது. அப்பொழுது ஜே.ஆர். கூறிய ஒரு கூற்று மிகவும் பிரபலம் பெற்றிருந்தது. இந்தப் பாராளு மன்றப் பலத்தைக் கொண்டு ஆணைப் பெண்ணாகவோ அன்றி பெண்ணை ஆணாகவோ மாற்ற முடியாத ஒரு விடயத்தைத் தவிர ஏனைய அனைத்தையும் செய்ய முடியும் என்று கூறிக் கொண்டார். அதன் அடிப்படையிலேயே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை உட்பட இன்றைய அரசியல் அமைப்பு வரையப்பட்டு நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது.

இத்தகைய அரசியலமைப்பின் கீழ் ஜே.ஆர். ஜெயவர்த்தனா, ஆர். பிரேமதாசா, டி.பி.விஜயதுங்கா சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா ஆகியோர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருந்து நாட்டை நாசகாரப்பாதையில் இட்டுச் சென்றனர் என்பதை எவரும் மறுக்க முடியாது. ஒரு புறத்தால் கொடிய பேரினவாத யுத்தத்தை முன்னெடுத்து நாட்டை வரலாற்றில் என்றுமில்லாத வாறு இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்துக் கொண்டனர். மறுபுறத்தில் நாட்டின் பொருளாதாரத்தை அந்நிய ஏகாதி பத்திய சக்திகளுக்கு தாரைவார்த்துக் கொடுத்து தாராள - தனியார் மயக் கொள்கையை அரவணைத்துக் கொண்டனர். நாட்டை மேலும் ஏகாதி பத்திய தேரச்சில்லில் பிணைத்து நவ கொலனியமாக்கும் பாதையில் பயணித்து வந்தனர்.

கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் நாட்டின் நிலவுடமை முதலாளித்துவ மேட்டுக்குடி ஆளும் வர்க்க நலன் காக்கும் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இதே அரசியலமைப்பின் கீழ் தான் ஆட்சி அதிகாரம் நடாத்தி வந்துள்ளான். 1994ல் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படும் போது சந்திரிகா அம்மையார் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழித்துக் கொள்ளப் போவதாக மக்களுக்கு வாக்குறுதி வழங்கி இருந்தார். ஆனால் பதவிச் சிங்காசனத்தில் பட்டாபிஷேகம் நடைபெற்ற பின் அதற்கான எந்த வொரு முயற்சியையும் செய்து கொள்ள வில்லை. இந்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைக்கு எதிராக அன்று போர்க் கொடி தூக்கிய சிகப்பு பேரினவாதக்கட்சியான ஜே.வி.பி இன்று சந்திரிகா அம்மையார் முறை யாக நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்தவில்லை என்ற குற்றச் சாட்டைச் சுமத்தி தமது பச்சைப் பாராளுமன்ற சந்தர்ப்பவாத நிலைப்பாட்டை வெளிப்படுத்தி நிற்கிறது.

இன்று அரசியல் நெருக்கடியை எதிர் நோக்கி நிற்கும் தற்போதைய அரசியல் அமைப்பானது தனிக் கட்சி தனிநபர் சர்வாதிகாரத்தின் சாராம்சங்களையே கொண்டு உருவாக்கப்பட்ட பாராளு மன்றப் பலத்தால் மட்டுமே இவ் அரசியலை மாற்ற முடியும். ஆனால் விகிதாசாரத் தேர்தல் முறையினால் தனி ஒரு கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறுவது என்பது இலங்கையின் சமூகச் சூழல் இடம்பெற வாய்ப்பே இல்லை. இவற்றை மிகவும் தூரநோக்குடன் சிந்தித்தே ஜே.ஆர். ஆளும்வர்க்க அதிகார நிலைப்பிற்கான அரசியல் அமைப்பாக அன்று வரைந்து கொண்டார்.

இத்தகைய அரசியலமைப்பு 2001ம் ஆண்டு டிசம்பர் மாதம் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் பொதுசன முன்னணி பாராளுமன்றத்தில் தோல்வி கண்டபின் நெருக்கடி நோக்கி நகர ஆரம்பித்துக் கொண்டது. ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் ஐக்கிய முன்னணி அமைத்து ரணில் விக்கிரம சிங்கா பிரதமராகி அரசாங்கத்தை வழிநடத்த ஆரம்பித்தார். அதேவேளை பொதுசன முன்னணியின் தலைவி சந்திரிகா அம்மையார் ஜனாதிபதி பதவியில் தொடர முடிந்தது. இதன் காரணமாக பாராளுமன்றத்திற்கும் நிறைவேற்று அதிகாரத்தையுடைய சந்திரிகாவுக்குமிடையே அதிகாரப் போட்டியானது முறுகல் நிலை நிலைநோக்கி வளர்ந்து கொண்டது.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பதவியேற்று இரண்டு வருடங்கள் ஆகின்றன. இந்த இரண்டு வருட காலத்தில் ரணில் அரசாங்கம் ஒரே யொரு உருப்படியான வேலையைச் செய்து கொண்டது. அதாவது பத்தொன்பது வருடகால யுத்தத்திற்கு ஓய்வு கொடுக்கும் வகையில் விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றிற்கு வந்து யுத்த நிறுத்தம் செய்து கொண்டதுடன் பேச்சுவார்த்தையையும் ஆரம்பித்துக்

**வெகுஜனன்**

கொண்டது. இத்தகைய நடவடிக்கையை ரணில் தலைமை யிலான அரசாங்கம் செய்ய முன்வந்த போது அரசியலமைப்பையோ அன்றி அதன் பிரதான பதவியாளரான ஜனாதிபதியையோ அதிக கவனத்திற்கு எடுத்துக் கொள்ளவில்லை என்பது கவனத்திற் குரியதாகும் ரணில் விக்கிரமசிங்கா மிகத்துணிகரமான முயற்சியில் இறங்கிக் கொண்டார். என்று கூறப்படுவதற்குப் பின்னால் மூன்று முக்கிய விடயங்கள் இருந்தன. ஒன்று, புலிகள் இயக்கம் பல்வேறு அகபுறக் காரணங்களால் யுத்த நிறுத்தத்திற்கு வரவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்தது. இரண்டாவது இலங்கை மக்களிடையே குறிப்பாகத் தென்னிலங்கை மக்கள் மத்தியில் சமாதானத்திற்கான அபிப்பிராயம் மேலோங்கி நின்றதுடன் பொருளாதார நிலைமைகள் நலிவடைந்து கொண்டிருந்தன. மூன்றாவது அமெரிக்க உள்ளிட்ட மேற்குலக சக்திகள் ரணிலுக்கு முழுப் பக்கபலமாக இருந்து கொள்ளும் நிலைப்பாட்டைக் கொண்டிருந்தன.

இவ்வாறு உள்நாட்டு வெளிநாட்டு நிர்ப் பந்த சூழலில் உருவாகிய புரிந்துணர்வு யுத்த நிறுத்த பேச்சுவார்த்தை சூழலை அவை உள் நோக்கங்கள் பலவற்றைக் கொண்டிருந்த போதிலும் எக்காரணம் கொண்டும் நிராகரிக்க முடியாது என்பதே நியாயமான நிலைப்பாடாகும். யுத்தத்தை ஜே.ஆர். தலைமையில் ஆரம்பித்த ஐக்கிய தேசியக் கட்சியானது இன்று ரணில் தலைமை யில் அதனை நிறுத்தி பேச்சுவார்த்தை மூலமான தீர்வுக்கு முன் வந்திருப்பது பேரினவாதத்தைக் கைவிட்டுவிட்டது என்பதல்ல அதன் அர்த்தம். பொருளாதார அரசியல் ராணுவ நிர்ப்பந்த சூழலின் தாக்கத்திற்கு நின்று பிடிக்க முடியாமையேயாகும். இதனை போராடும் சக்திகளும் உரிமை வேண்டி நிற்கும் மக்களும் பயன்படுத்துவது தவறாகாது. ஆனால் அடிப்படை அம்சங்களை மறக்கவோ நிராகரிக்க வோ முற்படாதவாறு கவனத்தில் இருத்திக் கொள்வது அவசியம்.

இத்தகைய ஒரு யுத்த நிறுத்த பேச்சு வார்த்தைச் சூழலை நாட்டின் பேரின வாத ஜே.வி.பி சக்திகளும் ஆளும் வர்க்கத்தின் அதிகாரப்பசியுடன் எதிர்த் தரப்பில் உள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரும் குழப்பிக் கொள்ள முனைந்து வந்திருக்கிறார்கள். அவரகள் மக்களைத் திரட்டி ஒரு வெகுஜன நடவடிக்கை மூலம் எதிர்ப்பில் தோல்வி கண்ட நிலையிலேயே நிறை வேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தும் வழியில் இறங்கிக் கொண்டனர். மூன்று அமைச்சுப் பொறுப்புக்களைக் கை யேற்று பாராளுமன்றத்தை இருவாரங்கள் இடைநிறுத்தி வைத்ததன் மூலம் ஜனாதிபதி அரசியலமைப்பு நெருக்கடியை அடுத்த கட்ட முறுகல் நிலைக்கு இட்டுச் சென்றார்.

இந்நடவடிக்கையின் பின்னால் கடந்த இருபது மாதங்களாக யுத்த நிறுத்தம் பேச்சு வார்த்தையைக் குழப்புவதில் முன்நின்று வந்த இந்தியா உள்ளது என்ற சந்தேகம் வலுப்பெற்று நிற்கின்றது. ஏனெனில் புலிகள் இயக்கம் தனது இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு போசனைகளை அரசாங்கத்திற்கு கையளித்த மூன்று நாட்களின் பின்பாகவே ஜனாதிபதி தனது உச்ச அதிகாரத்தைப் பயன்படுத்தி பேச்சு வார்த்தை தொடர்வதைச் செயலிழக்கச் செய்திருக்கிறார். இதில் இந்திய ஆலோசனை இல்லை என எவராவது கூற முற்படுவது அரசியல் அறியாமைத் தனமே ஆகும்.

இன்று இலங்கையின் அரசியலமைப்பில் பெரும் நெருக்கடி உருவாகி வளர்ந்து நிற்கின்றது என்பது உண்மையேயாகும். ஆனால் இந்த நெருக்கடி எழுந்துள்ள சூழலும் அதில் சம்மந்தப்பட்டுள்ள இரு தரப்பினரதும் உள்நோக்கங்கள் நன்கு விளங்கிக் கொள்ளப்பட வேண்டியவை களாகும். இலங்கையின் நிலவுடமை முதலாளித்துவ மேட்டுக்குடி ஆளும் வர்க்க சக்திகளின் பொருளாதார அரசியல் சமூக பண்பாட்டு துறைகள் அனைத்தையும் சொத்து சுக ஆட்சி அதிகார நிலை நின்று பேணுவதை யையே இரண்டு கட்சிகளும் பிரதிநிதித்துவம் செய்து வந்துள்ளன. 1972ன் அரசியலமைப்பை உருவாக்கிய சிறிமாவோ தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கம் உயர்வரக்க மேட்டுக்குடிகளுக்கே முன்னுரிமை வழங்கியது. பின்பு அதனை மாற்றியமைத்த 1978ம் ஆண்டு ஜே.ஆரின். இன்றைய அரசியலமைப்பும் அதனையே செய்து கொண்டது.

ஆளும் வர்க்க சக்திகளில் எந்தத் தரப்பினர் ஆட்சி அதிகாரம் செலுத்துவது என்ற மேட்டுக்குடிப் போட்டியே இன்றைய அரசியலமைப்பு நெருக்கடியின் பிரதான மையப் புள்ளியாகும். கடந்த கால் நூற்றாண்டு கால நிறைவேற்று அதிகார அரசியலமைப்பு நடைமுறையின் கீழ் உயர்வர்க்க மேட்டுக்குடியினருக்கு பாதகமாக வரக் கூடிய எந்தவொரு நடவடிக்கைக்கும் ஆதரவாக நிறைவேற்று அதிகாரம் பயன்படுத்தப்படவில்லை என்பது நோக்க வேண்டியதாகும். ஆனால் நாட்டின் சகல மக்களையும் பாதிக்கும் பிரதான பிரச்சினையும் தேசிய இனங்களுக்கு தீங்கு இழைக்கும் ஒன்று மான இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் ஒரு முயற்சி நிறைவேற்று அதிகாரத்தால் தடுத்து நிறுத்தப்பட்டு சீர்குலைக்கப்படும் அபாயத்திற்குள் தள்ளப்பட்டுள்ளது.

அதேவேளை அந்நிய ஏகாதிபத்திய சக்திகளும் அயல் தேச ஆதிக்க சக்திகளும் பல்தேசிய நிறுவனங்களும் நமது வளங்களைக் கொள்ளை யிட்டுச் செல்லும் சகல சந்தர்ப்பங்களும் இன்றைய அரசியல் அமைப்பும் நிறைவேற்று அதிகாரமும் அவற்றுக்கு பக்கபலமாகப் பயன்படுத்தப்பட்டு ஆதரவு வழங்கி வந்துள்ளமையைக் காணலாம். இதிலிருந்து இன்றைய அரசியலமைப்பும் அதன் நிறைவேற்று அதிகாரமும் உண்மையில் இந்நாட்டின் ஏகப் பெரும் பான்மையான உழைக்கும் மக்களுக்கோ ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கோ சார்பான ஒன்றல்ல என்பதனை வெளிப்படையாக எடுத்து விளக்குகின்றது.

இன்றைய அரசியலமைப்பு நெருக்கடி என்பது ஆளும் வர்க்க சக்திகள் தமக்கிடையில் நடாத்தும் ஒரு வகை யான அரசியல் சூதாட்ட மேயாகும். இதில் மக்களுக்கான தருமமோ நீதியோ எதுவும் இல்லை. ஒரு நாட்டின் சமூகக் கட்டமைப்பைப் பாதுகாத்து நிலைநிறுத்தி வழிநடாத்திச் செல்வதில் அரசியல் அமைப்பு முக்கியமானது. இது முதலாளித்துவத்தின் கீழும் அதே போல் சோலிஷசத்தின் கீழும் அவசியமான தாகும். ஆனால் இன்று நெருக்கடிக்கு உள்ளாகி நிற்கும் அரசியலமைப்பு முற்றிலும் நிலவுடமை முதலாளித்துவ ஏகாதிபத்திய சார்பும் அவற்றைப் பாதுகாக்கும் அரசியலமைப்பே யாகும். அதனால் உழைக்கும் வர்க்கங்களுக்கோ தேசிய இனங்களுக்கோ எவ்வித சாதக அம்சங்களும் இருக்க முடியாது என்பதே அடிப்படை உண்மையாகும்.

படிப்பகம்

www.padippakam.com



# ஜே.வி.பி.யின் கனவும் சந்திரிகாவின் தடுமாற்றமும்

ஜே.வி.பி என்றழைக்கப்படும் மக்கள் விடுதலை முன்னணி எங்கே தொடங்கி இன்று எங்கு வந்து நிற்கின்றது என்பதை ஒருவர் அரசியல் அறிவு பூர்வமாகச் சிந்தித்தால் மட்டுமே அக் கட்சியின் உள்ளார்ந்தத்தைக் கண்டு கொள்ளமுடியும். ஜே.வி.பிக்கு 35 வருட அரசியல் வரலாறு உண்டு. 1971ல் .1988-89து கால கட்டத்தில் இருதடவைகள் செங் கொடியுடனும் இளைஞர் புரட்சி என்ற தோற்றத் துடனும் ஆயுதக் கிளச்சி நடர்த்திய வர்கள் ஜே.வி.பியினர்.. மாக்சிசத்தை கொச்சைப்படுத்தி இடதுசாரிக் கருத்துக்களை மக்கள் மத்தியில் வெறுப்பு உள்ளாக்கி சேகுவேரா என்ற புரட்சியாளனின் பெயரைக் கொச்சைப் படுத்தி ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட இளைஞர்-யுவதிகளை ஆளும் வர்க்க இரத்தவெள்ள ஒடுக்குமுறைக்குப் பலி கொடுத்து அதையிட்டு இன்று வரை சுயவிமர்சனம் செய்யவோ மக்கள் மத்தியில் மன்னிப்போ கேட்காத ஒரு அரசியல் இயக்கமாகவே ஜே.வி.பி இருந்து வருகின்றது.

இளைஞர் ஆயுதப் போராட்டம் என்றும் பின்பு குத்துக் கரணம் போரட்டு பாராளுமன்றம் என்றும் சந்தர்ப்பவாத அரசியல் நடாத்திவந்தவர்கள் ஜே.வி.பி யினர். அத்தகையவர்கள் இன்று பாராளுமன்ற அதிகாரத்தில் பங்கு கேட்டு சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் கூட்டுச் சேர்வதற்குப் பேரம் பேசுகிறார்கள். இப்போது உள்ள பாராளுமன்றத்தின் பதினைந்து ஆசனங்களை இரண்டால் பெருக்கிக் கொள்வதற்கு பேரினவாதக் கூச்சலின் உச்சத்தைத் தொட்டு நிற்கிறார்கள். "அப்பன் ஆறடி என்றால் மகன் பதினாறடி பாய்கிறான். என்பதற்கினங்க பழைய பாராளுமன்ற இடதுசாரிகள் அன்று தமது ஆசனங்களுக்காக அவ்வப் போது இனவாதம் பேசினார்கள். இன்று அதே வழியில் அவர்களையும் விட ஜே.வி.பி யினர் மிக உரத்த குரலில் பேரினவாதம் பேசுகிறார்கள். அதன் காரணமாகத் தமது செஞ்சட்டைகளையும் செங் கொடி களையும் தூரத்தில் மறைத்து வைத்து விட்டு தேசப் பற்றாளார்களகி சிங்கக் கொடிகளைக் தூக்கி வெள்ளை. கறுப்பு உடையணிந்து பௌத்த குருமாரின் காலடியில் வீழ்ந்து வழங்கி பேரினவெறிப் பேச்சுகளுக்கு ஆசீர்வாதம் வாங்கி நிற்கின்றனர். இவர்களது கனவு முழுவதும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்த ஒரு



கூட்டரசாங்கத்தில் பிரதான அமைச்சர் பதவிகளைப் பெற்று ஆட்சி அதிகாரப் பங்காளிகளாகிக் கொள்வதேயாகும். தனித்து நின்று தமது பாராளுமன்றக் கனவுகளை நிறைவேற்ற முடியாது என்பதை உணர்ந்து கொண்டமையால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் உடன் பாட்டிற்கு வர கடும் பிரயத்தனங்கள் செய்கிறார்கள் இதில் வேடிக்கை தரும் விடயம் யாதெனில் இவர்களது சிறிலங்கா சுதந்திரக் கட்சிக் கூட்டளி களாக விளங்குபவர்கள் அதற்குள் உள்ள இடதுசாரி சார்பு ஜனநாயக சக்திகள் அல்லர். அசல் வலதுசாரி களான அனுரா பண்டாரநாயக்கா. சரத்அமுனுகம. மங்கள சமரவீரா. அர்சுண ரணதுங்கா போன்றவர்கள் தான் ஜே.வி.பி யினரின் நம்பிக்கைக் குரிய கூட்டாளிகள். இந்த இடதுசாரி வலதுசாரி "சிகப்பு நீலத் தோழர்கள்" இணைந்து தான் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு எதிராகப் பேரினவாதக் கூக்குரல் இட்டும் வருகின்றனர். எனவே ஜே.வி.பி யின் மோசமான சந்தர்ப்பவாத பிற்போக்கு நிலைப்பாட்டை விளங்கிக் கொள்ள மேற் கூறியவைகள் போதுமானவையாகும்.

இத்தகைய நிலையிலேயே சிறிலங்கா



சுதந்திரக் கட்சியும் அதன் தலைவியான ஜனாதிபதியும் ஜே.வி.பி யுடன் கூட்டுச் சேருவது பற்றி கடுமையான தடுமாற்றத்துடன் இருந்து வருவதை

**நமது அரசியல் நிருபர்**

அவதானிக்க முடிகிறது. சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இன்று ஒருமுகத் தன்மை நிலவவில்லை. அது தேசிய முதலாளித்துவ நிலைப்பாட்டுடன் இருந்த காலத்தின் குறிப்பிடக் கூடியளவான முற்போக்கு அம்சங்கள் இன்று அங்கே காணப்பட வில்லை. சிலர் இன்னும் "அவலை நினைத்து உரலை இடிப்பது" போல் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் முற்போக்கையும் யூஎன்.பி எதிர்ப்பையும் தேடிப்பிடிக்கலாம் என அலைகின்றனர். ஆனால் அக்கட்சியின் பொருளாதாரக் கொள்கைகளும் அரசியல் நடைமுறை களும். ஆளும் வர்க்கத்தின் மற்றொரு பகுதி தான். மேட்டுக்குடி அரசியலும் ஏகாதிபத்திய சார்பும் தேசிய பொருளதாரம் தேசிய நலன்களைக் கைகழுவிக் கொண்ட நிலையும் தான். நிலவுடமை வழிவந்த மேட்டுக்குடித் திமிர்த்தனமும் சொத்து சுக ஆதிக்கமும் அதனைச் சுற்றிய உயர்வர்க்க



கூட்டமும் தான் சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்பதை மறக்கும் எவரும் அதன் வர்க்க அரசியலின் நிலைப்பாட்டைப் புரிந்து கொள்ள இயலாது. இலங்கையின் ஆளும் வர்க்கம் என்ற நாணயத்தின் ஒரு பக்கம் யூஎன்.பி என்றால் மறுபக்கம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியேயாகும். இக்கட்சி முன்பு இடதுசாரிகளுடன் இணைந்து நின்றமை காரணமாக ஆட்சி அதிகாரத்தைப் பெற முடிந்ததும் அதனால் ஒரிரு முற்போக்கு நடவடிக்கைகள் எடுக்க முடிந்தமையும் உண்மையே. ஆனால் மீளவும் அந்தக் கட்சியினால் இன்றைய சூழலில் செய் முடியாதளவுக்கு அக்கட்சி முழுமையா மாற்றமடைந்து விட்டது. ஜே.வி.பி யுட இணைவதாலோ அன்றி பழைய சா வெளுத்துப் போன பெயராளவு இட சாரிகளுடன் இருப்பதாலோ சிறிலங் சுதந்திரக் கட்சி முற்போக்கான மு கொண்டதாக மாறிவிட முடியா எத்தகைய வர்க்க சக்திகளை பொருளாதார நலன்களையும் ஒ கட்சி பிரதிநிதித்துவம் செய்கிறது என் அளவு கோலே அக்கட்சி பற்றி உண்மைகளை அளந்து கொள் உதவக்கூடியதாகும். இவற்றுட தேசிய இனப்பிரச்சினை யுத்தமா பிரதான இடத்தை எடுத்துள் இன்றைய சூழலில் அதன் மீதா பார்வையும் அணுகுமுறையும் எவ்வா ஒரு கட்சியால் கையாளப்படுகின்ற என்பதும் முக்கிய அளவு கோல்களி ஒன்றாகிறது.

இவற்றின் அடிப்படையில் நோக்கு போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியு ஜனாதிபதி சந்திரிக்காவும் ஐக்கி தேசியக் கட்சியின் நிலைப்பாட்டிற் மாற்றான நிதானம் மிக்க உறுதிவாய் ஒருமாற்றுக் கொள்கையை முன்வை கவோ செயல்படுத்தவோ முடியா தடுமாற்ற நிலையிலேயே இருந் வருகின்றனர். ஆட்சி அதிகாரம் மீதான அக்கறையினால் மட்டும் ஆதிக்க போட்டி அரசியலில் ஜனாதிபதி தனத நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி வருகிறாரே தவிர நாடு மக்கள் தேசிய இனப்பிரச்சினை என்பன பற்றிய தூர நோக்கிலான அடிப்படைத் தீர்வுகாண்பதற்கல்ல என்பது தெளிவாகிறது.

அதேவேளை ஜனாதிபதி நல்லிணக்க அரசாங்கம் பற்றிய கருத்துக்களை முன்வைத்து வருவதால் ஜே.வி.பி தனது கனவு பலிக்காது போய்விடுமோ என அஞ்சி நிற்கிறது. ஜனாதிபதிக்கு அக புற அழுத்தம் காரணமாக ஜே.வி.பி யுடன் அவசரப்பட்டு ஐக்கியப்படுவதில் தாமதம் காட்டி வருகிறார். ஆனால் நாட்டின் நிலைமைகள் ஏதோ ஒரு நிலைப்பாட்டிற்கு இவர்களைத் தள்ளிச் செல்லவே செய்யும். இன்னும் சிறிது பொறுத்திருந்து பார்க்கும் போது தான் மேலும் சில நிலைமைகளைக் தெளிவாகக் காண முடியும்.

# கல்வியும் சமூகமும்

## ஒரு வரலாற்றுப்புல நோக்கு

இன்னொருபுறம், கல்வியின் முக்கியத்துவமும் பரவலான கல்வி அறிவின் முக்கியத்துவமும் பழங்காலங்களிலேயே உணரப்பட்டன. குறிப்பாகச் சாதியச் சமூக அடக்குமுறைகளை நிராகரித்த பௌத்த, சமண நெறியாளர்கள் அந்தச் சமூக எல்லைகளைக் கடந்த கல்வியறிவை வற்புறுத்தியதற்கு ஆதாரங்கள் உள்ளன. "எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டுங் கண்ணென்ப வாழும் உயிர்க்கு" என்ற குறள் இதை உணர்த்துவது. ஆயினும் இத்தகைய எழுத்தறிவும் அதற்கடுத்து எண்ணறிவும் யாரால் யாருக்காக எப்படி வழங்கப் பட்டிருக்கலாம் என்பதைக் கவனித்தால், எல்லார்க்கும் பொதுவான ஒரு கல்விமுறை என்பது நிச்சயமாக நிலவுடைமை, அடிமைமுறைச் சமூகங்களில் அமைந்திருக்க இடமில்லை என்பதை நாம் உணர்வோம்.

அதைவிடவும், கல்வி என்பது ஒரு நிறுவன அடிப்படையில் ஒரு பாடத்திட்ட அடிப்படையில் முதலாளியத்திற்கு முந்திய சூழலில் வழங்கப்படுவதற்கான தேவையும் இருந்ததில்லை. கல்வி என்பது குறிப்பிட்ட துறைகளிற் தேர்ச்சிபெற்ற ஒரு ஆசானிடமிருந்தோ சில சமயங்களில் ஒன்றுக்கு மேற்பட்டோரிடமிருந்தோ மாணாக்கர்களாற் பெறப்பட்டது. குருகுல வாசம் என்பதன் தேவையும் இடையொட்டியே அமைந்தது.

ஒருவருக்கு எத்தகைய கல்வி தேவைப்படுகிறது என்பது சமூகத்தில் அவருக்கு விதிக்கப்பட்ட இடத்தாலேயே முடிவாகிறது. எனவே அரசகுலத்திற் பிறந்து நாட்டின் நிருவாகத்திலும் தமது அரசைப் போர் மூலம் தக்கவைப்பதிலுங் கவனஞ் செலுத்த வேண்டியவர்கட்கும் அவர்கட்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்கி அன்றாட அலுவல்களைக் கவனிக்க வேண்டியவர்கட்கும் ஒரேவிதமான கல்வி வழங்கப்படாது. எனினும் அவர்கள் ஒரே குருவிடம் சில விடயங்களைக் கற்க இடமுண்டு. போர்ப்பயிற்சி போர்த்தொழில் புரிவோரை அல்லாத யாருக்கும் வழங்கப்பட இடமில்லை. நிரந்தரமான படையினர் என இல்லாமல் தமது நாட்டின் மீதான படையெடுப்பின் போதே. இன்னொரு நாட்டின் மீதான போரின் போதோ அணிதிரட்டப்படும் மக்கள் முன்கூறிய சிறப்பான போர்ப்பயிற்சி பெற்றவர்களல்ல.

அரச நிருவாகம் என அமையாத இடத்தில், கல்வியின் தேவை வாழ்க்கை முறையை ஒட்டியே அமைகிறது. பெருமளவும் குடும்பச் சூழலிலும் ஒரு குறிப்பிட்ட தொழில் புரிவோர் கூடி வாழும் சமூகங்களில் அச்சமூகச் சூழலிலும் கல்வி பயிற்றப்படுகிறது. அதன் தலையாய நோக்கம் வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்கான திறமைகளை இளம் பிள்ளைகளிடையே வளர்த்தெடுப்பதாகவே அமைந்திருக்கும். சாதி முறை இறுக்கமாக அமைந்த சமுதாயதொன்றிற் கல்வி மிகவும் வரையறைக்குட்பட்டே இருப்பது தவிர்க்க இயலாது.

இதைவிட, மருத்துவம், சோதிடம், மாந்திரிகம் போன்ற துறைகளிலும் கைத்தொழில்களிலும் ஈடுபட்டவர்கள் தமது ஆற்றல்களைத் தமது குடும்பத்துக்குள் இல்லாவிட்டால் குலத்திற்குள்ளேயே தலைமுறை தலைமுறையாகப் பேணுவதுடன், பல துறைகளில், அறிவு பரவலாகாமல் தடுக்கும் முறையும் நமது மரபில் இருந்துவந்துள்ளது. முதலாளியம் தோன்றும்வரை இவ்வாறான ஒரு போக்கே நிலவுடமைச் சமுதாயங்களிற் காணக்கூடிய ஒன்றாக இருந்திருக்க முடியும். முழுச் சமூகத்துக்குமான கல்வி என்பது ஒரு இனக்குழுமம் ஒரு பொதுவான வாழ்க்கை முறையைக் கடைப்பிடித்து வாழுகிற சமூதாயங்களில் மட்டுமே இயலுமானது. கெலனியம் ஆபிரிக்காவில் ஊடுருவிச் சமூகங்கள் அதன் பாதிப்புக்கு உள்ளாகும் வரை இப்படிப்பட்ட வாழ்க்கை முறையும் தொடர்ந்து வந்துள்ளன. அச் சமுதாயங்களின் சீரழிவு அவர்களது வாழ்க்கை முறையையும் அதையொட்டிய கல்வி முறையையும் சீர்குலைத்து அதனிடத்தில் கொலனியத்தின் தேவைகளையொட்டிய அமைப்புக்கள் உருவாக இடமளித்தது.

பரந்த அளவிலான அறிவுக்கான தேடலும் வேட்கையும் எல்லாச் சமுதாயங்கட்கும் உரியது. அத்தகைய ஆவலும் முயற்சியும் இல்லாமல் எந்தவொரு சமுதாயமும் முன்னேறி வளர்ச்சி காண இயலாது. எனினும், வர்க்கங்களாகப் பிளவுபட்ட சமூகங்களில் உழைப்பின் பங்கீடு சமனற்றது. எனவே உற்பத்தியுடன் நேரடியான உறவு இல்லாத அறிவுக்கான தேடலுக்குரிய ஓய்வு உடல் உழைப்பில் ஈடுபடாத ஒரு சமூகப்பிரிவிற்கே கிட்டுகிறது. இவர்கள் சமயம், மெய்யியல், வானியல், சோதிடம் போன்ற துறைகளிலும் சான்றோர்கட்கே உரியன என்று கருதப்படும் செவ்வியல் இலக்கியத்திலும் மொழிப்பயிற்சியிலும் மேலோங்கவும் ஆதிக்கஞ் செலுத்தவும் அதன் மூலம் சமூகத்தில் உயர்ந்த நிலையிற் தம்மைப் பேணவும் இயலுமாகிறது.

உடலால் உழைப்போர் தாழ்ந்தோர் அறிவாற் பிழைப்போர் உயர்ந்தோர்

**பேராசிரியர் சி. சிவசேகரம் (4)**

என்ற கருத்து நிலவுடமைச் சமுதாயத்தில் மிகவும் வலுப்பெற்றது. இதைப் பல நாடுகளின் வரலாற்றிலும் நாம் காணலாம். வாய்மொழி இலக்கியமும் நாட்டார் கலைகளும் சமூக நடைமுறைகளுமே உழைக்கும் மக்களுக்கு எளிதிற் கிட்டக்கூடியனவாக இருந்து வந்தன. விலக்காக, உழைக்கும் குடும்பங்களிலிருந்து வந்து உயர்வு பெற்றவர்கள் உள்ளனர். ஆனால் இது சமுதாய வழமையல்ல. இவ்வாறான வாய்ப்புக்கள் நிலவுடமைச் சமுதாயங்களில் மிக அரியன. முயற்சியால் மனிதர் உயர்வு எய்தலாம் என்பது உண்மையே ஆயினும், அதற்கான எந்த உத்தரவாதமும் இல்லை. அது எல்லாருக்குமே கிட்டக்கூடியதும் இல்லை.

தென்னாசியச் சூழலில் பல்கலைக்கழகங்களையொத்த அமைப்புக்கள் தோன்றியிருக்கின்றன. நாலந்த, தக்ஸிலா என்பன இன்றும் பேசப்படும் நிறுவனங்கள். இவற்றின் தோற்றத்திற்கும் இந்துத்துவத்துக்கு எதிராக இந்தியாவில் ஏற்பட்ட சமுதாய எழுச்சிகட்கும் மாற்றங்கட்கும் பெரிய பங்குண்டு. அறிவைப் பன்முகப்படுத்துவதற்கும் பரவலாக்குவதுமே இத்தகைய பல்கலைக் கூடங்களது நோக்கமேயாயினும் அவையும் குறிப்பிட்ட சில மேல்மட்டச் சமூகப்பிரிவினருக்கே அதிகம் பயன்பட்டன. ஏனெனிற் கல்வி கற்பதற்கு ஒருவர் தனது முழு நேரத்தையும் ஒதுக்குவதற்குப் பொருளாதார உதவி தேவை. அது தனிப்பட்ட வசதியாக இல்லாது போனால் ஒரு நிறுவனஞ் சார்ந்து அமையவேண்டியிருப்பது தேவையாகும்.

மதபீடங்களிடம் இருந்த அரசியல், சமூகச் செல்வாக்கும் அரச உதவிகளும் மத நிறுவனங்கட்குக் கல்வித்துறையிற் பெரும் வலிமையை வழங்கின. எங்கெங்கே மதப்பீடங்கட்கும் அரசுக்கும் நெருக்கமான உறவு இருந்ததோ அங்கெல்லாம் மதபீடங்கள் தமது கல்விப் பணிகட்கு அரச ஆதரவு பெற்றுள்ளன. ஆசியாவின் பல நாடுகளில் மத பீடங்கள் எழுத்தறிவித்தலில் முக்கியமான பங்களித்துள்ளன. இது போலவே இஸ்லாம், கிறிஸ்தவ மதபீடங்கள் மேற்காசியாவிலும் ஐரோப்பாவிலும் கல்வித்துறையிற் பங்காற்றியுள்ளன. இங்கிலாந்தின் முதலாவது பல்கலைக்கழகமான ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகமும் மதகுருமாரைப் பயிற்றுவிப்பதையே தலையாய பணியாகக் கொண்டிருந்தது.

பொதுவாகச் சொல்வதானாற், கல்வி என்பது எல்லாருக்கும் பொது வானதாக, எல்லாருக்கும் எட்டக்கூடியதாகச், சமூக வேறுபாடின்றி வழங்கப்பட வேண்டும் என்பது நடைமுறையில் இல்லாவிடினும் கொள்கை அளவிலாவது ஏற்கப்படுவதற்குச் சனநாயகக் கோட்பாட்டின் வருகை அவசியமாயிற்று. சட்டத்தின் முன் எல்லாரும் சமம் எல்லாருக்கும் ஒரே நீதி என்பது ஏற்கப்படாமல் எல்லாருக்கும் சம வாய்ப்பு என்பதைக் கற்பனை செய்யவும் முடியாது.

முதலாளியத்தின் வருகையின் பின்னரே சனநாயகம் என்ற கருத் தாக்கம் உருவானது. சனநாயகம் என்பது முதலாளியம் விரும்பி உருவாக்கிய ஒரு இலட்சியமல்ல என்பதையும் முதலாளிய சனநாயகம் என்பது மனித சமத்துவத்தை இலக்காகக் கொண்டதல்ல என்பதையும் நாம் அறிவோம். அதுபோலவே, முதலாளியம், கல்வியின் பரவலாக்கத் தையும் கல்விக்கான சில பொதுப்படையான இலக்குகளையும் தனது நிலைப்பும் நீடிப்பும் கருதியே ஏற்றது.

முதலாளியத்தின் கீழ் கல்வி பரவலாக்கப்பட்டாலும் அது நிலவுடமைச் சமூகத்தின் எல்லாப் பண்புகளையும் தூக்கி எறியவில்லை. அப் பண்புகளிற் சில இன்னமும் எஞ்சியுள்ளன. அது மட்டுமன்றி முதலாளியம் கொலனிய முறை மூலம் தனது ஏகாதிபத்திய நோக்கங்களை விரிவுபடுத்திபோது அந்தத் தேவையைக் கருத்திற் கொண்டே தனது கொலனிகளிற் கல்விமுறைகளைப் புகுத்தியது.

கொலனிகளின் பழைய பொருளாதாரமுறையையும் அதையொட்டிய உற்பத்தி உறவுகளையும் முற்றாகச் சிதைக்காமல் அவற்றைத் தனக்கு வசதியாகப் பயன்படுத்திய கொலனியம் கல்வி முறையிலும் சமூகப் பாகுபாடுகளைப் பேணித் தனது கொலனிய நிருவாகத்தை வலுப்படுத்த முற்பட்டது. நிலவுடமைச் சமுதாயச் சிந்தனைகளை அழிப்பது கொலனியத்துவத்தின் தாயகத்தில் முதலாளியத்துவத்தின் தேவையாக இருந்திருந்தாலும் நிச்சயமாக அக்கொள்கை கொலனிகளில் கடைப்பிடிக்கப்படவில்லை.

அரசுக்கும் மதபீடங்கட்கும் இருந்த இணக்கப்பாடு கொலனிகளில் மதமாற்றத்தை நோக்கமாகக் கொண்ட ஒரு கல்வி முயற்சியில் கிறிஸ்துவ திருச்சபைகட்கு ஒரு முக்கியமான பங்கை இயலுமாக்கியது. இத்தகைய ஒரு பங்களிப்பு ஏன் போர்த்துக்கேய, டச்சுக் கொலனி ஆட்சிக் காலங்களில் நிகழாமல் பிரித்தானியர் ஆட்சியில் நிகழ்ந்தது என்பதும் நம் கவனத்துக்குரியது.

- வளரும்....

படிப்பகம்

www.padippakam.com



# வெள்ளை மாளிகையைத் தரிசித்த ரணில்! அமெரிக்க ஆசீர்வாதம் பெற்றார்!!

உலகை ஆதிக்கம் செய்ய மூல உபாயம் வகுத்திருக்கும் எந்தவொரு ஏகாதிபத்திய வல்லரசும் இலங்கையைத் தமது வரைபடத்தில் முக்கிய இடமாகக் குறித்திருக்கும் என்பதில் ஐயமிருக்க முடியாது, சூரியன் அஸ்தமிக்காத ஏகாதிபத்தியமாக விளங்கிய பிரித்தானியா முன்பு இலங்கையின் கேந்திர முக்கியத்துவத்தை அறிந்திருந்தமையினாலேயே இறுதி வரை அதனைத் தனது பிடிக்குள் வைத்திருந்தது. அதன் பலம் குறைந்து வெள்ளைக் கிழப்புலியாக மாறிய பின்பு அந்த இடத்தை அமெரிக்கா எடுத்துக் கொண்டது.

இலங்கை தென்னாசியப் பிராந்தியத்தில் மட்டுமன்றி ஆசிய பசுபிக்கு முழுவதிற்குமான ஒரு கேந்திர முக்கியத்துவம் மிக்க இந்து சமுத்திரத்தின் தீவாக இருந்து வருகின்றது. அத்துடன் மிகவும் பயன்தரக் கூடிய இயற்கைத் துறைமுகமான திருகோணமலையையும் கொண்டிருக்கின்றது. கொழும்பு, காலி, காங்கேசன் துறை போன்ற துறைமுகங்கள் நவீனமயப்படுத்தக் கூடிய வகையில் அவற்றின் அமைவிடங்கள் காணப்படுகின்றன. இந்திய – பாகிஸ்தானிய பெரு நிலப்பரப்பிற்கு மிக அண்மையாகவும் சீனப்பெரும் தேசத்துக்கு கிட்டியதான ஆசியப் பகுதியாகவும் இருந்து வருகின்றமை இலங்கையின் முக்கியத்துவத்தை முன்னிறுத்துகின்றன.

இவையனைத்தையும் உள்ளடக்கிய பொருளாதார அரசியல் ராணுவ மூலோபாய தந்திரோபாய அடிப்படையிலேயே அமெரிக்க ஏகாதிபத்தியம் இலங்கை மீதான தனது ஆதிக்கப் பிடிக்கு முயன்று வந்திருக்கிறது. குறிப்பாக பிரித்தானியரிடமிருந்து 'சுதந்திரம்' என்ற பெயரில் ஆட்சிப் பொறுப்பை உள்ளுர் உயர் வர்க்க குழாத்தினர் பெற்றுக்கொண்ட போது அவர்களிடத்தில் செல்வாக்குப் பெறுவதில் அமெரிக்கா முன்னின்றது. தரகு முதலாளித்துவ நிலைப்பாட்டைக் கொண்ட யூ என். பி. கட்சிக்குள் அமெரிக்கா நம்பிக்கை பெறுவதிலும் தமக்குரியவர்களை உருவாக்குவதிலும் எப்பொழுதும் முன்னுரிமை வழங்கி வந்திருக்கிறது. அர்த்தம் எதுவுமற்ற சொற்றொடரான 'தேசபிதா' என்பதற்குரியவரான டி.எஸ். சேனநாயக்காவும் அவரது குடும்பவாரிசுகளும் மகன் டட்லி



சேனநாயக்காவும் பிரித்தானிய ஏகாதிபத்திய விசுவாசிகளாகவே இருந்து வந்தனர். அதேவேளை யூ என். பிக்குள் ஜே. ஆர். ஜெயவர்த்தனா அமெரிக்க விசுவாசியாகவே ஆரம்பம் தொட்டு இருந்து வந்தார். அதனாலேயே 'யங்கி டிக்கி ஜே. ஆர்' என இடது சாரிகளால் கிண்டல் செய்து அழைக்கப்பட்டார். அவ்வாறே தனது உயிர் வாழ்வுக் காலத்தின் இறுதி மூச்சுவரை அமெரிக்க அடி வருடியாகவும் தாசானு தாசனுமாக செயலாற்றி மறைந்தவர். ஜே.ஆர். தனக்குப்பின்பும் யூஎன்.பியின் தலைமைத்துவம் தமது குடும்பத்திற்குள் இருப்பதையும் அத்தலைமை அமெரிக்க எசமானர்களுக்கு சேவகம் செய்து நிற்பதையும் உறுதி செய்து கொள்வதில் ஜே.ஆர். வெற்றியுடன் கண்களை மூடிக் கொண்டார் என்றே கூறுதல் வேண்டும்.

இத்தகைய தொடர்ச்சியான பின் புலத்திலிருந்தே ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் ஜே.ஆர்.வழியில் மேலும் நெருக்கமாக அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் உறவு பூண்டு அதன் நலன்களை முதன்மைப் படுத்தி செயலாற்றி வருகின்றது.

இலங்கையின் இரண்டு ஆளும் வர்க்க கட்சிகளான யூ என். பி சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்பனவற்றில் அமெரிக்காவின் முழு நம்பிக்கை யூ.என்.பி மீதானதாகவே இருந்து வந்துள்ளது. நிலவுடமை வழிவந்த தரகு முதலாளித்துவத்தை முற்று முழுதாகப் பிரதிநிதித்துவம் செய்யும் படு பிற்போக்கு வாத நிலைப்பாட்டை அக்கட்சி

**நமன்**

கொண்டிருந்தமை காரணமாகும். அதேவேளை நிலவுடமை முதலாளித்துவ வழிவந்த கட்சியாக இருந்த போதிலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு தேசியப் பொருளாதாரம் தேசிய நலன்கள் மீது குறிப்பிட்டளவு தூரத்திற்கு அக்கறையிருந்தது. அதனால் அன்றைய ஐம்பதுகளின் சூழலில் வளர்ந்து வந்த தேசிய முதலாளித்துவ வர்க்கமும் கிராமப்புற சிங்கள விவசாயிகளும் தேசிய வாத சக்திகளும் அதற்கு ஆதரவு கொடுத்து வந்தனர். அதனால் தேசிய முதலாளித்துவத்தின் ஒருவகை இயல்பான ஏகாதிபத்திய எதிர்ப்பு இருந்தும் வந்தது. ஆனால் அத்தகைய நிலைப்பாடுகள் எஸ்.டபிள்.யூ ஆர். டி. பண்டாரநாயக்கா அதன் பின் அவரது மனைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆகியோரது தலைமைத்துவ ஆட்சி அதிகார காலத்தோடு முடிவடைந்த விடயமாகி விட்டது. சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவை தந்தையினதோ அன்றி தாயினது நிலைப்பாட்டுடனோ ஒப்பிடுவதற்கு அவரிடம் எத்தகைய ஏகாதிபத்திய எதிர்ப்பும் எஞ்சி நிற்கவில்லை.

இலங்கை மக்களிடம் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயல்பாகவே இருந்து வந்துள்ள போதிலும் இரண்டு கட்சிகளும் பேரினவாத வெறிக் கூச்சலால் அவற்றை திசை திருப்பி யுத்தத்தின் ஊடாக ஏகாதிபத்தியத்திற்கு சேவை செய்து வந்திருக்கின்றனர். அமெரிக்கா சந்திரிகா அரசாங்கத்தை முழுமையாக யுத்தத்திற்குப் பயன் படுத்தியது. அதற்காக லக்ஷ்மன் கதிர்காமரை நகர்த்தும் காயாக்கிக் கொண்டது. நீலன் திருச்செல்வம் போன்ற மேட்டுக்குடி கனவான்கள் தமது இயல்பான வர்க்க குணத்திற்கேற்ப சந்திரிகாவை அமெரிக்கப் பக்கம் வைத்திருப்பதில் வெற்றி கண்டனர். ஆனால் அமெரிக்காவோ தமது உள்ளார்ந்த நச்சு நோக்கத்துடனேயே சந்திரிகாவைப் புறம் தள்ளி மீண்டும் யூ என். பி யைப் பதவிக்கு கொண்டு வருவதில் கண்களுக்குப் புலம்படாத கயிறுகள் மூலம் ஆட்டிப்படைத்துக் கொண்டது.

யூ.என்.பி ஆட்சி பிரதமர் ரணில் தலைமையில் கடந்த இரண்டு வருடங்களில் முற்று முழுதான அமெரிக்க ஏகாதிபத்திய ஆலோசனையுடனேயே வழிநடந்து வந்துள்ளது.

தொடர்ச்சி 11ம் பக்கம்

# ஏகாதிபத்தியமும் பெண்களும்

## சீவனோயபாயத் துறையும் மலிவான கூலி உழைப்பும்

இன்று, சீவனோயபாயத் துறையும் அதனோடு சேர்த்துப் பெண்களும் ஏகாதிபத்திய "அபிவிருத்தி முன்மாதிரியின்" கடுந்தாக்குதலுக்கு ஆளாகியுள்ளன. என்றாலும் சீவனோயபாயத் துறை ஏகாதிபத்தியத்துக்குப் பொருளியல் முக்கியம் வாய்ந்தது. ஒரு பொருளியற் தொகுதி என்ற வகையில், முதலாளியத்தினுள் இவ்வகையான முரண்பாடுகள் அடிக்கடி தோன்றுகின்றன. உதாரணமாகத் தொழிலாளரின் வருமானம் குறைவது நுகர்வுப் பொருட்களுக்கான சந்தையைக் குறுக்குகிற போதும் முதலாளிமார் தொழிலாளரது ஊதியத்தைக் குறைக்க முயல்கிறார்கள்.

தமது சீவனோயபாயப் பண்ணையிலிருந்து வரும் உற்பத்திகள் மூலம் தொழிலாளருக்கு ஓரளவு ஆதாரம் இருப்பதன் காரணமாக, சீவனோபாயத் துறை முதலாளியத்தின் மீளுற்பத்திச் செலவைக் குறைக்கச் சீவனோபாயத் துறை உதவுவதாகத், "திருமணமும் சந்தையும்" என்ற தொகுப்பு நூலில் பென்ஹோல்ற்–தொம்ஸென் கூறியிருந்தார். இவ்வாறு, ஒரு முதலாளியால் வழமையாக வழங்கியிருக்க வேண்டியதினும் குறைந்த ஊதியத்தை வழங்க இயலுமாகிறது. செலவில்லாமலேயே கையிருப்பாக ஒரு உழைப்பாளர் படையை முதலாளியம் வைத்திருப்பதைச் சீவனோயபாயத்துறை இயலுமாக்குகிறது என்று பென்ஹோல்ற்–தொம்ஸன் கருதுகிறார்.

முதலாளிய நுகர்பொருள் உற்பத்திக்குப் புறம்பான துறைகள் முதலாளியத்துக்கு முக்கியமானவை என்ற கருத்தை பென்ஹோல்ற்–தொாம்ஸன் மட்டும் கூறவில்லை. முதலாளியத்துவஞ் சாராத உற்பத்தி முறைகள் மீது மூலதனம் ஆதிக்கஞ் செலுத்தும் ஒரு சமூக அமைவு என்று கூறும் ஸமிர் அமின் 'வர்க்கமும் தேசமும்' (1980) என்ற நூலின் 228ம் பக்கத்திற் பின்வருமாறு கூறுகிறார்:

ஏகாதிபத்திய முறையை ஆராய்வது என்பது உலகு முழுவதற்கும் முதலாளிய உற்பத்தி முறை விரிவு செய்யப்படுவதை ஆராய்வதல்ல மாறாக ஒரு சமூக அமைவு முறையை ஆராய்வதாகும். இந்த முறையின் கீழ், எல்லா முதலாளியஞ் சாராத உற்பத்தி முறைகளும் மூலதனத்தின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்படுகின்றன. இதன்மூலம் பாட்டாளிகளாகாத உற்பத்தியாளர்களிடமிருந்து அவர்களது உபரி உழைப்பு பிழிந்தெடுக்கப்பட்டு மூலதனத்துக்கான லாபமாக மாற்றப் படுகிறது".

முதலாளியத்தின் ஆதிக்கத்துக்குக் கீழ்ப்படிவான பங்கேற்று இயங்கும் இத்தகைய முதலாளியந் சார்பற்ற உற்பத்தி முறைகளில் சீவனோயபாயத்துக்கான விவசாய உற்பத்தி ஒன்றாகும். மூன்றாமுலகின் தொழிற்துறை, விவசாயத்துக்குச் சார்பாக நோக்கும்போது புல்லுருவிப் பண்புடையது என்று ஸமிர் அமின் தனது நூலின் 145ம் பக்கத்திற் கூறுகிறார்:

"யதார்த்தமான அடிப்படைகளில், விவசாய விருத்திக்கு ஆதரவு தராமல், கிராமிய சமுதாயத்திலிருந்து (அரச வரிவிதிப்புக்கள், விவசாயிகளுக்கும் பாதகமான முறையில் அமைந்து உள்நாட்டுப் பரிமாற்றல் விலை வீதங்கள் போன்று) வரி வசூலித்தல் மூலம் தனது மூலதனத் திட்சியைப் பெறும் வகையில் மூன்றாமுலகத் தொழிற்துறை தொடர்ந்தும் புல்லுருவிப் பண்புடையதாகவே உள்ளது.

பெருமளவுக்கு ஏகாதிபத்திய நாடுகளின் ஆதிக்கத்துக்குட்பட்டதான மூன்றாமுலக மூலதனம் தனக்குச் செலவில்லாமலே இன்னொரு துறையில் தயாராகும் புதிய ஊழைப்புச் சக்தியை இடையீடில்லாமற் பெற்றுக்கொள்கிறது. இந்த உழைப்புச் சக்தியை ஒட்டிய "ஆரவுச் சுமை" இல்லை. ஏனெனிற் பெண்களும் குழந்தைகளும் தம்மாலியன்றளவுக்குச் சமாளித்துக் கொள்ளும்படி கிராமங்களிலேயே இருக்கவிடப்படுகின்றனர். இது பழைய தொரு சமூகப் பாங்காகும்: குடும்பத்திற்கான பிரதான பொறுப்புடையவர்களான பெண்கள், அதை இயலுமாக்குகிறார்கள். அது முற்றிலும் வேறுபட்ட ஒரு பொருளாதாரச் சூழலில் உருவான



சமூகப்பாங்கு, அது இப்போது பெண்களதும் குழந்தைகளதும் உயர்களை ஆபத்துக்குரிய நிலையில் வைத்திருக்கும் அதே வேளை மூலதனத்திற்கு லாபத்தைப் பெருக்குகிறது. ஏனெனில் மூலதனம் தனது ஆண் ஊழியர்கட்கு "ஆதார ஊதியம்" வழங்க வேண்டியதில்லை. சீவனோபாயத் துறையில் உள்ள உறவினர் தொழிலாளி வாழ்வதற்குத் தேவையான பகுதியைத் தருவதாற். பல வேளைகளிலும், மூலதனத்தாற் தொழிலாளரின் ஊதியத்தை இன்னுங் குறைத்துத் தொழிலாளியின் வாழ்வுக்குத் தேவையானதின் ஒரு பகுதியையே தருவதற்கு இயலுமாகிறது. ஸீலியா மேதர் மேற்கு ஜாவாவில் தொழில் பற்றிய தனது ஆய்விற் சுட்டிக்காட்டியது போல, ஊதியம் என்பது பிரதான வருமானமல்ல, அது வெறுமனே மேல்மிச்சமான ஒரு வருவாய் மட்டுமே.

மேற்படி முறைமை எவ்வாறு கொலனியத்தின் கீழ் உருவானது என்று பாபறா ஸ்றக்கியும் மாகறெற் ஃமேயும் விவரித்துள்ளனர் என்பது பற்றி ஷில்டா ஸ்கொட் 1984ல் வெளியான தனது நூலிற் குறிப்பிட்டுள்ளார். நிலத்தின் மீது வரி விதித்தன் மூலமே நிலத்தைப் பறித்தெடுத்ததன் மூலமும் ஐரோப்பியர்களுக்குச் சொந்தமான சுரங்கங்களிலும் பெருந்தோட்டங்களிலும் பயன்படக்கூடிய "மேலதிகமான உழைப்பாளர் படை" ஒன்று உருவாக்கப்பட்டது. உழைக்கும் போது, தாம் உயிரோடிருக்கப் போதுமான வருமானத்தையே தொழிலாளர்கள் பெற்றனர். தமது உழைப்பாளர் படையின் நீண்டகால இருப்புக்குப் பொருளாதார அடிப்படையிலோ அரசியல் அடிப்படையிலோ முதலாளிமாரைப் பொறுப்புடையவர்களாக்கவே, அவர்களுக்கு நிரந்தரமான ஒரு உழைப்பு நீரோடையை இந்த முறைமை வழங்கியது. சுரங்கங்களிலோ பெருந்தோட்டங்களிலோ கட்டிட நிர்மான வேலைகளிலோ போக்குவரத்துச் சேவையிலோ கூலிக்கு உழைப்பதன் மூலம் தொழிலாளர்கட்கு நோய், காயப்படுதல், வேலையிழப்பு, முதுமை என்பனவற்றின் போதோ அவர்களது குடும்பத்தினருக்கோ எந்த விதமான பாதுகாப்புங் கிட்டவில்லை. இச் "சமூக சேவைகள்" யாவுமே ஆபிரிக்காவினதும் ஆசியாவினதும் கிராமங்களின் சீவனோபாயப் பண்ணைகளின் பொறுப்பாகவே இருந்தன. 19ம், 20ம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் இருந்ததைவிடப்பெரும் அளவுக்குத் தமது தொழிலாளர் படையின் முழுச் செலவையும் பொறுப்பேற்பதிலிருந்து இம் முதலாளிமாருக்கு விலக்களிக்கப் பட்டிருந்தது.

சீவனோபாயத் துறையிற் பெண்களின் ஆதிக்கத்தின் வளரச்சி புதியதொரு நிகழ்வாகும். ஸ்றக்கியும் ஃபேயும், "சமூக சேவைகள்" இப்போது பெண்களின் உழைப்பால் உருவாகிறதாக விவரித்துள்ளார்கள். இதை ஹில்டா ஸ்கொட் தனது நூலின் 69ம் பக்கத்திற் பின்வருமாறு தொகுத்துரைக்கிறார்.

"அவர்கள் (பெண்கள்), இவ்வாறு மூன்றாமுலகின் கூலி உழைப்பாளர்கள் பண்பாட்டுக் கம்பனிகட்கு மலிவு விலலையிற் கிடைக்க உதவும் சமூகநல முறையின் பிரதான ஆதாரமாகியுள்ளனர். கிராமியச் சீவனோபாயத் துறை, தொழிலாளரது குழந்தைகளையும் குடும்பத்தைச் சேர்ந்தவர்களான உழைப்பதற்கு வலுவற்ற முதியோரையும் நோயாளிகளையும் கவனிப்பதோடல்லாமல், வேலையின்மையின் போதும் உடல்நலக் குறைவின் போதும் தொழிலாளியையும் கவனித்துக் கொள்கிறது."

பாட்டாளிகளாகாத உற்பத்தியாளர்கள் நடுவிலிருந்து மூலதனம் மேலதிக உழைப்பாளர்களை இழுத்தெடுப்பது லமிர் அமின் பற்றி பேசும் போதும் மூன்றாமுலகத் தொழிற்துறையை விவசாயத்துறை மீதான "புல்லுருவி " என அழைக்கும் போதும், இந்தச் சுரண்டலுக்குப் பலியானோர் பெருமளவிலும் பெண்களே. இன்றைய ஏகாதிபத்திய முறையின் கீழ் முதலாளியஞ் சாராத உற்பத்தி முறைகளிலுள்ள உற்பத்தியாளர்கள் மீது ஏகாதிபத்தியத்தின் ஒட்டுமொத்தமான சுரண்டல் பெருமளவுக்கும் பால் அடிப்படையிற் பெண்கள் மீதான சுரண்டலே, சீவனோபாய விவசாயத்துக்குமான நிலைமைகள் மேலும் மேலுங் கடினமாகி வரம் அதேவேளை சுரண்டலும் தொடர்கிறதால், இது பெண்களின் வாழ்க்கைத் தூரத்துக்கு மிகவும் அஞ்சத்தக்க விளைவுகளை உருவாக்குகிறது. லமிர் அமின் சுட்டிக்காட்டுவது போல, மூலதனத்தின் ஆதிக்கம் முதலாளியஞ் சாராததுறைகளில் உழைப்புச் சக்திக்கான மீளுற்பத்தியின் நிலைமைகளையும் (அதன் காரணமாக வாழ்க்கைத் தரத்தையும்) பாதிக்கிறதும் அவர் மேலுங் கூறுவதாவது:

"மீளுற்பத்தியின் தேவைகளை உத்தரவாதஞ் செய்ய எந்தவிதமான வாக்குறுதிகளும் இல்லை" (ப:228) வேறு சொற்களிற் கூறுவதானால், கிராமச் சனத்தொகை உயிர் பிழைத்திருக்கும் என்பதை மூலதனம் உறுதிப்படுத்தும் என்று கூற எந்த ஆதாரமுமில்லை. அவர்கள் அறிய மாட்டார்கள் என்பதில் புதினம் ஏதுமில்லை என்று நாம் அறிவோம்.

வளரும்........

படிப்பகம்

www.padippakam.com



# ஈராக்: அடுத்த வியட்நாம்

அமெரிக்கா ஈராக் மீது ஆக்கிரமிப்பு யுத்தம் தொடங்கியபோது அங்கு பேரழிவு தரும் ஆயுதங்கள் இருப்பதாகவே உலகிற்குக் கூறப்பட்டது. அத்துடன் அவ் ஆயுதங்களை உற்பத்தி செய்து உலக சமாதானத்தின் எதிரியாக நிற்கும் சதாம் உசையினை ஒழிப்பதும் தனது பணி என அமெரிக்கா கூறியது.

ஆனால் தனது ஒரு லட்சத்து முப்பதினாயிரம் படைகளையும் பிரித்தானியப் படைகள் உட்பட தனது கூட்டாளி நாடுகளின் படைகளையும் ஈராக்கில் குவித்து ஆக்கிரமிப்பு நடாத்தி வரும் அமெரிக்காவால் மேற்கூறிய இரண்டு விடயங்களையும் நிரூபிக்க முடியவில்லை. அதாவது பேரழிவு தரும் ஆயுதங்களில் ஒன்றைத்தானும் கண்டெடுக்கவில்லை. அதேபோன்று சதாம் உசையினை கண்டு பிடிக்கவோ அன்றி அழிக்கவோ முடியவில்லை.

அதேவேளை அமெரிக்கா ஈராக்கில் போர் முடிவுற்று விட்டது எனக் கூறியும் கொண்டது. ஆனால் நாளாந்தம் அமெரிக்கத் துருப்புக்கள் கெரில்லாத் தாக்குதல்களையும் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களையும் எதிர்நோக்கி பாரிய இழப்புகளைச் சந்தித்து வருகின்றனர். இதுவரை இருநூற்றுக்கு மேற்பட்ட அமெரிக்கப் படையினர் உயிரிழந்துள்ளதுடன் நானூறு பேருக்கு மேல் படுகாயங்கள் பெற்றுள்ளனர். இதனால் அமெரிக்க மக்களிடையே டபிள்யூ புஷ்சிற்கும் அவரது நிர்வாகத்திற்கு எதிராகவும் கடும் சீற்றமும் கண்டனங்களும் வளர்ந்துள்ளன. அடிக்கடி வெள்ளை மாளிகை நோக்கி ஆர்ப்பாட்டப் பேரணிகள் இடம் பெறுகின்றன.

இந்நிலையிலேயே அமெரிக்க அதிபர் புஷ் மிக இரகசியமான ஒரு பயணத்தை ஈராக்கிற்கு இரவோடு இரவாக மேற்கொண்டார். அங்கே அமெரிக்கப் படைவீரர்கள் தளபதிகளுடன் இராப்போசன விருந்துண்டு போரிடும் உற்சாகத்தை வழங்கினார் என்றும் செய்திகள் கூறுகின்றன. எந்தளவிற்கு உற்சாகமளித்தாலும் ஈராக்கில் அமெரிக்கா வாங்கும் அடிக்குமேல் அடிக்கு முடிவு கிடையாது. அது மற்றொரு வியட்நாமாகவே மாறி நிற்கிறது. கடந்த நூற்றாண்டில் வியட்நாமில் அமெரிக்கா வாங்கிக் கட்டி மூக்குடைப்பட்டு வெளியேறியது. இந்த நூற்றாண்டில் ஈராக்கில் ஆழம் தெரியாது இறங்கி மற்றொரு வியட்நாம் போன்ற அடிகளைப் பெற்று வருகின்றது.

ஈராக்கில் வாங்கி வரும் அடியின் அகோரத்தைத் தாங்க முடியாத அமெரிக்கா ஏனைய நாடுகளின் படைகளை தருவித்து அழிவுகளை அவர்களது தலைகளில் சுமத்த நிற்கின்றது.

அமெரிக்கா இன்று ஈராக்கில் நடாத்தும் போர் பயங்கரவாத ஒழிப்பு உலக சமாதானம் என்பனவற்றுக்கான போர் அல்ல. முற்று முழுதாக எண்ணெய்க்காகவும் உலக மேலாதிக்கத்திற்குமான போரேயாகும்.

இந்த போரின் மூலம் கேடுகெட்ட அமெரிக்க ஏகாதிப்பத்தியத்தின் கோர முகமும் ராட்சதப் பற்களும் உலக மக்களுக்கு தெளிவாக வெளிப்பட்டு வருகின்றது. ஈராக்கிலிருந்து அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் வெளியேறி ஈராக் மக்களின் கைகளில் அவர்களது தலைவிதியை விட்டுச் செல்வதையே உலக மக்களுடன் சேர்ந்து நாம் வற்புறுத்துவோம்.



ஈராக்கிற்கு இரகசிய பயணம் மேற்கொண்ட புஷ் அங்கு ஆக்கிரமிப்பில் ஈடுபட்டுள்ள தமது படைவீரரை கட்டித்தழுவுகிறார்

## ஒரு வாக்கு மூலம்

ஆசிய பசுபிக்கில் சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிரான அமெரிக்க நிலைப்பாடு தொடர்பாக தென் ஆசியாவுக்கான உதவிச் செயலாளர் கிறிஸ்ரீனா ரொக்கா அண்மையில் செனட்டில் சாட்சியமளித்தார்.

"பிராந்தியத்தில் நிலவும் பயங்கரவாதம் தொடர்பாக எமது மதிப்பீட்டைத் தெரிவிக்குமாறு எம்மைக் கேட்டுள்ளீர்கள். எனக்கு முன் எனது சகாக்கள் பயங்கரவாதத்திற்கு எதிரான விரிவான எமது இலட்சியங்கள் தொடர்பாக தெரிவித்த கருத்துக்களைத் தொடர்ந்து எனது கருத்துக்களையும் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

2001 செப்ரம்பர் 11ம் திகதிக்கு பின்பு பயங்கரவாதத்திற்கு எதிரான எமது கொள்கையானது முதன்மை முக்கியத்துவம் பெற்றுள்ளது. உலகம் பூராவும் எமது நண்பர்கள், ஆதரவாளர்கள் ஆகியோருடன் நெருக்கமாகச் செயற்பட்டு அமெரிக்காவுக்கும், ஏனையோருக்கு எதிராக இயங்கும் பயங்கரவாதிகளின் திறனை மட்டுப்படுத்தவும், சாத்தியமான இடங்களில் அவர்களை அழித்தொழிக்கவும் செயற்படுகிறோம்.

தென் ஆசியாவில் ஆப்கானிஸ்தானில் ஒடுக்குமுறை தலிபான் ஆட்சியை வீழ்த்த உதவி வழங்கினோம். நேபாளத்து மாவோ வாதிகளாயினும் சரி, இலங்கையில் தமிழீழப்புலிகள் என்றாலும் சரி, காஷ்மீர் தீவிரவாதிகள் என்றாலும் சரி சமாதானமாக கருத்து வேறுபாடுகளை தீர்ப்பதற்கு பலாத்காரம் பயன்படுத்துவதை எதிர்த்துவரும் அதேவேளை பேச்சுவார்த்தைக்கு ஆதரவு வழங்குகிறோம்.

நாம் பிரதமர் வாஜ்பாயுடன் நெருக்கமாக செயற்பட்டு 2001ல் பாராளுமன்றம் மீதான தாக்குதல், மும்பாய் குண்டு வெடிப்புகள் தொடர்பாக இந்திய அரசுக்கு உதவி வருகிறோம்.

இந்தப்பிராந்தியத்தில் நாம் இராணுவத்திற்கு அல்லது பொலீசுக்கு பயிற்சியளிப்பதில் ஈடுபட்டுள்ளோம். அதற்காக இராணுவ மற்றும் சட்டத்தை நிலைநாட்ட ஆளணியையும் வழங்கி வருகிறோம்.

2003ம் ஆண்டிற்கான பயங்கரவாத எதிர்ப்பு சம்பந்தப்பட்ட ஒதுக்கீடு மூன்று கோடி எழுபது இலட்சம் அமெரிக்க டொலர்களாகும். எமது சகாக்களுடன் தொடர்ந்தும் தகவல் பரிமாறுகிறோம், ஒரு பாதுகாப்பு வலைப் பின்னலை கட்டி வருகின்றோம்.

# இந்தியாவின் அடுத்தவொரு மாநிலமாக இலங்கை மாற்றப்படும் அபாயம்!

இலங்கை படிப்படியாக இந்தியாவின் அரசியல், பொருளாதார, இராணுவ பிடிக்குள் சென்று கொண்டிருக்கிறது. உணவுப் பொட்டலங்களை வீசுவதென்ற போர்வையில் இந்திய விமானங்கள் 1987ல் இலங்கைக்குள் அத்துமீறிப் பிரவேசித்தன. "அ" விலிருந்து ஃ வரையான தமிழ்த் தலைவர்கள் அதை வரவேற்றனர். தமிழர்களைப் பாதுகாப்பதற்கு இந்தியப்படைகள் வந்துள்ளன என்று கூறி மாலை மரியாதையுடன் வரவேற்றனர். இந்தியப்படையின் வருகையை எதிர்த்த ஒரேயொரு கட்சி புதிய ஜனநாயகக் கட்சி மட்டுமேயாகும். இந்தியப்படைகள் எமது மண்ணை ஆக்கிரமித்துள்ளன அதை எதிர்ப்போம் எனக் கூறி எதிர்ப்புத் தெரிவித்து இயக்கம் நடாத்தியது.

இங்கு வந்த இந்திய "சமாதானப் படை" புரிந்த அட்டகாசங்கள் என்ன என்பதைத் தமிழ் மக்கள் நடைமுறையில் கண்டனர். இப்போது மீண்டும் இந்தியா பொருளாதார அரசியல் இராணுவ ரீதியாக இலங்கையில் ஊடுருவி வருவதை பகிரங்கமாகவே புதிய ஜனநாயகக்கட்சி கண்டிப்பதுடன் மக்களுக்கு விழிப்புணர்வூட்டவும் கடமைப்பட்டுள்ளது.

பின்வரும் நிகழ்வுகள் இந்தியாவின் ஊடுருவலை தெளிவுபடுத்தும் என நினைக்கிறோம். 1987ம் ஆண்டு இந்திய இலங்கை ஒப்பந்தத்தை தொடர்ந்து 1990ன் ஆரம்பத்தில் ரணில்விக்கிரமசிங்கா கைத்தொழில் அமைச்சராக இருந்தபோது இந்தியாவுடன் சுதந்திர வர்த்தக உடன்பாட்டிற்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த ஒப்பந்தம் 1998 டிசம்பரில் பொதுசன முன்னணி அரசாங்கத்தின் போது கைச்சாத்தானது. இந்த ஒப்பந்தமானது 2000ம் ஆண்டு மார்ச் மாதத்தில் நடைமுறைக்கு வந்தது. இந்த சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானது இந்தியாவிற்குச் சாதகமானது என்பதை வர்த்தக சமூகமும் அரசியல் விமர்சர்களும் சுட்டிக்காட்டியிருந்தனர்.

2001ம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்கா ஆட்சிப் பொறுப்பேற்றதும் முதலாவது உத்தியோக பூர்வமான வெளிநாட்டுப் பயணத்தை இந்தியாவிற்கு மேற்கொண்டார். ஒரு புறத்தில் விடுதலைப்புலிகளுடன் போர் ஓய்வு பேச்சுவார்த்தை மறுபுறத்தில் புலிகளை மிரட்டுவதற்கு இந்திய ஒத்துழைப்பு.

மிலிந்த மொறகொட தற்போதைய அரசு பதவிக்கு வந்தபின் இதுவரை ஒன்பது தடவை இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டு இலங்கையை முழுமையாக இந்தியாவின் பொருளாதார இராணுவ பிடிக்குள் கொண்டு வருவதில் மிகவும் அக்கறையுடனும் திறமையுடனும் செயற்பட்டுவந்துள்ளார்.

புதிய அரசு பதவிக்கு வந்தபின் கட்டம் கட்டமாக நாட்டை இந்தியாவிற்கு தாரைவார்த்தது. இதை தமிழ்த்தலைமைகள் ஒன்றும் தெரியாதவர்கள் போல பேசாமல் இருந்தனர். அடிக்கடி இந்தியாவிற்கும். இந்தியத் தூதுவராலயத்திற்கும் சென்று இந்திய ஊடுருவலுக்கு சாமரை வீசினர்.

இந்த அரசு இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே "நம்பிக்கை" யைகட்டியெழுப்பும் முயற்சியாக திருகோணமலை எண்ணெய்க் குதங்களை நீண்ட குத்தகைக்கு விடப்பட்டன. இந்திய எண்ணெய்க் கம்பனி இலங்கையில் எண்ணெய் விநியோகத்தில் ஈடுபட அனுமதிவழங்கப்பட்டது. பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆரம்பநாளில் இருந்தே இலாபத்தில் இயங்கிவந்துள்ள போதும் எண்ணெய் விநியோகத்தின் ஒரு பகுதி இந்திய எண்ணெய்க்கம்பனிக்கு வழங்கப்பட்டது. ஆரம்பத்தில் இருந்தே இந்திய எண்ணெய்க் கம்பனி பல தில்லுமுல்லுகளில் ஈடுபட்டு வருகிறதென்பதை "புதிய பூமி " ஏற்கனவே அம்பலப்படுத்தியது இங்கு கவனிக்கத் தக்கது.

ரணிலின் ஆட்சி இரகசியமாக இந்திய இராணுவ ஆலோசனைகளையும், உதவியையும், பயிற்சியையும் பெற்றுவந்துள்ளது. ரணில் ஆட்சி பொறுப்பேற்ற சமயம் இந்திய இராணுவத்தால் இலங்கை இராணுவத்திற்கு 700 பேர் பயிற்றுவிக்கப்பட்டனர். 2003 மார்ச் மாதளவில் இது 2000 பேராக அதிகரித்தது.

யூ என்.பி அரசாங்கம் பொறுப்பேற்ற சமயம் இலங்கைக்கு கனரக ஆயுத விற்பனைக்குத் தடை இருந்தது. 2003 ஜனவரியிலிருந்து இந்தத்தடை நீக்கப்பட்டுவிட்டது. அத்துடன் இரு நாட்டுக் கடற்படைகளும் கூட்டு நடவடிக்கையில் ஈடுபடத் தொடங்கியுள்ளன. இந்த நடவடிக்கையும் போர் நிறுத்தம் நடைமுறையில் உள்ள சமயம் - பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது மேற்கொள்ளப்பட்டமை அரசின் நம்பகத் தன்மையை கேள்விக்குட்படுத்துகிறது.



இலங்கை விரைவில் ஒரு பாதுகாப்பு உடன்படிக்கையை இந்தியாவுடன் செய்யவுள்ளது. இந்த உடன்படிக்கை பரஸ்பர பாதுகாப்புக்காகவல்ல. இலங்கையை யாராவது தாக்கினால் அல்லது இலங்கைக்கு ஆபத்து என்று கருதினால் இந்தியா "உதவிக்கு " வரும். இந்தியா இலங்கையின்

- சிறீ -

"அழைப்பின் " பேரில் இங்கு இந்தியப் படைகளை கொண்டுவரும். இப்போது இந்தவகையான ஒப்பந்தத்தின் தேவை என்ன? யாரைமிரட்ட? யாருக்கு எதிராக போரிட? இலங்கைக்கு வெளிநாட்டு மிரட்டல் இராணுவ ரீதியில் வரச்சாத்தியமில்லை. அப்படி வருமென்றால் இந்தியாவினால் மட்டுமே வரமுடியும். இந்திய நலனுக்கு பங்கம் என்று கருதும் பட்சத்தில் இந்தியாவே இலங்கையை ஆக்கிரமிக்கும்.

இந்திய பயணத்தை முடித்துக் கொண்ட பிரதமர் அடுத்து நவம்பர் 4ம் திகதி அமெரிக்கா சென்றுள்ளார். இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையேயான "விசேட " உறவுபற்றி உலகப்பயங்கரவாதி புஷ்சிற்கு விளக்கமளித்தார். இந்தியா அமெரிக்காவின் நண்பனாக மாறிவரும் சூழலில் இலங்கையில் இந்தியா தலையிடுவதை அமெரிக்க ஆட்சேபிக்காது இருப்பதை ரணில் வேண்டிக் கொண்டார்.

இந்தச் சூழலிலேயே இலங்கையும் இந்தியாவும் 2004ம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஒரு முழுமையான பொருளாதார உடன்படிக்கையை கைச்சாத்திடவுள்ளன. 2000ம் ஆண்டு நடைமுறைக்கு வந்த சுதந்திர வர்த்தக உடன்படிக்கையால் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையேயான வர்த்தகம் 2002ம் ஆண்டில் பத்தாயிரம் கோடி ரூபாவாக வளர்ந்தது. உள்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்கள் பெருமளவில் இந்தியாவிலிருந்து தருவிக்கப்படுவதனால் உள்நாட்டு உற்பத்தி சீரழிந்து வருவதுடன் வேலையிழப்புக்களும், கைத்தொழில் நிறுவனங்கள் மூடப்படுவதும் இடம் பெறுகின்றன.

குறிப்பிட்ட வர்த்தக ஒப்பந்தத்தின் பிரகாரம் 2003ம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஒரு கூட்டு ஆய்வுக்குழு ஏற்படுத்தப்பட்டது. அதன் முதலாவது கூட்டம் 2003 மே மாதத்தில் இடம்பெற்றது. அந்த கூட்டு ஆய்வுக்குழு முதலீடு சம்பந்தமாக பல தாக்கமான சிபார்சுகளைச் செய்துள்ளது. அவையாவன :- (முக்கிய பகுதிகள்)

1. இரண்டு நாடுகளுக்குமிடையே முதலீட்டை ஊக்குவிக்குமுகமாக நிர்வாக மற்றும் விதித்தடங்கல்கள் நீக்கப்படும்.

2. இலங்கை முதலீட்டுச்சபை இந்திய முதலீட்டுக்கென தனியான ஒரு அலகை ஏற்படுத்தும்.

3. குறிப்பாக உட்கட்டமைப்பு சம்பந்தப்பட்ட செயற்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

4. இந்திய விமானங்கள் இலங்கை விமான நிலையங்களுக்கு சுதந்திரமாக வந்து போகும்.

5. இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே கப்பல் சேவை விரைவில் ஏற்படுத்தப்பட வேண்டும்.

6. இலங்கைப் புகையிரத சேவை இந்திய ஒத்துழைப்புடன் நவீனமயப்படுத்தப்படும். அதாவது இலங்கைப் புகையிரத சேவை தனியார் மயப்படுத்தப்பட்டு இந்தியாவிடம் கையளிக்கப்படும்.

7. விசா வழங்கும் முறையில் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்படும். இதன் மூலம் இந்திய மூலதனத்தோடு குறைந்த ஊதியத்தில் இந்தியத் தொழிலாளர்கள் கொண்டு வரப்படுவார்கள்.?

8. கடலுக்கு கீழ் தொலைத்தொடர்பு கேபிள்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

9. சுற்றுலாத்துறையில் கூட்டு விஸ்தரிப்பு ஏற்படுத்தப்பட வேண்டும்.

10. விளையாட்டுத் துறையில் சர்வதேச மட்டத்தில் கூட்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

11. கூட்டாக சினிமா, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

12. கனிப் பொருள்கள் மற்றும் வளங்கள் என்பன கூட்டாக ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டும்.

13. மீன்வளம் பற்றிய ஆய்வுகள் கூட்டாக மேற் கொள்ளப்பட வேண்டும்.

இந்தியா பத்தாயிரம் கோடி ரூபாவை உட்கட்டமைப்பு செயற் திட்டங்களுக்கென ஒதுக்க வேண்டும். பொருளாதாரக் கூட்டு 14 நடவடிக்கைகளுக்கென இந்தியா மேலதிகமாக பத்தாயிரம் கோடி ரூபாவை இந்திய - இலங்கை பொருளாதார ஒத்துழைப்பு நிதியத்திற்கு வழங்க வேண்டும். முன்பு இந்திய விஸ்தரிப்பு ஆக்கிரமிப்பு பற்றி முகட்டில் ஏறி நின்று கூக்குரல் இட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் உள்ளவர்களும் ஜே.வி.பியினரும், தற்போதைய சிஹல உறுமய போன்ற 'தேசப் பற்றாளர்களும்' மேற் கூறியவை பற்றி மௌனம் சாதிப்பது ஏன்? இந்திய இந்துத்துவ பாசிச ஆளும் அதிகார வர்க்கத்தின் பிடிக்குள் இலங்கை ஒரு உத்தியோகப் பற்றற்ற இந்திய மாநிலமாக மாற்றப்படும் அபாயத்தை இலங்கை மக்கள் அனைவருமே உணர்ந்து கொள்வது அவசியம்.

- சிறீ -

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ்த் தேசியமும் குறுநலப் பித்தும் [20]

## இருவேறு உலகங்கள், இருவேறு மனிதர்கள்

பிரபஞ்சத்தில் வீதி உலாவரும் பூமிப் பந்தில் இதுவரை எமது கண்டுபிடிப்புக் குட்பட்ட அளவில் மனிதர் வாழும் பூமிப் பூங்காவில் இன்பமயமான உலகைப் படைக்க மக்கள் நாம் காலாதிகாலமாக முயன்று வருகிறோம். எனினும் இன்பத்தைத் தேடும் மனிதப் பயணத்தில் இலக்குகளை எட்டிக்கொண்டிருக்கும் ஒவ்வொரு வேளையெல்லாம் எவற்றினாலோ நாம் வீழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

மனித சமூக சாரத்தின் இன்ப இலக்குகளைத் தட்டிப்பறிக்கும் அந்தப் பகற்கொள்ளைக்காரர் விண்ணில் உலாவும் எந்த வேற்றுக் கிரகங்களில் இருந்து எவரும் வரவில்லை. அப்படியாயின் யார் அவர்கள்? அவர்கள் இந்தப் பூமிப்பந்திலேயே மிதக்கிறார்கள். அவர்கள் மனித வேடத்தில் பிறந்த ஆதிக்கம் என்கிற சுயபோதை வெள்ளத்தில் சுழியோடும் அதிசூரர்கள். இவர்களின் ஆதிக்க அடிச்சுடராக அமைவது பொருளாதாரப் போதை யாகும். தனிச்சொத்துடமை என்கின்ற நோயால் பீடிக்கப்பட்ட மனக்குழப்பக் காரராகும். இவர்களின் பேராசைக்கு ஒரு குடிசையோ, ஒரு கோபுரமோ, ஒரு குடும்பமோ, ஒரு கிராமமோ, ஒரு நகரமோ, ஒரு பிரதேசமோ, ஒரு நாடோ, ஒரு கண்டமோ, ஒரு முழு உலகமோ மட்டும் போதாது. மனிதர் களை மட்டுமன்றி இயற்கையையும், வேற்றுக்கிரகங் களையும் விழுங்கி விடுவதற்கு வேளை பார்த்திருக்கும் சுற்றுச் சூழல் விரோதிகளாக- மக்களின் எதிரிகளாக- உள்ளிருந்தே கொல்லும் எயிட்ஸ் வைரஸ் கிருமிகளாக வாழும் மானுடர் எம்முடனேயே கூடிக்குலாவி- எமது இன்ப- துன்பங் களில் பங்காளராகவும் பகையாள ராகவும் வேண்டிய வேளைகளில் வேட மிட்டு உள்ளங்கால் முதல் உச்சந்தலை வரை மட்டுமன்றி எம் அனைவரதும் உள்ளத்தினுள்ளே உவப்பாக ஊறித் தமது ஆதிக்கப் புத்தியை மனித ஜீவிப்பாகவே மாற்றிக் கொண்டிருப்பவர் கள். குடும்பம் முதல் குவலயம் வரை ஊடுருவிப்பாய்ந்து பீடித்திருக்கும் ஆதிக்க விஷவித்துக்கு நீருற்றி வளர்த்து இன்று உலகமயமாகி பிரபஞ்சத்தி லிருந்து இப் பூகோளத்தையே பலியாக்கத் துடித்து நிற்கும் வர்க்க விரோதிகளே மானுடப் பிறவிகளின் முதலாந்தர எதிரிகளாவர்.

இவர்களை இனங் காண்பது மிகவும் கடினமான கைங்கரியமாகும். பலப்பல நூற்றாண்டுகளாக மனிதர்கள் வர்க்கங்களாக பிளவுண்டதிலிருந்து இவர்கள் எம்மை ஆதிக்கம் செய்து வரும் சிறு குழுவினராவர். தனிச் சொத்துடமை- மூலதனம்- பணம் என்ற பாறாங்கற்களை மனித சமூகத்தின் மீது எழ முடியாதவாறு அழுத்தி வைத்திருக்கிறார்கள்.

வரலாற்றில் ஒரு பெண் அடிமையாக்கப் பட்டபொழுதே ஆதிக்கம் ஆரம்பமாகி விடுகிறது. குடும்பம் என்பது இரத்த உறவினை மீறி பொருளாதார அலகாக ஆக்கப்பட்ட நாளிலிருந்தே மனித ஜீவியின் குணவியல்புகளான அன்பு, பாசம், நேயம் என்ற விழுமியங்கள் யாவும் வீழ்ச்சியடையத் தொடங்கியது மட்டுமன்றி மனித விகாரங்களைப் பெற்றுவிட்டன.

இந்த ஆதிக்க சக்திகளின் கோட்டை களாக எமது வரலாறு முதல் சமகால அன்றாட வாழ்வுவரை எம்மைப் பீடித்து நிற்கும் ஆதிக்க குணாம்சத்தை அடையாளம் கண்டு தெளிந்து- அவற்றுக்கப்பால் எமது சுயபாதுகாப்பை யும்- சுயகௌரவத்தையும்- மனுக்குல இன்ப வெளியையும் மீட்க வேண்டு மெனில் நாம் ஒவ்வொரு மனிதரும் ஆதிக்கம் தேடி அலையும் மனோபாவத்தைப் பலியிட வேண்டும். இவற்றுக்குத் தீர்வுகாண சமயங்களால் இயலவில்லை. சமய சீர்த்திருத்தஞ் செய்ய முயன்றவர்களையே ஆதிக்க எசமானர்களான எதிரிகளே தமக் குள்ளகப்படுத்தி பல நூற்றாண்டுகள் மதப் போர்களால் ஏற்கனவே எமது உலகத்தை சீரழித்தது மட்டுமன்றி இன்றுவரை எம் உள்ளத்திலும் வெளியிலும் ஊடுருவி ஆதிக்க உணர்வுகளையே வளர்த்து வரும் விஷ விருட்சங்களாகிய யதார்த்தமே நடைமுறையாகிவிட்டது. எனவேதான் ஆதிக்க மனோபாவத்தைப் பலியிட மதங்கடந்த மானுட நேயம் நோக்கி நாம் பயணிக்க வேண்டியவர்களாயுள்ளோம்.

சமகால எமது அனுபவத்துக்குட்பட்ட உதாரணத்தை எடுப்போமாயின் 'ஆசையே துன்பத்துக்கு காரணம்' என்ற பௌத்தத்தின் பேரால் இலங்கையில் 1972, 1978 அரசியல்

**செண்பகன்**

யாப்பில் பௌத்தமும் முதன்மை பெற்ற பேராசையும் அதை எதிர்த்த கிறிஸ்தவமும் இன்றுவரை தீராப் பகையாக - போராக - யுத்தமாக - ஏகாதிபத்திய - பிராந்தியப் பேராசைகளின் தளமாக அழகிய சிறிய இலங்கைத் தீவு அகப்பட்டுக்கொண்டு விட்டதே! இந்து - இந்தியா - பௌத்தம் - இலங்கை என்ற ஒட்டுறவு பண்பாட்டுப் பாரத்தின் ஆதிக்கப் பாம்பாகிப் படமெடுத்தாடும் சிங்களப் பேரின வெறியாகி ஆழ வேரூன்றி சிஹல உறுமய முதல் ஜேவிபிவரை பேதையேறி மேற்குமய கிறிஸ்தவ எதிர்ப்பு என்ற மாய்மாலம் காட்டி

> **அடக்கப்படும் ஒரு தேசிய இனத்திடம் அடங்கிப் போகும் அடிமை மனப்பாங்கு அறவே இருக்கக் கூடாது. அவ்வாறே ஏனையோர் மீதான ஆதிக்க மனோ நிலையும் கொள்ளக்கூடாது.**

தம்முடன் வாழும் சக தமிழர்களையே அந்நியராகவும் எதிரிகளாகவும் பார்த்து விகாரை முதல் பாராளுமன்ற வாயிலூடாக ஊடகங்கள் ஈறாக உலகில் சிங்களவருக்குரிய ஒரே நாடு இலங்கை என்று உருவேற்றி உருக்குலைந்து தொலைகிறார்களே! சமயஞ் சாதித்தது என்ன? ஆசை அகன்றதா? துன்பந் தொலைந்ததா? இந்தியா இந்துத்துவத்தால் இந்தியாவையே தேசிய இனங்களின் சிறைக்கூடங்களாகவே சிதைத்துக் கொண்டிருக்கிறதே! சுயநிர்ணய உரிமை என்ற சொல் கேட்டதுமே விஸ்வரூபம் பெற்று இலங்கையைத் தன் காலால் அளந்து தனது பண்பாட்டு ஆதிக்கத்துக்குமப்பால் அரசியல் - பொருளாதார நலன்பேணித் தனது உத்தியோகப்பற்றற்ற இன்னொரு மாநிலமாக்கிக் கொண்டுவிட்டதே. ராமர் பாலமிடாதது மட்டுமே பாக்கி! ஜெயலலிதா அம்மையாரைப் போற்றுவம்!

ஆதிக்க மனோபாவத்தை அகற்ற வேண்டுமெனில் மதத்தை ஆராயப் புகின் எமது மனோபலமே கெட்டுக் குட்டிச்சுவராய்ப்போம். ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே எமக்கு கிடைத்த ஒளி மாக்ஸீயமாகும்- அது லெனினிசமாக வளர்ந்த தத்துவஞானமாகும். "பட்டப் பகலிற் கொள்ளையிட/ முகட்டைப் பிரிக்கத் துணிகின்ற/ மூர்க்கர் ஆளும் உலகிதனை/ முழுதும் கழட்டிப் பூட்டாமல்/ முடியாதையா, நலம் காணல் சகட்டு மேனியாய் எதையும்/ தருமம் என்று காட்டுகிற/ சனியன் பிடிச்சு போக்குகளைத்/ தட்டிக் கேட்க வேண்டாமோ/ இகத்திற் பொதுமைச் சமன்பாட்டை/ இயற்றிக் காட்ட வேண்டாமோ" என்ற முருகையனின் குரலில் முழுச் சமூகமும் முரண்படுவோமா?

வர்க்கங்களாகப் பிளவுண்ட சமூகத்தில் 'எதையும் தருமம் என்று காட்டும் சனியன் பிடிச்ச போக்குகளை தட்டிக் கேட்பது' இனியார்? இறந்த காலத்தைப் பழிப்பதால் பலனில்லை. எதிர்காலத்தை நிகழ்காலத்தில் செப்பனிட நாம் தயாராக வேண்டாமா?

புராதன பொதுவுடமைச் சமூகமா யிருந்து பிளவுண்ட வர்க்க சமுதாயத்தை மீண்டும் கழட்டிப்பூட்டித் திருத்த வர்க்கப் போராட்ட மார்க்கமே தனிவழியாகும். அது பன்மைத் தன்மை கொண்ட மானுடநேயம் மிக்க - யுத்தமற்ற - இனவெறியை நிராகரிக்கும் உலகத்தைப் பேணுவதாகும்.

குடும்ப உறவில் நிலவும் பரஸ்பர கடமையை அன்றி பொருளாதார அலகின் ஆதிக்க குணாம்சத்தை நாம் ஒவ்வொருவரும் ஆணிவேரோடு - வேரும் வேரடி மண்ணுமாக கிளப்பிவிட வேண்டும். ஊடலும் கூடலும் என்ற சிநேக முரண்பாட்டின் மூலம் சமூகத்தின் புதிய வாழ்வையும் - புதிய பண்பாட்டையும் உருவாக்கும் பணியை நாம் இப்பொழுதிலிருந்தே தீர்மானிக்க வேண்டும்.

நாம் தற்போது முகம் கொடுக்கும் சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறைக் கெதிராக மக்கள் போராட்டம் மக்கள் யுத்தம் என்பதற்கு அப்பால் பழமைவாத ஆதிக்க குணாம்சத்தில் 'உலகெலாம் வாழுந்தமிழருக்கு ஒரு நாடில்லை. எனவே தமிழீழம் அமைப்போம்' என்பது ஒடுக்கப்பட்ட தமிழ் தேசத்தை சிலுவைப்போரின் பின்னால் அலைக் கழித்துச் சியோனிச இஸ்ரேலின் பாசறைப்பள்ளி மாணவராக்கி - அமெரிக்க உலக ஏகாதிபத்திய நுகத்தடி சுமப்பவர்களாக ஆக்கிவிடும் அபத்தத்தை தமிழ்த் தேசியம் தெரிந்துகொள்வதும் - தெளிந்து கொள்வதும் காலத்தின் கடனாகும்.

ஆதிக்க சமுதாயத்தில் பலசாலியே பயன்படுத்தும் ஆதிக்கம் மூலம் வெல்வான். தமிழ் மக்களைப் பயன் படுத்தல், சிங்களவரைப் பயன்படுத்தல், முஸ்லீம்களைப் பயன்படுத்தல், இந்தியா வைப் பயன்படுத்தல், அமெரிக்காவை பயன்படுத்தல், என்பவையெல்லாம் எம்மை இன்று சர்வதேச சதிவலைப் பின்னலுக்குள் சிக்கவைத்திருக்கிறது. துரோணரின் பத்மவியூகத்தினுள் அகப்பட்டுள்ள அபிமன்யு போல் இலங்கைத் தீவும் தமிழரும், சிங்களவரும், முஸ்லிம் மக்களும் துடித்துக்கொண்டிருக்கிறோம்.

இதில் வென்றவர் யார் என விவாதிக்க நேரமில்லை. அதுவே மீண்டும் மீண்டும் யுத்தமாகி தீராத நோயாகிச் செல்லும். தேசிய இனங்களிடையே ஊடுருவி யிருக்கும் ஆதிக்கப் பெருமுதலாளித்துவ - பல்தேசிய ஆதிக்க சக்திகளை இனங்கண்டு அடையாளப்படுத்தித் தனிமைப்படுத்திக் கட்டுடைத்துப் பார்க்கவேண்டிய தேவை எழுந்துள்ளது.

ஒடுக்கப்பட்ட தமிழ்த்தேசியம் இதற்குத் தன்னைத் தயார்படுத்திக் கொள்ளுமா? இருவேறு உலகங்களைத் தேடுமா? இருவேறு மனிதர்களைத் தெரிந்து கொள்ளுமா?

'போராட்டம்- தோல்வி, மீண்டும் போராட்டம் - மீண்டும் தோல்வி, மீண்டும் மீண்டும் போராட்டம் வெற்றிவரை' இதுவே உழைப்பாளரின் போராட்ட விதியாகும். மாற்றம் ஒன்றே மாறா நியதி என்ற சமூக விஞ்ஞானம் காட்டும் ஒளியாகும் - நாம் தயாரா?




## பெரியாரியமா, அம்பேத்கரியமா, மாக்ஸியமா?

இந்தியச் சூழலில், சாதி, மதம், தேசிய இனம் போன்ற பிரச்சினைகளின் முக்கியத்தைக் குறைத்து மதிப்பிட இயலாது. இந்தியாவின் இடதுசாரிக் கட்சிகள் இவ்விடயங்களில் தவறு செய்துள்ளார்கள் என்பதும் உண்மை. அத்தவறுகள் மாக்ஸியத்தை அவர்கள் எவ்வாறு கையாண்டதால் நேர்ந்தன என்பதையும் வாயளவில் மாக்ஸியம் பேசிய சிலர் நடைமுறையில் எவ்வாறு தம்மை இனங்காட்டினர் என்பதையும் ஒவ்வொரு கட்சியினதும் இயக்கத்தினதும் உண்மையான வர்க்க நிலைப்பாடு என்னவாக இருந்தது அல்லது எப்படி மாறியது என்பதையும் அறிந்தால், இத்தவறுகளுக்கான காரணத்தையும் அவற்றை நேர்மையான மாக்ஸியவாதிகள் எவ்வாறு தவிர்க்க முடியும் என்பதையும் அறிய முடியும்.

மாக்ஸியத்தைப் பெரியாரியத்துடனும் அம்பேத்கரியத்துடனும் ஒப்பிட்டுப் பேசுவோர், மாக்ஸியம் என்பதை மாக்ஸ் என்ற ஒரு பேரறிஞரது கருத்துக்களைப் பெரியார், அம்பேத்கர் எனப்படும் பேரறிஞர்களது கருத்துக்களுடன் ஒப்பிடுகிற போக்கில் மாக்ஸியம் என்பது மாக்ஸுக்கும் அப்பால் விரிவடைந்த, இன்னும் விரிவடையக்கூடிய ஒரு உலகநோக்கு என்பதைக் கவனியாமல் பேசுவது ஒரு பிரச்சினை. மறுபுறம், மாக்ஸியம் மாக்ஸின் கணிப்புக்களை அவரது காலத்தின் பின்னணியில் வைத்து நோக்குவதுடன் அவற்றை விமர்சனக் கண்ணோட்டத்துடனேயே ஏற்கின்றது. பெரியாரியம், அம்பேத்கரியம் என்று பேசுவோர், பெரியாரது கருத்துக்களையும் அம்பேத்கரது கருத்துக்களையும் விமர்சனமின்றி ஏற்பதையும் அப்படி ஏற்கச் சிரமமான இடத்தில் அவற்றை நியாயப்படுத்துவதையும் நாம் காணலாம். அதைவிடத் தமது அரசியல் வசதி கருதி அவர்களது கருத்துக்களைத் தமது தேவைகட்கேற்ப வளைக்கிற போக்கையும் நாம் காணலாம். மாக்ஸியத்தைத் திரிக்கிற போக்கில் சிலர் நடப்பதற்கும் இதற்கும் முக்கியமான ஒரு வேறுபாடு உண்டு. மாக்ஸியத்தைத் திரிப்பவர்கள் மாக்ஸ் சொன்னது எதுவுமே மாற்ற முடியாத உண்மை என்ற நிலைப்பாட்டிலிருந்து வாதிப்பதில்லை. பெரியாரியத்திலும் அம்பேத்கரியத்திலும் வலுவான ஒரு தனிமனிதப் பரிமாணம் மேலோங்கியிருப்பதும் பெரியாரையோ அம்பேத்கரையோ எந்த மட்டத்திலும் விமர்சிப்பதை ஏற்காததும் முக்கியமான பண்புகள் எனலாம்.

ஒரு மாக்ஸியவாதி இவ்விடத்திற் முக்கியமான சில விடயங்களுக்கு முகங் கொடுத்தாக வேண்டும். ஈ.வெ.ரா. (பெரியார்) தனது காலத்தின் சென்னை மாகாணச் சமூகச் சூழலை முன்வைத்தே தனது பார்வையை விருத்தி செய்தார். பெண்கள் நிலை, சாதி அமைப்பு, மூட நம்பிக்கைகள் என்பனவே அவரது கவனத்தை ஈர்த்தன. திராவிடநாடு என்ற கருத்து உண்மையிலேயே திராவிட தேசியம் என்ற நோக்கில் முன்வைக்கப்பட்டதல்ல என்பதும் அவரது கவனம் தமிழ்ச் சமூக நலனை அடிப்படையாகக் கொண்டதும் என்பன முக்கியமானவை. அதன் விளைவாக அவர் தமிழகத்தின் அடிப்படை முரண்பாடாகப் பார்ப்பன ஆதிக்கத்தையே கொண்டார். அதனால் அவர் கொலனிய ஆட்சியை எதிர்க்கவில்லை என்று கூற முடியாது. கொலனிய ஆட்சி போனபின்பு பார்ப்பன ஆட்சி வரக்கூடாது என்பதிலேயே அவரது கவனங் குவிந்தது. அதன் விளைவாக, வர்க்கப் போராட்டத்தை அவர் மிக அடிப்படையான முரண்பாடாகக் கொள்ள இயலாது போனது. அதை வைத்து அவரது சமூகப் பங்களிப்பை மறுப்பது மிகவும் தவறானது. அதேவேளை அந்தக் குறைப்பாட்டை மறுத்து, அவரை விமர்சித்த இடதுசாரிகளையும் அவருடன் முரண்பட்ட இடதுசாரிகளையும் ஏதாவது விதமாக முத்திரை குத்தி நிராகரிப்பதும் அதே அளவு தவறானது.

பெரியாரியம் என்பதை பெண் விடுதலை, சாதி மறுப்பு, கடவுட் கொள்கை மறுப்பு மூடநம்பிக்கை மறுப்பும் உள்ளடங்கிய பகுத்தறிவுச் சிந்தனை பார்ப்பனிய எதிர்ப்பு, பின்னர் வட இந்திய பெருமுதலாளிய எதிர்ப்பு என்று பட்டியல் போட்டு அடையாளங் காண முயலும்போது, இவற்றுக்கு அடிப்படையான உலகநோக்கு என்ன? அது உருவான சூழல் என்ன என்பதைக் கவனித்தால் ஈ.வெ.ராவின் கொள்கைகளிற் தொடங்கி புரட்சிரகர மாக்ஸியத்து நெருக்கமான நிலைக்கு ஒருவர் வரலாம். ஆனால் அவரது சிந்தனையையும் செயல்களையும் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டதாக உயர்த்தி அதை ஒரு முழுமையான விடுதலை மார்க்கமாக முடியுமா என்பது இன்னொரு விடயம். அது இயலாது என்பதாலேயே பெரியாரியம் என்ற பேரில் தமிழகத்திற் சந்தர்ப்பவாதம் தழைத்தோங்க இயலுமாகியுள்ளது.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி தன் தொடக்க காலத்திலிருந்தே கம்யூனிஸ்ற் அல்லாத ஸுன் யாற்ஸென்னை மிக உயர்வாகக் கொண்டாடி வந்தது. இது விமர்சனமற்ற குருட்டு அங்கீகாரமல்ல. இது போலவே ஈ.வெ.ரா. விடயத்திலும் அவரது பங்களிப்பின் பயனுள்ள விடயங்களைப் போற்றி வரவேற்பது விமர்சன அடிப்படையில் மட்டுமே இயலும். அதேவேளை, நேற்றுவரை அவரை விமர்சிப்பதைவிட வேறெதுவும் செய்யாத பாராளுமன்றவாத, திரிபுவாதக் கம்யூனிஸ்ற்றுகள் அவரைத் திடீரென்று ஒரு மகானாகக் கொண்டாடும்போது மக்கள் ஐயப்பட இடம் உண்டு.

அம்பேத்கர் விடயத்திலும் ஈ.வெ.ரா. விடயத்திற் போன்று அவரது பங்களிப்புப் பற்றிய ஒரு விமர்சனப் பார்வை தேவைப்படுகிறது. நடைமுறை அரசியலில் அவர் இந்திய ஆளும் வர்க்கத்திடம் இறுதியில் ஏமாந்து போனார் என்பதை அம்பேத்கரின் ஆதரவாளர்கள் பொதுவாக ஏற்கின்றனர். அவர் ஏன் ஏமாற நேர்ந்தது என்பதற்கான விடையைத் தனிமனித உணர்வுகளதும் உறவுகளதும் அடிப்படையில் விளக்க இயலாது. அம்பேத்கர் தன் வாழ்நாளிற் சாதித்தவை மிகப்பெரியன. ஆனால் அது சாதியினாற் தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைப் பாதையில் ஒரு சிறு நகர்வு மட்டுமே.

இன்று தலித்தியக் கோட்பாட்டை முன்வைக்கிறவர்கள் சிலர் அம்பேத்கரியம் என்ற ஒரு கருத்தாக்கத்தையும் வலியுறுத்த முற்படுவதைக் காணமுடியும். சாதியத்துக்கும் சாதி முறைக்கும் சமூகப்பாகுபாட்டுக்கும் எதிரான போராட்டம் தன்னைச் சாதிப் பிரச்சினைக்குள் மட்டும் சிறைப்படுத்திக்கொள்ள இயலாது. சாதிய ஒடுக்குமுறை ஒரு வர்க்கப் பரிமாணத்தையும் கொண்டது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

அம்பேத்கரியம் என்பது, அம்பேத்கரைத் தவறுகட்கப்பாற்பட்ட மகா ஞானியாகவோ புனிதராகவோ கொள்வதை அடிப்படையாகக் கொள்ளும்போது அது அவரது அரசியல் நிலைப்பாடுகளின் குறைபாடுகளை விளங்கிக் கொள்வதைத் தவிர்த்து நியாயப்படுத்தும் அல்லது மறுக்கும் திசையில் நகருகிறது.

அம்பேத்கர் அவர் செய்த தவறுகளும் குறைகளும் போல இன்னும் பத்து அல்லது நூறு மடங்கு செய்திருந்தாலுங்கூட, அவரது காலத்தில் அவர் ஆற்றிய பங்கு தன் முக்கியத்துவத்தை எவ்வகையிலும் இழந்துவிடாது.

தவறுகளிலிருந்து கற்பது என்பதை ஏற்க மறுக்கும் போதே விமர்சனம் -சுயவிமர்சனம் என்பன நம்மைவிட்டு நழுவிச் செல்லுகின்றன. மாக்ஸியவாதிகள் சாதிய எதிர்ப்பு பார்ப்பனிய எதிர்ப்பு, சுயமரியாதை இயக்கம் என்பன தொடர்பாக தமது கடந்த காலத்தை மீளமீள விமர்சிப்பது எப்போதுமே நல்லது. ஆனால் வெறும் சமரசப் போக்கில் மாக்ஸிய- பெரியாரிய- அம்பேத்கரிய ஐக்கியம் என்று பேசுவது, ஈ.வெ.ராவையோ அம்பேத்கரையோ கௌரவிக்க உதவாது.

தொடர்ச்சி 11ம் பக்கம்..

படிப்பகம்

www.padippakam.com



# பிரபாகரனின் மாவீரர் தின உரையும் முன் செல்ல வேண்டிய பாதையும்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர் தின உரை பற்றி பலரும் பலவாறு கருத்து தெரிவிக்கின்றனர். ஐக்கிய இலங்கைக் குள் அரசியல் தீர்வை காண்பதற்கான புலிகள் இயக்கத்தின் சாதகமான நிலைப்பாட்டினை மீண்டும் பிரபாகரன் வெளிப்படுத்தியுள்ளார். வடக்கு கிழக்கில் இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்துவதற்கான அவ்வியக்கத்தின் யோசனைகள் அதிகபட்சமானவை என்று விமர்சனங்கள் முன்வைக்கப் பட்டபோதும் அவ்யோசனைகள் பற்றிப் பேச்சுவார்த்தை நடாத்த தயாராக இருப்பதாகவும் அவர் மாவீரர் தின உரையின் மூலம் மீண்டும் உத்தியோக பூர்வமாக வெளிப்படுத்தியுள்ளார். தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் அரசியல் தீர்வு எய்தப் படும்போது தனிநாட்டு கோரிக்கையை முன்நிறுத்தப் போவதில்லை என்பதை யும் அவரின் பேச்சு எடுத்துரைத் துள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணியும், பொது ஜன ஐக்கிய முன்னணியும் அரசியல் தீர்வு காண்பதில் ஒருமைப்பாட்டிற்கு வரவேண்டும் என்பதையும், சர்வதேச தலையீடுகள் அதிகரித்ததால் சமாதான நடவடிக்கைகளில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதையும் அவர் கூறியுள்ளார்.

இவற்றை பார்க்கின்ற போது இவை இதுவரையும் தமிழ்த்தேசியத் தலைமை கள் வெளிப்படுத்திய கருத்துக்களைவிட நிதானமானவையாகக் கொள்ளப்பட முடியும்.

கடந்த மாதம் பிரபாகரன் நிகழ்த்திய மாவீரர் தின உரையில் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான சமாதான நடவடிக்கைகளில் சர்வதேச தலையீடுகள் அதிகரித்துள்ளதாகக் கூறியுள்ளார். சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னலில் இலங்கையை இணைத்துக் கொள்வதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹ எடுத்த நடவடிக்கைகளின் காரணமாகவே சர்வதேச அழுத்தங்களும், தலையீடு களும் அதிகரித்ததாகவும் அதனால் சமாதான நடவடிக்கைகளில் பின்னடைவு ஏற்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

மசாசூசெட்ஸ் தீர்மானம், வைகுந்த வாசன் ஐக்கிய நாட்டுச் சபையில் உரையாற்றியமை, இந்திய அரசினால் தமிழ் இளைஞர் அமைப்புகளுக்கு ஆயுதப்பயிற்சி அளிக்கப்பட்டமை, இலங்கையின் வான்பரப்பில் இந்திய விமானங்கள் அத்துமீறி பிரவேசித்து உணவுப் பொட்டலங்களை போட்டமை, இந்தியப்படைகள் அமைதிகாக்கும் படைகள் என்ற பேரில் இங்கு வந்தமை, தற்போதைய சமாதான நடவடிக்கை களில் நோர்வேயின் அனுசரணை, அமெரிக்கா- ஜப்பான்- ஐரோப்பிய ஒன்றியம் என்பன சமாதான நடவடிக் கைகளை பயன்படுத்தி இலங்கையின் மீதான அதன்பிடியை இறுக்கியுள்ளமை போன்ற எல்லாமே இலங்கை அரசாங் கங்களின் பேரினவாத ஆளும் வர்க்க நடவடிக்கைகளினால் மட்டுமன்றி தமிழ்த் தேசிய வாதத்தின் தவறான போக்குகளினாலும் ஏற்பட்டவை என்பதை மறந்துவிட முடியாது. இங்கு ஏகாதிபத்திய மேலாதிக்க சக்திகளின் தலையீடு அதிகரிப்பதற்கு சிங்களப் பேரினவாதத்தினதும் தமிழ்த்தேசிய வாதத்தினதும் தூர நோக்கற்ற குறுகிய நடவடிக்கைகளும் காரணமாக



அமைந்தன.

மாக்சிஸ்ட்டு லெனினிஸ்ட்டுகள் தமிழ் மக்களுக்கென தனிநாடு வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்ட போது வெளிநாட்டு தலையீடுகள் அதிகரித்து, ஏகாதிபத்திய, மேலாதிக்க சக்திகள் அவற்றின் அக்கறையை நிலைநாட்டிக் கொள்ளும் அபாயத்தை கருத்தில் கொள்ளத்தவறக் கூடாது என்பதை வலியுறுத்தியபோது அன்று சிலருக்கு கசப்பாகவே இருந்தது. ஆனால் இன்று ஏகாதிபத்திய மேலாதிக்க தலையீடுகள் அதிகரித் துள்ள நிலையில் இது குறித்து உரிய கவனம் செலுத்தப்படாதது பற்றி இன்று ஏறக்குறைய எல்லோருமே கவலை அடைகின்றனர். தமது தவறுகளை ஏற்றுக்கொள்ளவும் மறுக்கின்றனர்.

உலகின் பல நாடுகளிலும் ஆயுதப் போராட்டங்களை முன்னெடுத்துவரும் அமைப்புகளில் ஒப்பீட்டு ரீதியில் புலிகள் இயக்கம் இராணுவ ரீதியாகவும், தளங்கள் ரீதியாகவும் பலமானதாகவே இருக்கிறது. ஆனால் எல்லா அமைப்பு களும் தந்திரோபாயம் என்ற பேரில் ஏகாதிபத்தியத்தினதோ மேலாதிக்கத் தினதோ தயவை நாடி நிற்கவில்லை. சில இயக்கங்கள் அவ்வாறு தயவை நாடி செயலிழந்து போன வரலாற்றை அறிவோம். அதிகமான இயக்கங்கள் மேலாதிக்கத்திற்கும் ஏகாதிபத்தியத் திற்கும் எதிராகப் போராடும் வேலைத்திட்டங்களை கொண்டிருக் கின்றன. அவை தற்காலிகத் தடைகளை சந்தித்தபோதும் உறுதி யான திசையில் முன்னேறுகின்றன.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு இந்திய மேலாதிக்கம் சாதகமாக இருக்கப்போவதில்லை என்பதை மாக்சிஸ்ட் லெனினிஸ்ட்டுகள் தொடர்ந்து எடுத்துரைத்து வந்தனர். தமிழ்த் தேசியவாதிகள் இந்திய மேலாதிக்கத்தின் தயவினாலேயே தமிழ் மக்களின் உரிமைகளை உறுதிசெய்து கொள்ள முடியும் என்று நம்பினர். தமிழ்மக்களையும் நம்பும்படி பிரசாரம் செய்து வந்தனர். ஆனால் அந்நிலைப் பாடு தவறானது என்பது ஏற்கனவே ஒரு சில வருடங்களிலேயே நிரூபிக்கப் பட்டது.

சமாதான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்ட பின்னரும் கூட இந்திய மேலாதிக்கம் சமாதான முயற்சிகளை குழப்ப எடுத்து வரும் நடவடிக்கை களையும் எல்லோரும் அறிவர். இந்தியா குழப்பும் நடவடிக்கைகளை எடுப்பதனால் இந்தியாவுக்கு இணங்கிப் போயே இலங்கையின் இனப்பிரச்சினை க்கு அரசியல் தீர்வு காணப்பட முடியும் என்று அநேகமான தமிழ்த்தேசிய வாதிகள் நம்புகின்றனர்.

இவ்வாறான சூழ்நிலையிலும் மாவீரர் தின உரையில் இந்தியா பற்றிய அடக்கிய வாசிப்பையே கேட்க முடிந்தது. புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகம் தொடர்பான யோசனைகள் பற்றி இந்திய ஊடக உலகத்திலிருந்தும் இந்திய அரசியல் ஆய்வாளர்களிட மிருந்தும் கண்டன விமர்சனங்களே வந்து கொண்டிருக் கின்றன என்று பிரபாகரன் கூறியுள்ளார். இந்திய மேலாதிக்கம் இடைக்கால நிர்வாகத்தை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. இலங்கை தமிழ் மக்களுக்கு பூரண சுயாட்சியை வழங்குவதையும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. அதுவே அதன் இந்திய ஆளும் வர்க்க நிலைப்பாடாகும். எனினும் மாவீரர் தின உரையில் இந்தியா பற்றிய அடக்கிய வாசிப்பு இலங்கை தமிழ் மக்கள் மத்தியில் இந்தியா பற்றிய மயக்கத்தையே தொடரச் செய்யும். இந்திய ஆளும் வர்க்க நலனிற்காக இலங்கைத் தமிழ் மக்கள் அவர்களின் சுயநிர்ணய உரிமை யை கையிழக்க முடியாது என்பது அறைந்து கூறப்பட்டிருக்க வேண்டும்.

தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு காண்பது என்பது ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்கும் ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் அவர்களது அதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்ளு வதற்கான தந்திரோபாயமாகும்.

-நமது விசேட அரசியல் நிருபர்-

அவற்றின் முதலாளித்துவ, பேரினவாத நிலைப்பாடு காரணமாக அவை தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையையும், சமத்துவத்தையும் கொள்கை ரீதியாகவும் மனப்பூர்வமாகவும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. அவை சமாதானம் பற்றி உச்சரித்தாலும் அவற்றுக்கு யுத்தம் என்ற இன்னொரு கோரமுகம் இருக்கிறது. இவை பற்றி பல விளக்கங் களையும் ஆதாரங்களையும் புதிய பூமி தொடர்ந்து வெளியிட்டு வந்துள்ளது.

சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னலில் இலங்கையை இணைத்துக் கொள்ளும் பிரதமர் ரணிலின் நடவடிக்கைகளையும் நாம் ஏற்கனவே அம்பலப்படுத்தினோம். சர்வதேச சமூகம் என்ற பேரில் இலங்கையின் சமாதான நடவடிக்கை களில் அமெரிக்க, மேற்குலக, ஜப்பான் ஏகாதிபத்தியங்கள் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை உறுதி செய்து



கொடுப்பதற்காகத் தலையிடவில்லை மாறாக அவற்றின் ஏகாதிபத்திய உலக மயமாதல் நிகழ்ச்சி நிரலை இலங்கையில் முன்னெடுத்து முழு இலங்கையையு கபளிகரம் செய்வதற்கே ஆகும்.

எனவே தான் ஆட்சிக்கு வரச கூடியவை அல்லது பலமானவை என்ற அடிப்படையில் ஐக்கிய தேசியச் கட்சியை யும் பொது ஜன ஐக்கிய முன்னணியை யும் அரவணைக்கும் வெளிநாடுகளை நம்பும் தமிழ் பழமை வாத ஆதிக்கவாத நிலைப்பாட்டை நாம் நிராகரிக்கிறோம். அவற்றுக்கு அப்பால் கொள்கை ரீதியாக இனங்களின் சுயநிர்ணய உரிமையையும் சமத்துவத் தையும் ஏற்றுக் கொண்டுள்ள தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்ற சிங்கள மக்கள் மத்தியிலுள்ள இடதுசாரி, ஜனநாயக முற்போக்கு சக்திகளினூடாக பெரும்பான்மை சிங்கள மக்களை தமிழ் மக்களின் போராட்டத்தின் நியாயப் பாட்டை ஏற்றுக் கொள்ளச் செய்ய வேண்டும். அத்துடன் சமாதான நடவடிக்கை களினூடாக முழு இலங்கை யினது வளங்களையும் கொள்ளை யடிக்கும் ஏகாதிபத்தியத்திற்கு துணை போகாது, ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்துடன் தமிழ் மக்களின் போராட்டத்தையும் இணைத்து தமிழ் மக்களின் போராட்டத்தின் சரியான திசை மார்க்கத்தை முன்னெடுக்க வேண்டும்.

அதன்மூலமே சமாதான வழியிலும் அரசியல் தீர்வை காணமுடியுமேயன்றி ஐக்கிய தேசியக் கட்சி, பொது ஜன ஐக்கிய முன்னணி என்பவற்றினதும், வெளிநாடுகளினதும் ஆதிக்கத்தினால் அழுத்தத்தினால் அல்ல என்பது உணரப்பட வேண்டும்.

---

## சிங்கள – தமிழ் கலைக்கூடல் வெற்றிகரமாக நடைபெற்றது.

## பேரினவாத ஃபாசிட் தாக்குதல் முறியடிப்பு.

ஹிரு குழுவினரின் ஏற்பாட்டில் கொழும்பு புதிய நகரசபை மண்டபத்தில் சிங்கள – தமிழ் கலைக்கூடல் நடை பெற்றது. நூற்றுக்கணக்கான தமிழ் – சிங்கள எழுத்தாளர்கள் கலைஞர்கள் கலந்து கொண்டனர்.

ஒக்டோபர் 29ம் திகதி நிகழ்வு தொடங்கப்பட்டு சிறிது நேரத்தில் மண்டபத்திலிருந்து பேரினவாதிகள் சிலர் அந்நிகழ்வை குழப்பும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அவர்களை மண்டபத்திலிருந்து விழா ஏற்பாட்டாளர்கள் வெளியேற்றிய பிறகு மண்டபத்திற்கு வெளியில் தடிகள், கற்களுடன் மண்டபத்தை நோக்கி பேரினவாத கும்பல், தாக்குதல்களை தொடுத்தது. அத்தாக்குதல்களுக்கு ஏற்பாட்டாளர்கள் எதிர்தாக்குதல் களை செய்து குழப்பம் விளைவித்த பேரினவாதிகளை விரட்டி அடித்தனர். அதற்கு பிறகு பொலிசார் தலையிட்டு



தாக்குதல் நடத்திய சில பேரினவாதி களை கைது செய்ததுடன் நிலைமை ஓரளவிற்கு கட்டுப்பாட்டிற்குள் வந்தது.

ஏற்பாட்டாளர்கள் தாக்க வந்தபேரின வாதிகளைத் திருப்பி தாக்கி பின்வாங்கச் செய்த போதும் இரண்டு நாள் நிகழ்வுகளின் போதும் மண்டபத் திற்கு வெளியில் பேரின வாதிகள் ஆர்ப்பாட்டங்களைச் செய்தனர்.

எனினும் 29, 30 ஆம் திகதி நிகழ்வுகள் திட்டமிட்டபடி நடைபெற்றன. கலந்து கொண்டவர்களுக்கும் அக்கலவரச் சூழ்நிலை பாதிப்பு ஏற்படாத அளவிற்கு விழா ஏற்பாட்டாளர்கள் சுமுகமாக நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்தினர்.

சிஹலஉறுமய அமைப்பினரே அந்த குழப்ப நிலைமைக்கு காரணமான வர்கள் என்பது வெட்ட வெளிச்ச மானது. அவர்களின் கும்பலில் பெரிய வர்கள், இளைஞர்களுடன் பௌத்த பிக்குகளும் ஒரு சிங்கள பத்திரிகை நிறுவனப் பத்திரிகையாளர்களும் இருந்தனர். அவர்கள் சிங்கள – தமிழ் கலைக்கூடலை புலிகள் இயக்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறுவதாக குற்றஞ் சாட்டியே குழப்பத்தை விளைவித்தனர்.

அவர்களின் குழப்ப நடவடிக்கை களையும், பிழையான பிரசாரங் களையும் மிகவும் வெற்றிகரமாக விழா ஏற்பாட்டாளர்கள் முறியடித்தனர். இக்குழப்பத்தின் போது தமிழ் எழுத்தாளர்கள் கலைஞர்களுக்கு சிறு அளவில் தானும் பாதிப்பு ஏற்பட வில்லை. இதனை தமிழ் கலைஞர்கள் சிலாகித்து பேசிவருகின்றனர்.

விழா ஏற்பாட்டாளர்கள் இடதுசாரி பாரம்பரியம் கொண்டவர்கள் என்பதுடன் குழப்ப சூழ்நிலையை இடதுசாரிகளுடன் இணைந்தே முகம் கொடுத்தனர் என்பது குறிப்பிடத்தக்க தாகும்.

முன்னைய காலங்களில் இனவன் முறைகளுக்கும் தாக்குதல்களுக்கும் எதிராக சிங்கள மக்கள் மத்தியில் தன்னெழுச்சியாவும், ஸ்தாபனப்படுத்தப் பட்ட வகையிலும் எதிர்ப்புகள் காட்டப் பட்டுள்ளன. 1956 சிங்களம் மட்டுமே அரசகரும மொழி என்ற சட்டம் கொண்டு வரப்பட்ட போது அதனை எதிர்த்து இதே புதிய நகர மண்டபத்தில் கம்யூனிஸ்ட்கள், சமசமாஜிஸ்ட்டுகள் கண்டனக் கூட்டத்தை நடாத்திய போது பேரினவாதிகளின் தாக்குதல் களுக்குள்ளானார்கள். குண்டெறியப் பட்டதால் பலர் காயமடைந்தனர். ஒரு சிங்களவர் ஒரு கையை இழந்தரர். 1958, 1977, 1983 இனவன்முறை களின் போது சிங்கள மக்கள் தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு வழங்கியதையும், சிலர் வன்முறையாளர்களை தாக்கியதையும் நாமறிவோம்.

இனவாத சூழ்நிலையில் தமிழ் சிங்கள எழுத்தாளர்கள் மாநாடுகள், இன ஒற்றுமைக்கான கூட்டங்கள் பாதயாத்திரைகள், வீதி நாடகங்கள் என்பனவற்றை சிங்கள மக்கள் மத்தியில் நடாத்தினர். 1990களில் யுத்தத்திற்கு எதிராகவும், தமிழ் மக்களுக்கு நியாயமான ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் என்பதை வலியுறுத்தியும் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இதனால் பல இடதுசாரிகள் தாக்கப்பட்டுள்ளனர். 1988ம் ஆண்டு மாகாண சபைக்கு ஆதரவாக இருந்தார் கள் என்பதற்காகவே ஆயிரக்கணக் கான இடது சாரி தலைவர்கள் ஜே.வி.பியினால் கொல்லப்பட்டனர்.

பாராளுமன்ற பாதையில் மூழ்கிவிட்ட சில இடதுசாரிகளின் சில தவறுகளி னால் இனவாதத்திற்கு எதிரான இயக்கம் வலுவானதாக கட்டிவளர்க்கப் படவில்லை. அத்துடன் ஆளும் வர்க்கத்தினர் தமிழ் மக்களின் மீது இன ஒடுக்கலை மிகவும் கொடுமை யாக நடத்தியதுடன் சிங்கள மக்கள் மத்தியில் இனவாதத்தை தூண்டி வளர்க்கும் நடவடிக்கைகள் மேற்கொண்டதால் பேரினவாதம் மிகவும் வேகமாக வளர்ச்சிபெற்றது.

இன்று பேரினவாதம் பாசிஸ்ட் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுவருகிறது. அதில் ஒன்றே சிங்கள – தமிழ் கலைக்கூடல் நிகழ்ச்சியை குழப்பு வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை களாகும்.

அத்தாக்குதலைக் கண்டித்து எதிர்த்து விழா ஏற்பாட்டாளர்கள், இடதுசாரிகள், ஜனநாயக, முற்போக்கு சக்திகள் டிசம்பர் 3ம் திகதி அதே புதிய நகரசபை மண்டபத்தில் கண்டனக் கூட்ட மொன்றையும், ஆர்ப்பாட்டத்தையும் செய்ய ஏற்பாடுகளை செய்துள்ளனர். இனவாதத்திற்கு எதிராக மேற் கொள்ளப்பட வேண்டிய ஐக்கிய நடவடி க்கைகள் பற்றி பல கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன. நிகழ்ச்சிகளும் திட்டமிடப்பட்டுள்ளன.

தற்போதைய நிலைமையில் இனவாதத் திற்கு எதிரான இயக்கம் மிகவும் சக்தி வாய்ந்த நிலைமையில் இல்லாவிடினும் இனவாதத்திற்கு எதிரான இயக்கம் இல்லை என்று நம்பிக்கை இழக்க வேண்டிய அவசியமில்லை என்பதை மேற்படி நிகழ்ச்சிகள் எடுத்துக் காட்டுகின்றன. இதில்

தொடர்ச்சி 11ம் பக்கம்..

படிப்பகம்

www.padippakam.com



# வறுமையால் வாழுவோர் யார்?

வறுமையின் பிரபுக்கள்: கட்டுரைகள்; சாந்தி சச்சிதானந்தம், மன்று வெளியீடு, மட்டக்களப்பு 2003, ப. 181+ *iii*, ரூ.100/-

பன்னாட்டு நிதிக்கொடை நிறுவனங்கள் என்பன வெறுமனே மனிதாபிமான நோக்கிற் செயற்படுவன அல்ல. அவற்றுக்கான நிதி எங்கிருந்து வருகிறதோ, அந்த ஊற்றுக்கண் அவற்றின் உலக நோக்கையும் செயற்பாட்டையும் தீர்மானிக்கின்றது. நிதிக்கொடை நிறுவனங்களும் அவற்றின் கரங்களாக இயங்கும் அரசு சாரா நிறுவனங்களும் (என்.ஜி.ஓ) எத்தகைய உள்நோக்கால் வழிநடத்தப்படுகின்றன என்பது பற்றி ஜேம்ஸ் பெற்றாஸ் எழுதிய ஒரு கட்டுரை இரண்டு ஆண்டுகள் முன்னர் தமிழில் மொழிபெயர்ந்து வெளியானது. அதற்கும் மேலாக, இந்த உதவுங்கரங்களின் நோக்கம் ஏழைகளின் வாழ்வின் மீதான அதிகாரத்தை அவர்கட்கு வழங்குவதல்ல என்பதையும் மாறாகள அவர்களின் விடுதலைக்கான அரசியற் பாதையிலிருந்து அவர்களைத் திசைதிருப்புவதுதான் என்பதையும் எவரும் விளக்கிச் சொல்ல வேண்டியதில்லை.

நூலாசிரியை பன்னிரண்டு ஆண்டுகளாக என்.ஜி.ஓ. வாழ்க்கையை அறிந்தவர். அவர் நூலிற் குறிப்பிடுகிற சீர் கேடுகட்கும் மேலாக, எத்தனையோ அலுவலர்கள் தமது சுயலாபத்துக்காக நிறுவன வசதிகளைப் பாவித்து வியாபாரம் செய்ததையும் அவர் அறிவார். மக்கள் இலக்கியம் கூட என்.ஜி.ஓ. அமைப்புக்கள் மூலமே இயலும் என்று தமது சீரழிவை நியாயப்படுத்தியவர்களை அவர் அறிவார். பொஸ்பேற் படிவுகளை அயலாருக்கு விற்பதை எதிர்த்த ஆர்ப்பாட்டத்தில் அரசியல் பேசாதே என்று ஆணையிட்ட என்.ஜி.ஓ. தொழிற்சங்கவாதிகள் பற்றியும் அவர் அறிவார். இவை எல்லாம் தற்செயலான தனிப்பட்ட நிகழ்வுகள் அல்ல. மக்களது சுய முயற்சிக்கு அப்பாற்பட்ட நிலையில் சமூக மாற்றத்துக்கான இயக்கம் எதுவும் கட்டியெழுப்பப்பட இயலாது. வெகுசன அரசியலையும் புரட்சிகர அரசியல் மாற்றத்தையும் நிதிக்கொடை நிறுவனங்களும் என்.ஜி.ஓக்களும் ஏற்றதில்லை ஏற்கவும் இயலாது. இதற்கான காரணம், அவற்றின் இழுப்புக்கு ஆதாரமான உலக சமுதாய ஒழுங்கின்மீது அதாவது ஏகாதிபத்திய மேலாதிக்கத்தை ஏற்கும் ஒரு அமைப்பின் மீது தங்கியுள்ளது என்பதுதான். எந்த விதமாகக் கொலனி யுகத்தில் கிறிஸ்துவச் சார்பான தரும நிறுவனங்கள் சமூக சேவையாற்றினவோ, அது போலவே நவகொலனி யுகத்தில் நிதிக்கொடைத் திருச்சபைகளும் என்.ஜி.ஓ. தொண்டர்களும் இயங்குகின்றனர். இந்த அடிப்படையான உண்மையை மறுத்து அல்லது மறந்து பன்னாட்டு நிதிக்கொடை நிறுவனங்களையும் என்.ஜி.ஓக்களையும் விமர்சிக்கும் போது, அவற்றின் குற்றங்கள் யாவும் தனிமனிதர்களது குறைபாடுகளால் ஏற்படுவதாகவும் அக்குறைப்பாடுகளை நீக்கும் போது தவறுகள் நீங்கி விடும் என்றும் எண்ணத் தோன்றும். எனினும், இதுவே இந் நூலின் பன்னிரண்டு கட்டுரைகளின் முதல் ஏழிலும் காணப் படும் விமர்சனங்களின் அணுகு முறையாக உள்ளது.

இந்த நூலில், தான் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் தனது சுயாதீனமான செயற்பாட்டை அனுமதிக்கும் விதமாக அவற்றைத் தெரிவு செய்ததாகவும் அவர் அறிய ஒவ்வொன்றும் 1000 முதல் 3000 வரை உறுப்பினர்களைக் கொண்ட ஏழு அடிமட்ட அங்கத்துவ நிறுவனங்களும் துறை சார்ந்த அமைப்புக்களும் அவர் பணியாற்றிய பிரதேசங்களில் உருவாகியுள்ளதாகவும் அவர் கூறுகிறார். இங்கெல்லாம் புதிய இளம் தலைமுறை, மகளிர், வறியோர் தலைமைத்துவங்கள் முன்னணி வகிப்பதாகவும் அவர் கூறுகிறார். அந்நிய பண உதவி ஓயும் போதும் இத்




தலைமைத்துவங்களும் உறுப்பினர்களும் செயற்படக்கூடிய நிலையில் இருப்பார்களா என்பது பற்றி நூலிலிருந்து என்னால் அறிய இயலவில்லை.

என்.ஜி.ஓக்களதும் அவர்களுக்கு ஊட்டமளிக்கும் அமைப்புகளதும் பல குறைபாடுகள் நூலிற் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இவற்றிற் பலவும், நூலாசிரியை கூறாத இன்னும் பல ஊழல்களை நாமெல்லாரும் அறிந்த விடயங்களேயாயினும், இந்நூலில் அவை பதிவாகியுள்ளமை பயனுள்ள விடயமாகும். ஆயினும், இக் குற்றங்கள் தனி மனிதர்களைத் திருத்தி அல்லது தகுதியான நடுத்தர வர்க்க ஆய்வறிவாளர்களைப் பொறுப்பில் அமர்த்திச் செப்பனிடக்கூடியன என்பது அவரது பார்வையாக உள்ளது.

நூலாசிரியை சிவில் சமூகம் என்பதை அரசியலுக்கு ஒரு மாற்றீடாகவே முன்வைப்பதாகத் தெரிகிறது. இதுவும் இன்றைய ஏகாதிபத்திய- என்.ஜி.ஓ. வேலைத்திட்டத்தின் ஒரு முக்கியமான கருத்து நிலை என்பதை அவர் அறியாதிருக்கலாம். அரசு-சந்தை-சிவில் சமூகம் என்று சமுதாயத்தைப் பிரித்துப் பார்க்கிறபோது வர்க்கம், வர்க்கப் போராட்டம் என்ற வரலாற்று யதார்த்தம் மூழ்கடிக்கப்படுகிறது. அரசு பற்றிய அவரது விளக்கங்கள் வெவ்வேறு இடங்களில் முரண்பட்டிருப்பதும் அவற்றினுள் உள்ள குழப்பங்களும் அரசு என்றால் என்ன என்பதைப் பற்றி அவர் ஒரு தீர்க்கமான கருத்தைக் கொண்டிருக்கவில்லை என்பதையே உணர்த்துகிறது.

தேசிய சுய நிர்ணயம் பற்றிப் பேசும்போது அரசை மாற்றவும் நிறுவவுமான உரிமையிலிருந்து அதன் வரலாற்றைத் தொடங்கும் ஆசிரியை, தேசிய அடிப்படையில் இன்னொரு தேசிய ஆதிக்கத்தின் கீழிருந்து விடுதலை பெறும் உரிமையின் தோற்றம் முற்றிலும் வேறுபட்ட ஒரு அரசியற் பார்வையினின்றும் யதார்த்தத்தினின்றும் பிறந்தது என்பதைத் தெளிவுபடுத்தியிருக்கலாம்.

லெனினின் சுயநிர்ணயம் எவ்வளவு தூரம் தேசிய இனங்களின் விடுதலையை வற்புறுத்தியோ அதற்கு நேர் மாறான நடைமுறையைக் கடைப்பிடிக்கத் தொடங்கிய அமெரிக்காவின் சனாதிபதி வூட்றோ வில்ஸன் அதை அமெரிக்க விஸ்தரிப்புவாத நோக்கிற் பிரகடனஞ் செய்ததைத் தவற விட்டு விடுகிறார். இந்நூலில் எவ்விடத்திலும் அமெரிக்க ஏகாதிபத்தியம் பற்றியோ பெரு முதலாளிய நாடுகளின் ஏகாதிபத்தியக் கூட்டணியைப் பற்றியோ, விமர்சனமாக இல்லாவிட்டாற்கூட, அப்படிப்பட்டவை செயற்படுவதை அடையங்கண்டவிதமாக எதுவும் இல்லாமை, நூலாசிரியையால் வெள்ளையர்-கறுப்பர் என்ற அதிகாரச் சமன்பாட்டுக்கு அப்பால் எதையும் காண முடியாதுள்ளார் என்பதைக் குறிக்கிறதா? கொலனியத்தை அறிந்த ஆசிரியைக்குப் பேரினவாதம் தெரிகிறது, ஆனால் நவகொலனியம் தெரியவில்லை.

சீனாவின் பண்பாட்டுப் புரட்சி பற்றி நூலாசிரியை மிகவும் குழப்பமான சிந்தனைகளையே கொண்டுள்ளார் என்பதையும் அது சோஷலிசத்தின் கீழ் வர்க்கப் போராட்டத்தைத் தொடர்வது பற்றியது என்பதையும் அதன் தோற்றுவாய் வெறுமே நூலாசிரியை கருதும் "பண்பாட்டு" விடயங்கள் பற்றியதல்ல என்பதையும் இங்கு வற்புறுத்த விரும்புகிறேன். இவ்வாறான தவறான விளக்கங்களின் காரணம், அரசியலைத் தவிர்த்துச் சமூக மாற்றத்தை நாடும் சிந்தனைப்போக்கு என்றே எண்ணுகிறேன். வர்க்கம், வர்க்கப் போராட்டம், அரசு, புரட்சி என்பன பற்றிய தெளிவான பார்வை இல்லாமல் உலக நிகழ்வுகளை எவராலும் சரியாக விளக்க இயலுமென நான் நம்பவில்லை. அவ்வாறு விளக்கும் எந்த முயற்சியும் ஒடுக்குமுறையாளர்கட்குச் சாதகமாகவே அமையும்.

நூலாசிரியையின் பிற கட்டுரைகளிலும் சமூகப் பிரச்சினைகட்கிடையில் உள்ள உறவும் அவற்றக்கு அடிநாதமாகவுள்ள சமூக முரண்பாடுகளும் பற்றிய தெளிவீனம் பல இடங்களிலும் புலனாகிறது. இல்லாவிட்டால் "சகல வர்க்கத்தினரையும்" பிரதிநிதித்துவம் செய்யும் பெண்கள் குழுக்களைக் கொண்ட இயக்கம் பற்றி அவர் எழுத நேரிட்டிராது.

நூலை வாசிக்கும் போது பல இடங்களில் ஆங்கிலத்தில் எழுதிய எதையோ அப்படியே யாந்திரிகமாகத் தமிழாக்கியது போல உணர்வு ஏற்படக் கலைச்சொற் பிரயோகங்களுள் மட்டுமே காரணமல்ல. வாக்கிய அமைப்பும் பல இடங்களில் நெருடலாக உள்ளது. பல சொற்கள் தவறாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த நூலிற் சொல்லப்பட்ட விடயங்கள் எளிய மொழிநடையில் முரணின்றித் தெளிவாக எழுத இயலாதளவு சிக்கலானவையல்ல. இது பற்றிச் சிறிது முயற்சி எடுத்திருக்கலாம். அச்சுப் பிழைகளும் அளவுக்கதிகமாகவே உள்ளன.

எந்த ஒருவரும் சொல்கிற விடயங்களை விடச் சொல்லாமற் தவிர்க்கிற விடயங்கள் முக்கியமானவை. மூன்றாமுலக நாடுகளின் வறுமை மேலும் ஆழமாகிப் பரவுவதற்கான காரணம் என்ன என்ற கேள்வியின் உண்மையான விடை நூலில் முற்றாகவே தவிர்க்கப்பட்டுள்ளது. மக்களின் விடுதலைக்கான பாதை அரசியல் தவிர்ந்ததாக இருக்க இயலாது. மக்கள் விடுதலை அரசியலுக்குப் பிரதியாக என்.ஜி.ஓ. தருமங்கள் திட்டமிட்டே புகுத்தப்படுகின்றன என்ற உண்மை புறக்கணிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு என்.ஜி.ஓ.வும் நல்லவர்களைச் சீர்குலைக்கிறது ஏன் என்ற கேள்வியைத் தலைக் கீழாக்கித் தனிமனிதக் குறைபாடுகளாலேயே சில என்.ஜி.ஓக்களால் முறையாக இயங்க இயலவில்லை என்ற கருத்து வற்புறுத்தப்பட்டுள்ளது. இவையும் தற்செயலான தவறுகளல்ல. இவை ஒரு உலக நோக்கின் வெளிப்பாடுகள்.

தமிழில் என்.ஜி.ஓ.சிசத்தைப் பற்றிய நூல்கள் போதாது. இந்த நூலிற் சில பயனுள்ள அம்பலப்படுத்தல்கள் பதிவாகியுள்ளன. அவ்வகையில் இது வரவேற்கத்தக்க பண்புடைய நூலென்பேன்.

-சி. சிவசேகரம்-

---

***மாக்ஸி.....***

9ம் பக்க தொடர்ச்சி...

தொபெரியாரியம், அம்பேத்கரியம் என்று பேசுகிற அமைப்புக்களுள் ஒடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளும் செயலூக்கமுள்ள தொண்டர்களும் உள்ளனர். அவர்களுடனான நேச உறவு அவசியமானதும் நன்மையானதுமாகும். ஆனால் அது மாக்ஸிய-லெனினிய அணுகுமுறையை விட்டுக்கொடுக்கும் ஒரு சமரசமாகுமானால் அரசியற் சீரழிவே மிஞ்சும்.

தேசிய விடுதலை, பெண்ணுரிமை, இனச்சமத்துவம். நிறவாத நீக்கம், சாதி ஒழிப்பு என்கிற விடயங்களில் ஒரு மாக்ஸியவாதிக்குத் தடுமாற்றத்துக்கு இடம் இருக்க முடியாது. எங்கெல்லாம் இவை பிரதான முரண்பாடுகளாக அல்லது முக்கிய விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவும், இயன்றபோது பங்களிப்பும் தேவையானவை. மாக்ஸிய லெனினியவாதிகள் தலைமைதாங்கிய சூழ்நிலைகளும் இருந்துள்ளன. தலைமை தாங்கக்கூடிய சூழ்நிலைகள் உருவாகின்றன. ஆயினும் ஒரு மாக்ஸியவாதி ஒரு தேசியவாதியாகவோ, தலித்தியவாதியாகவோ சிறுபான்மை இனத்துவவாதியாகவோ பெண்ணியவாதியாகவோ பாசாங்கு செய்ய முடியாது. ஏனெனில் மாக்ஸியவாதியின் விரிவான விடுதலை நோக்கில் இவை முக்கியமான அம்சங்கள். ஆனால் முழுமையல்ல.

- இமயவரம்பன் -

---

# தாயகம் சஞ்சிகை

(செப்டம்பர் இதழ்)

தேசிய கலை இலக்கியப் பேரவையின் கலை இலக்கிய சமூகவிஞ்ஞான காலாண்டிதழாக வெளிவரும் 'தாயகம்' 48வது இதழ் கடந்த செப்ரம்பர் - 2003இல் வெளிவந்துள்ளது. அண்மையில் தாயகம் சஞ்சிகை அளவு மாற்றத்துடன் முகப்போவியங்களுடன் வெளிவருவதில் இது மூன்றாவது சஞ்சிகையாகும்.




இச் சஞ்சிகையின் முன்னட்டையில் பிரான்ஸ் நூதனசாலையில் அமைக்கப்பட்டுள்ள மத்தியகால அடிமை ஒருவரின் சிலையின் வடிவம் சித்திரிக்கப்பட்டுள்ளது. பின் அட்டையில் 'இன்னோர் உலகுக்காய்' என்ற கவியரங்கில் பங்குபற்றிய கவிஞர்களின் முகத்தோற்ற நிழற்படங்கள் அலங்கரிக்கின்றன.

'நீயாகவே இருக்கும் இயற்கையை காதலிக்கக் கற்றுக் கொள்' என்ற தலைப்பில் இலத்தீன் அமெரிக்கச் சமூக நீதியாளரான 'டேவிட் பர்சமியன் எட்வர்ட் கலியனோ' என்பவரின் முழுமையான பேட்டியொன்றின் ஆங்கில வழித் தமிழ்வடிவத்தை க.வேல்தஞ்சன் வழங்கியுள்ளார்.

இவ்விதழில் ஸ்வப்னா, சோ. பத்மநாதன், வே. தினகரன், காரை சுந்தரம்பிள்ளை, நவசித்தன், அழ. பகிதரன், ச. முருகானந்தன், வளவை வளவன், இதயராசன் என்போரின் கவிதைகளும் இப்னு அஸுமத், மொழி பெயர்த்த அனுபர. கே. எதிரி சூரியவின் 'நாய்ப்பிணம்' என்ற மொழிபெயர்ப்பும் ஸிரிய கவிஞர் முஹம்மட் அல்-மபுவு என்பவரின் 'நண்பகற் சூரியனும் நிழலும்' என்ற கவிதைகளும் இடம் பெற்றுள்ளன.

நான்கு சிறுகதைகளும் உள்ளன. கருணானந்தன், முத்து, சி. கதிர்காமநாதன், நீ. பி. அருளானந்தம் ஆகியோர் எழுதியுள்ளனர். திருமதி. திலகா விவேகானந்தனின் 'புதுப்புது அர்த்தங்கள்' என்ற மகளிர் பற்றிய நாடகப்பிரதியும் வெளியிடப்பட்டுள்ளது.

பேராசிரியர் கைலாசபதி பற்றிய ஓர் எதிர் வினை, மூன்றுகால் முயல்காரர் என்ற வாதப்பிரதி வாதங்கள் இடம் பெற்றுள்ளன. 'சி. சிவசேகரம், கும்பகர்ணன், அகிலன், பூரணன், குழந்தை. ம. சண்முகலிங்கம், அ. யேசுராசா, திருமதி பா. கணேசதுரை, நா. சத்தியபாலன் ஆகியோரின் கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன.

---

# கே. டானியல் நினைவாக




## கனடாவில் நூல் வெளியீடு

கனடாவில் இருந்து கே. டானியல் நினைவு மலர் ஒன்று வெளிவந்திருக்கின்றது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மறைந்த தோழர் கு.சிவராசாவுக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டு நூறு பக்கங்களைக் கொண்ட கட்டுரை நூலாக இந்நினைவு மலர் வெளியிடப்பட்டுள்ளது. சி. பாலசுப்பிரமணியம் மார்க், தருமராசா, சிவம் ஆகியோரை பதிப்பாசிரியர் குழுவாகக் கொண்டு முப்பது தலைப்புகளுடனான கட்டுரைகள் ஆக்கங்கள் இடம் பெற்றுள்ளன. புலம் பெயர்ந்த நாட்டில் தோழர் கே. டானியல் மீண்டும் ஒரு முறை கனதியான நினைவு கூர்தலுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார். இது மிகவும் மெச்சத்தக்க முயற்சியாகும். இந்நினைவு நூல் பற்றிய முழுமையான நோக்கு அடுத்த புதிய பூமியில் வெளிவரும்.

---

35 ஆயிரம் குடும்...

1ம் பக்க தொடர்ச்சி..

சில தொழிற்சங்கத் தலைவர்கள் தோட்டங்களிலிருந்து யாரையும் வெளியேற்ற முடியாது என்று திட்டவட்டமாக கூறுகின்றனர். ஆனால் அதற்கு எவ்வித அடிப்படையும் இல்லை. காலஞ்சென்ற ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தன இ.தொ.கா.விற்கு வாக்குறுதி அளித்ததன்படி அவ்வாறு வெளியேற்ற முடியாது என்று இ.தொ. காவின் செல்லச்சாமி தெரிவிக்கின்றார்.

அவ்வாறான வாக்குறுதிகள் அரசாங்க விடுதிகளை மீளப்பெற்றுக் கொள்ளும் சட்டம், காணிகளை மீளப்பெற்றுக் கொள்ளும் சட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் எடுக்கப்படும் சட்டநடவடிக்கைகளுக்கு சவால்விடக் கூடியதாக இருக்க முடியாது என்பதை அறிவோம்.

பத்திரிகை அறிக்கைகள் வீரப்பிரதாபங்களை காட்டுவதை விட உரிய அமைச்சுகள், நிறுவனங்களுடன் பேசி சட்டரீதியான, நிர்வாக ரீதியான முடிவுகளை எடுத்து தோட்டக் குடியிருப்புகளில் வாழ்வோரும் குடும்பத்தினரும், தோட்டங்களில் தொழில் செய்யாவிட்டாலும் அவற்றில் தொடர்ந்து வாழ்வதற்கு உறுதியளிக்கப்பட வேண்டும். உறுதியான முடிவுகளும் நடவடிக்கைகளும் எடுக்கப்படாவிட்டால் மீண்டும் மீண்டும் இவ்வாறான வெளியேற்றல் அச்சுறுத்தல் வந்து கொண்டே இருக்கும். 35 ஆயிரம் குடும்பங்கள் என்பது ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட மக்களைக் கொண்டதாகும். தங்களது இருப்பைப் பற்றியே சதா சிந்தித்து அரசாங்கத்துடன் ஒட்டி உறவாடி வரும் அமைச்சர்கள் பிரதி அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவ்வாறு நடந்து கொள்ளப் போகிறார்கள் என்பதையே தோட்டத் தொழிலாளர்கள் எதிர்பார்த்து நிற்கின்றனர்.

---

சிங்கள - தமிழ்..

10ம் பக்க தொடர்ச்சி..

இடதுசாரி சக்திகள் மிக நம்பிக்கையோடு செயல்பட்டும் வருகின்றனர்

எனவே சிங்கள மக்கள் மத்தியில் பேரினவாதத்திற்கு எதிரான இயக்கத்தை வலுப்படுத்தி இனவாதத்தை இம்மண்ணிலிருந்து அகற்ற தமிழ் மக்கள் தமிழ் கலைஞர்கள் எழுத்தாளர்கள், புத்திஜீவிகள் பங்களிப்புகளை செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும். தமிழ் மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் அதேவேளை இனவாதத்திற்கு எதிராகவும், இன ஐக்கியத்திற்கும் குரல் கொடுப்பதுடன் சிங்கள மக்கள் மத்தியிலுள்ள இனவாதத்திற்கு எதிரான சக்திகளுடன் இணைந்து நடவடிக்கைகளை முன்னெடுப்பதும் அவசியமாகிறது.

படிப்பகம்

www.padippakam.com



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

Puthiya Poomi

சுற்று 10 டிசம்பர் 2003 பக்கம் 12 விலை 12/- சுழற்சி 64

## பேராசிரியர் கைலாசபதியின் 21வது நினைவு



இலங்கைத் தமிழ்ச் சூழலில் பேராசிரியர் க.கைலாசபதி சிறந்த சமூகச் சிந்தனையாளராகத் திகழ்ந்தவர். அவரது மாக்சிச உலக நோக்கு சமூக இலக்கிய கல்வி அரசியல் தளங்களில் பாரிரய பங்களிப்புக்கு அடிப்படையாக அமைந்தது. அவரது வரலாற்றுப் பாத்திரம் மேலும் விரித்து நோக்கவேண்டியதாகும். அவரது நினைவு தினம் 06.12.2003 ஆகும்.

# பேரினவாதத்தை எதிர்த்து நிற்க இடதுசாரி ஜனநாயக சக்திகளாலேயே முடியும்.

## தெற்கிலும் வடக்கிலும் அவர்களுக்கு பக்க பலம் அவசியம்

## இனவாத எதிர்ப்புக் கூட்டத்தில் தோழர் தம்பையா.

இந்த நாட்டிலே உழைக்கும் மக்களையும் தேசிய இனங்களையும் பிளவு படுத்தவும் அதன் மூலம் தமது வர்க்க தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றவும் இனவாதம் ஒரு கேடுகெட்ட கருவியாக்கப்பட்டது. அதுவே இன்று பேரினவாதமாகி நிறுவனப்படுத்தப்பட்ட ஒன்றாகவும் காணப்படுகின்றது. இதனை கருத்தியல் ரீதியாகவும் நடைமுறை வழிகளிலும் எதிர்த்து நிற்கக்கூடிய சக்தி இந்நாட்டின் இடதுசாரி ஜனநாயக இயக்கங்களுக்கே உண்டு. அதற்கான தொடர்ச்சியான பாரம்பரியமும் அவர்களுக்கே உரியதாகும். அதன் அடிப்படையிலேயே கடந்த ஒக்ரோபர் 29ம் 30ம் திகதிகளில் இதே மண்டபத்தில் இடம்பெற்ற சிங்கள தமிழ் கலை ஒன்றுகூடலை சிஹல உறுமய ஃபாசிஸ்ட் கும்பல் குழப்பி கலைக்க எடுத்த முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டது. எதிர்த்துத் தாக்கி கலைக்கப்பட்டது. இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் கொண்ட நிகழ்வு மட்டுமன்றி அத்தகைய இனவாதச் செயலைக் கண்டித்து இன்று கண்டன எதிர்ப்புக்கூட்டம் அதே மண்டபத்தில் வெற்றிகரமாக நடைபெறுவதும் முக்கியமானதொன்றாகும்.

இவ்வாறு டிசெம்பர் 3ம் திகதி கொழும்பு புதிய நகரசபை மண்டபத்தில் தமிழ் சிங்கள கலை ஒன்றுகூடலுக்கு எதிராக நடாத்த முற்பட்ட இனவாதத் தாக்குதலைக் கண்டித்து இடம் பெற்ற கண்டன எதிர்ப்புக் கூட்டத்தில் புதிய ஜனநாயக கட்சியின் சார்பாக கலந்துகொண்டு உரையாற்றிய அதன் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி இ. தம்பையா கூறினார்.

ஹிரு அமைப்பினரும் இடதுசாரிக் கட்சிகளும் இணைந்து நடாத்திய இக்கூட்டத்திற்குப் பாராளுமன்ற உறுப்பினரான பௌத்த பிக்கு சமிந்த தேரர் தலைமை தாங்கினார். பௌத்த பிக்குகள் உட்பட பல்வேறு துறைகளையும் சேர்ந்த பெருந்தொகையான மக்கள் இக்கூட்டத்தில் இறுதிவரை கலந்து கொண்டனர். வாசுதேவ நாணயக்கார, இந்திக குணவர்த்தன, விக்கிரமபாகு கருணாரட்ண, மகிந்ததேவகே, பற்றிக் பெர்ணாண்டோ உட்பட திரைப்பட நெறியாளர்களான தர்மசிறி பண்டாரநாயக்கா, திஸ்ஸ அபய சேகரா உட்பட பலர் உரையாற்றினர்.

தோழர் தம்பையா மேலும் தனது உரையில் இந்நாட்டில் 1930களில் இருந்து இனவாதம் வளர்க்கப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இடதுசாரிக் கட்சிகளும் அதன் தலைவர்களும் விட்டுக்கொடுக்காது போராடி வந்துள்ளனர். மலையாளிகளுக்கு எதிராக ஏ.ஈ. குணசிங்கா இனவாதத்தைக் கக்கிய வேளையில் அதற்கு எதிராக இடதுசாரிகள் போராடினர். பின்பு பிரசாவுரிமை பறிக்கப்பட்டபோதும் தனிச் சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்ட போதும் அதற்கு எதிராகப் போராடினர். அன்று இதே மண்டபத்தில் இடம்பெற்ற இடதுசாரிகளின் கூட்டத்தை நோக்கி இனவாதிகள் கைக்குண்டு தாக்குதல் நடாத்தியதன் மூலம் ஒரு சிங்கள நண்பர் தனது வலக்கரத்தை இழக்க நேரிட்டது. பலர் படுகாயங்கள் அடைந்தனர். இந்நாட்டில் தொடர்ச்சியாகக் கட்டவிழ்த்து விடப்பட்ட இன வன்செயல்களின்போது தமிழ் மக்களுக்கு பாதுகாப்புக் கொடுத்து காடையர்களை எதிர்த்துத் தாக்கி நிற்பதிலும் இடதுசாரிகளே முன்னின்றனர். அவை மட்டுமன்றி வடக்கு தமிழ் இனவாத சக்திகள் சிங்கள மக்கள் மீது தாக்குதல் நடாத்த முற்பட்ட சந்தர்ப்பங்களில் அங்குள்ள எமது கட்சியினரும் ஏனைய இடதுசாரிகளும் முன்னணியில் நின்று பாதுகாப்பு வழங்கினர். உதாரணமாக 1977ல் யாழ் பல்கலைக்கழக சிங்கள மாணவர்கள் சிறு பாதிப்பும் அற்ற விதத்தில் இடதுசாரி சக்திகளால் பாதுகாத்து அனுப்பப்பட்டனர் என்பது இவ்வேளை நினைவுபடுத்த வேண்டியதொன்றாகும்.

எனவே இன்றுள்ள சூழலில் பேரினவாதத்தையும் அதன் ஃபாசிச வளர்ச்சியையும் தடுத்து நிறுத்தி சிங்கள தமிழ் முஸ்லீம் மலையக மக்கள் மத்தியில் ஐக்கியத்தையும் சரியான போராட்டப் பாதையையும் காட்ட வேண்டிய பொறுப்பு சகல இடதுசாரி ஜனநாயக சக்திகளிடமுமே உள்ளது. எமது புதிய ஜனநாயகக்கட்சி அதற்கான பங்களிப்பைத் தொடர்ந்தும் வழங்கிவரும் எனவும் கூறினார்.

●

# பிரசாவுரிமையைப் பெறுவது அவசியம் தேசிய இன அந்தஸ்துக்கு அது முக்கியம்.

மலையக மக்களில் பிரசாவுரிமை இன்றி இருந்த அனைத்து மக்களுக்கும் அதனை வழங்கும் சட்டம் அண்மையில் பாராளுமன்றத்தில் ஏகமானதாக நிறைவேறியது. 1948ம் ஆண்டு இதே இலங்கைப் பாராளுமன்றம் 10 லட்சம் மலையக மக்களுக்கு இழைத்த மாபெரும் அநீதியையும், துரோகத் தனத்தையும் மேற்படி சட்டத்தை நிறைவேற்றிக் கொண்டதன் மூலம் காலம் கடந்து வரலாற்றுப் பழியை துடைத்தெறிந் துள்ளது. மலையக மக்களுக்கு பிரசாவுரிமை வழங்க வேண்டுமென பல நிலைகளிலும் போராடி வந்த அனைத்து கட்சிகள் இயக்கங்கள், சமூக நிறுவனங்கள் தனிநபர்கள் அனைவரும் தமது கோரிக்கை வென்றெடுக்கப்பட்டமை பற்றி மன நிறைவு கொள்கின்றனர். எனவே நாடற்றவர் என்ற நிலையில் இருந்து வந்த அனைத்து மலையக மக்களும் தமது பிரசாவுரிமையைச் சட்டரீதியான நடைமுறைகளைப் பின்பற்றி பெற்றுக் கொள்வது அவசியம். இது வாக்குப் போடுவதற்கு மட்டுமன்றி இந்நாட்டின் தேசிய இன அந்தஸ்த்தை அடைவதற்கு மலையக மக்களுக்குரிய வாழ்வுரிமையை நிலைநாட்டுவதற்கே யாகும்.

●

## ஜே.வி.பி...

6ம் பக்க தொடர்ச்சி.

மேற்குலக நாடுகளுடன் மிக நெருக்கமாகி சகல தலைநகரங்களுக்கும் சென்று அரசாங்கத் தலைவர்களுடன் பல்வகை ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டும் தமது விசுவாசத்தை ரணில் வெளிக்காட்டிக் கொண்டார்.

இப்போது இன்றைய முதல்தர ஏகாதிபத்தியமான அமெரிக்காவிற்கு அரச பயணம் மேற்கொண்ட ரணில் விக்கிரமசிங்கா வெள்ளை மாளிகையின் எசமானர்களைக் கட்டித்தழுவி உடன்பாட்டைத் தெரிவித்தும் கொண்டார். இன்றைய உலகப் பயங்கரவாதியான ஜோர்ஷ். டபிள்யூ . புஷ்சையும் அவரது கையாட்களான ஆமிரேஜ், ராம்ஸ்பீல்ட் கொலின்பவல், கிறிஷ்ரினா ரொக்கா போன்றவர்களையும் ரணில் வெள்ளை மாளிகையில் மனம் குளிரச் சந்தித்து தரிசனம் பெற்று ஆசிர்வாதம் வாங்கிக் கொண்டார். இவற்றுக்கெல்லாம் அமைச்சர் மிலிந்த மொரகொட இணைப்பாளராக இருந்து செயற்பட்டு அமெரிக்க நலன்களை இலங்கையில் கட்டிக் காக்கும் முதல் தரப் பிரதிநிதியாகவும் இருந்து வருகின்றார்.

முற்று முழுதான அமெரிக்க சார்பும் அதன் வழிகாட்டலிலும் செயல்பட்டு வரும் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் இந்தியாவைப் பகைத்துக் கொள்ளாத ஒரு தந்திரோபாயத்தை நகர்த்தி வருகின்றது. முன்பு ஜே.ஆர். இந்திய ஆளும் வர்க்கத்துடன் முரண்பட்ட அனுபவத்தை பட்டறிவாகக் கொண்டே ரணில் இந்தியாவின் பிராந்திய மேலாதிக்க எண்ணங்களுக்கு இணங்கிப் போவதை குறிப்பிட்டளவு தூரத்திற்கு கடைப்பிடித்தும் வருகிறார். ஆனால் அவரது உள்ளார்ந்த விசுவாசம் வெள்ளை மாளிகை மீதே இருந்து வருகின்றது என்பது புதுடில்லியின் பிராந்திய மேலாதிக்க கொள்கை வகுப்பாளர்கள் அறியாத ஒன்றல்ல. அதன் காரணமாகவே ரணில் வெள்ளை மாளிகைத் தரிசனத்திற்காக சென்றிருந்த நேரம் பார்த்து சந்திரிகா அம்மையாரின் ஜனாதிபதி அதிகாரங்களைப் பயன்படுத்தி மூன்று அமைச்சர்களைப் பொறுப்பேற்க வைத்து பாராளுமன்றத்தை இடைநிறுத்தவும் செய்யப்பட்டது. இதில் இந்திய ஆலோசனை எதுவும் இல்லை என எந்தவொரு அரசியல் ஆய்வாளரும் அடித்துக் கூறுவாரேயானால் அத்தகையவர் அரசியல் சூனியம் மிக்கவராகவே இருக்க முடியும். ஏனெனில் ஜனாதிபதியின் மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்ட கையோடு இந்தியப் படைகள் இலங்கையை நோக்கி உசார் நிலையில் வைக்கப்பட்டமை தற்செயலான தொன்றல்ல.

அதேவேளை ரணில் தலைமையிலான அரசாங்கம் முற்று முழுதான அமெரிக்க ஏகாதிபத்திய சார்பு நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதையிட்டு தமிழர் தலைமைகளுக்கு எவ்வித கவலையும் கிடையாது. ஏனெனில் தமிழ்த் தலைமைகள் எப்பொழுதும் தமது யூ என். பியுடனான ஐக்கியத்திற்கும் கூடிக் குலாவலுக்கும் அமெரிக்க விசுவாசத்தை ஒரு பிரதான அளவுகோலாகக் கொண்டே செயற்பட்டு வந்துள்ளன. சேர் பொன் இராமநாதன் தொட்டு இன்றுவரை அவர் வழிவந்த தமிழ் மேட்டுக்குடித் தமிழ்த் தலைமைகள் எந்தவொரு ஏகாதி பத்தியத்திற்கும் எதிராக ஒரு சொல் தானும் உச்சரித்து நின்றது கிடையாது. இன்றும் அதே விசுவாசப் பாரம்பரியம் தொடரப்படுவதையே காண முடிகின்றது.

ஆதலால் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் அமெரிக்க சார்பு நிலைப்பாடு என்பது ஒட்டு மொத்தத்தில் இலங்கையையும் சகல மக்களையும் மீளமுடியாத நாசங்களுக்குள்ளேயே இழுத்துச் செல்லவே உதவக் கூடியதாகும். இந்த உண்மை பல தளங்களிலும் சகல இனமக்களாலும் உணரப்படாதவரை இலங்கைக்கு எவ்வித மீட்சியும் கிடைக்க மாட்டாது.

## தேசிய...

1ம் பக்க தொடர்ச்சி

அளவுகளிலும் ஒடுக்கு முறைகளின் உச்சங்களையே அனுபவிக்க நேரிடும். எனவே தான் தேசிய அரசாங்கத்தின் ஆபத்தை முன்னுணர்ந்து அதனை சகல மக்களும் எதிர்த்து நிராகரிக்க வேண்டும்.

உண்மையில் சந்திரிகா அம்மையாருக்கு நாட்டின் மீதும் மக்களின் மீதும் அக்கறை இருந்தால் ரணில் அரசாங்கத்துடன் தேசிய இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வைத் தேடி முன்வைக்க முன்வரல் வேண்டும். அதைவிடுத்து ஏதோ ஒரு விதத்தில் யுத்த நிறுத்த சூழலில் முன்னெடுக்கப்பட்டு வந்த பேச்சுவார்த்தையைக் குழப்பி இடைநிறுத்தியதன் மூலம் அதிகாரப் பசியின் உள்ளார்ந்தத்தையே வெளிப்படுத்தி நிற்கிறார். அதற்கு கைகொடுப்பது போன்று இந்தியா உதவிக்கரம் நீட்டி நிற்கிறது. அயலார் ஆலோசனையும் தயவும் எதுவரை என்பது மட்டுமன்றி அவர்களின் உள்நோக்கம் என்ன என்பது பற்றியும் தூரநோக்கில் அறியாது பட்டறிவு கொள்ளாது செயல்படுவது அறிவீலித்தனமும் முட்டாள்தனமும் ஆகும்.

அவ்வாறே ரணில் தலைமையிலான ஆட்சி மேற்குலக அமெரிக்க ஆலோசனைகளுக்கு ஏற்ப ஆடமுற்படுவதும் அடுத்த ஆபத்தாகி விடுகிறது. இவ்வழகிய இலங்கைத்தீவில் உலக மேலாதிக்க சக்திகளும் பிராந்திய மேலாதிக்க வாதிகளும் எதனை எதிர்பார்த்தார்களோ அவை அவர்களின் விருப்பத் திற்கு ஏற்ப நிறைவேறி வருகின்றன. அவர்களது போட்டியும் காய் நகர்த்தல் களும் நன்றாகவே இடம்பெற்று வருகின்றன. இதனை இலங்கையின் ஆட்சி அதிகாரத்தை இருநிலைப் பிடிகளில் வைத்திருக்கும் ஆளும் வர்க்க சக்திகள் உணர்வதாக இல்லை. உணரவும் மாட்டார்கள். ஏனெனில் அவர்கள் இந்நாட்டு ஏகப்பெரும் பான்மையான உழைக்கும் மக்களையோ அன்றி தேசிய இனங்களையோ பற்றிய அக்கறை அற்ற சுரண்டும் மேட்டுக்குடி வர்க்கப் பிரதிநிதிகளாகவே இருந்து வருகிறார்கள்.

உண்மையில் தேசிய அரசாங்கம் நல்லிணக்க அரசு என்பதோ அல்லது அவற்றுக்கான அடிப்படைகளைத் தேடும் இருதரப்பு குழுக்களின் தொடர் பேச்சு வார்த்தை என்பதோ அர்த்தமற்ற காலத்தைக் கடத்திச் செல்லும் செயலேயாகும். இது இன்று இரு தரப்பினருக்கும் தேவையானதும் கூட. ஏனெனில் காலம் கடத்தப்படுவது யூ. என். பிக்கு உடன்பாடானது. அடுத்த ஜனாதிபதி தேர்தல் வரை அது தேவைப்படுகிறது. ஜனாதிபதி நல்லிணக்கம் எனக் கூறிக் கொண்டே மறுபுறத்தில் ஜே.வி.பி.யுடன் கூட்டு அமைக்க நிற்கிறார். அதாவது இது அல்லது அது எதுவாகிலும் அடுத்த ஆட்சி அதிகாரத்தை இருநிலையிலும் பெறுவது அவரது இலக்காக இருக்கிறது.

தேசிய இனப்பிரச்சினையின் சாராம்சத்தையும் அது யுத்தமாகி விளைவித்த கோரங்களையும் ஒரு முறை நிதானமாகச் சிந்தித்து மக்கள், நாடு எதிர்காலம் சார்பாகச் செயல்பட முன் வந்தால் ஜனாதிபதி சந்திரிகாவிற்கும் பிரதமர் ரணிலுக்கும் முன்னால் ஒரு பாரிய கடமை இருக்கிறது. அது புலிகள் இயக்கம் முன்வைத்த வடக்கு கிழக்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புப் பற்றிய யோசனைகளைப் புறம் தள்ளாது பேச்சுவார்த்தைக்கு எடுத்துக் கொள்ள முன் வரவேண்டும். அதனைப் பேசும் போது இரு தரப்பானது மூன்று தரப்பாகினாலும் அதனால் இழப்பு எதுவும் ஏற்பட்டு விடாது. எனவே இடை நிறுத்தப்பட்ட பேச்சுவார்த்தையை தற்காலிகமாக விலகி நிற்கும் நோர்வேயின் அனுசரணையுடன் முன்னெடுக்க முன்வரல் வேண்டும். பேச்சுவார்த்தையில் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கு தீர்வு காண்பது இன்றைய அவசியத் தேவையாகும். இதில் குழப்பத்திற்கும் நிராகரிப்புக்கும் இடமின்றிப் புரிந்துணர்வுடன் விடயங்கள் முன்னெடுக்கப்படல் வேண்டும். இதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் நேர்மையாகவும் இதய சுத்தியுடனும் இணங்குவார்களா? என்பது ஆழ்ந்து சிந்திக்க வேண்டியதொன்றாகும். இல்லாதுவிடின் மீண்டும் யுத்தம், இரத்தம், உயிர் உடமை அழிவுகள் மேலோங்கி காய்ந்து உலர்ந்து போன இரத்தத்தின் மீது மறுபடியும் இரத்தம் உறையும். அது சாதாரண தமிழ் முஸ்லீம் சிங்கள உழைக்கும் மக்களின் இரத்தமாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

## கிழக்கு...

1ம் பக்க தொடர்ச்சி

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களுக்கு எதிராகவும் முஸ்லிம்களால் தமிழ் மக்களுக்கு எதிராகவும் இனவன்முறைகள் மேற்கொள்ளப்படுவதாக செய்யப்படுகின்ற அறிக்கைகள் ஆரோக்கியமானவை அல்ல. முஸ்லிம் தமிழ் உறவில் பாரிய விரிசலை ஏற்படுத்திக் கொண்டே போகிறது. அதனால் சமாதான முயற்சிகளுக்கு பாதிப்பு ஏற்படுவதுடன் பேரினவாதிகள் பயனடைந்து விடுகின்றனர். இந்நிலையில் தற்காலிகமாக தமிழ் மக்களுக்கு எதிராக பேரினவாதிகளின் விருப்பங்கள் நிறைவேற்றிக் கொள்ளப்பட்டாலும் நீண்ட காலத்தில் முஸ்லிம் மக்களுக்கு எதிராகப் பாரிய பேரினவாத ஒடுக்கலுக்கு அடித்தளமிடப்படுவதை மறந்து விடக்கூடாது.

முஸ்லிம் மக்கள் மீதான தாக்குதல்களுக்கு விடுதலைப் புலிகளே காரணமென்று பொதுவான குற்றச் சாட்டுகள் சுமத்தப்படுவதும் முஸ்லிம் தலைவர்கள் பேரினவாதத்திற்கு துணைபோவது தமிழ்மக்களின் அபிலாஷைகளுக்கு எதிராக இருப்பதாக குற்றஞ் சுமத்தப்படுவதும் புதியனவல்ல. இக்குற்றச் சாட்டுகளுடன் முஸ்லிம் மக்கள் தாக்கப்படுவதையும், முஸ்லிம் தலைவர்கள் துவேசமான பிரசாரங்களை மேற்கொள்வதையும் நியாயப்படுத்த முடியாது. அவ்வாறே முஸ்லீம் துவேஷத்தை தமிழர் தலைமைகள் கக்குவதும் ஏற்றுக் கொள்ள முடியாததொன்றாகும்.

விரிசலாகியுள்ள தமிழ் - முஸ்லிம் உறவை கட்டி வளர்க்க பல முயற்சிகள் அவசியம். அதற்கு நீண்ட காலமெடுக்கலாம். ஆனால் அதற்கு கிழக்கு மாகாண தாக்குதல்களுக்கு யார் காரணம் என்ற மர்மம் நீடிக்க விடக்கூடாது அம் மர்மம் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

தாக்குதல்கள் நடத்துபவர்களையும் மக்களை தூண்டி விடுபவர்களையும் நிராகரித்துவிட்டு அம்மர்மத்தை கண்டறியும் முயற்சிகளில் கிழக்கில் வாழும் முஸ்லிம்களும், தமிழர்களும் ஈடுபடுவது தவிர்க்க முடியாததாகி விட்டது. இரண்டு சமூகத்தினரும் தனித்தனியாகவும் கூட்டாகவும் முயற்சித்தால் உண்மை அம்பலத்திற்கு வரும். 'அரசியல்வாதிகள்' அடங்கிப் போவார்கள். அநியாயமான உயிரிழப்புகள் தவிர்க்கப்படும். அப்பாவி முஸ்லீம் தமிழ் மக்களின் உயிரழிவில் அரசியல் நடாத்துவதும் இல்லாது போகும்.

வெளியிடுபவர் : இ. தம்பையா, இல. 47, 3ம் மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு: கொம்பிரின்ட், 334A, K. சிறில் சி. பெரேரா மாவத்தை, கொழும்பு 13.

படிப்பகம்